CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

VIII

யஜுர்வேத
முதல் அஷ்டகம்

(இரண்டாம் பதிப்பு)

ஸ்ரீ. அ. சுப்பராமன்

"மஹரிஷி கார்டன்"

நெ. 18A/9, ஐந்தாவது க்ராஸ் தெரு,

சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,

சென்னை - 600004

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யஜுர்வேத முதல் அஷ்டகம்

(இரண்டாம் பதிப்பு)

YAJURVEDA 1ST ASHTAKA

உரையாசிரியர் :
வேத லக்ஷணக்ஞ வேத வித்யாலங்கார பாஷ்ய ரத்ன
மணக்கால் ப்ரம்மஸ்ரீ
L. M. ஸுப்ரமண்ய கனபாடிகள்

ஸ்ரீ. அ. சுப்பராமன்
"மஹரிஷி கார்டன்"
நெ. 18A/9, ஐந்தாவது கிராஸ் தெரு,
சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,
சென்னை - 600004

2004

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாம் பதிப்பு
ஜூன் 2004
100 பிரதிகள்

விலை : இலவசம்

அச்சிட்டோர்:
ப்ரபு எண்டர்ப்ரைசஸ்,
ஃபோன் : 25544755 (044) (P.P)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகவுரை

ஸம்ஹிதா, ப்ராம்மணம், காடகம், ஆரண்யகம் என்று நான்கு பாகங்கள் கிருஷ்ண யஜுர்வேதத்தில் இருக்கின்றன. ஸம்ஹிதா பாகத்தில் 50 பதங்கள் கொண்டது ஒரு 'பஞ்சாசத்' என்று கூறப்படுகின்றன. இப்பொழுது அது மறுவி, பஞ்சாதி என்கிறார்கள். பல பஞ்சாதிகள் கொண்டது ஒரு அநுவாகம். பல அநுவாகங்கள் கொண்டது ஒரு ப்ரச்னம். பல ப்ரச்னங்கள் கொண்டது ஒரு காண்டம்.

ப்ரம்மணம், ஆரண்யகம், காடகம் இந்த பாகங்களில் 10 வாக்யங்கள் கொண்டது ஒரு தசினீ என்பார்கள். மற்ற பாகங்களிலும் பஞ்சாதி என்றே சொல்லுகிறார்கள். அதை தசினீ என்று மாற்றிக் கொள்ளலாம். பல தசனீ கொண்டது, ஒரு அநுவாகம். பல அநுவாகங்கள் கொண்டது ஒரு ப்ரச்னம். 8 ப்ரச்னங்கள் கொண்டது ஒரு அஷ்டகம். 1வது அஷ்டகத்திலும், 2வது அஷ்டகத்திலும் 8 ப்ரச்னங்கள் இருக்கின்றன. 3வது அஷ்டகத்தில் 9 ப்ரச்னங்கள் உள்ளன. ஆனாலும் 9ல் 8 அடங்கியிருப்பதால் அதையும் அஷ்டகம் என்றே சொல்லுகிறோம். இப்பொழுது பழக்கத்தில் க்ருஷ்ண யஜுர்வேதத்தில் மைத்ராணீய சாகா, தைத்ரீய சாகாதான் உள்ளது. 1000 சாகைகள் இருந்ததாக கூறப்படுகிறது. மீதி சாகைகளுக்கு சிஷ்ய பரம்பரை இல்லாமல் போய் விட்டது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அட்டவணை

		பக்கம்
முகவுரை		iii
ப்ரச்னம்	1	1
,,	2	24
,,	3	35
,,	4	56
,,	5	93
,,	6	132
,,	7	157
,,	8	178

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யஜுர்வேத முதல் அஷ்டகம்

(முதல் அஷ்டகத்தில் முதல் ப்ரச்னத்தில் 10 அனுவாகங்கள் உள்ளன.)

முதல் ப்ரச்னம்

அனுவாகம்—1

ब्रह्मसंधत्तं तन्मे जिन्वतम्

இந்த அனுவாகத்தில் சுக்ரக்ரஹம் என்ற மரப்பாத்திரத்திலும், மந்திக்ரஹம் என்ற மரப் பாத்திரத்திலும் ஸோம ரஸத்தை க்ரஹித்து ஹோமம் செய்ய வேண்டும் என்று சொல்லப் பட்டுள்ளது.

அத்வர்யுவும், ப்ரதிப்ரஸ்தாதாவும் இந்த ஹோமத்தை செய்கிறார்கள். 1வது காண்டம் 4வது ப்ரச்னத்தில் சொல்லப்பட்டிருக்கவேண்டிய மந்த்ரங்கள் இங்கு ப்ராம்மணமாக ஆரம்பத்தில் சொல்லப்படுகின்றன. இவ்விதம் சொல்லுவதற்கு ப்ரயோஜனமும் உள்ளது. ப்ராம்மண க்ரந்த ஆரம்பத்தில் மங்களா சரணம் செய்யவேணும் அல்லவா? அது செய்யப்பட்டதாக ஆகிறது. அது எப்படி? ब्रह्म என்ற சப்தம் ஆரம்பத்தில் இருக்கிறது. ப்ரம்ம என்று பரமாத்மாவுக்கும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதத்திற்கும், வேதம் படித்த ப்ராம்மணனுக்கும் பெயர். இந்த மூன்றுக்கும் ஸ்மரணம் ஏற்படுவதால் மங்களம் செய்யப்பட்டதாக ஆகிறது. இங்கு 2வது வாக்யத்தில் क्षत्र என்ற பதம் இருப்பதால் முதல் வாக்யத்தில் உள்ள ब्रह्म என்ற பதம் ப்ராம்மண ஜாதியை குறிக்கிறது. ஆனாலும் வியாபாரத்திற்காக தயிரோ, பாலோ கொண்டு போகிறார்கள். அதை ப்ரயாணம் செய்பவன் பார்த்தால், ப்ரயாணத்திற்கு சகுனம் ஆவது போல் இங்கு ப்ராம்மண ஜாதியை குறிப்பதாக உள்ள ப்ரம்ம சப்தத்தை கேட்டதும் பரமாத்மாவுக்கும், வேதத்திற்கும் ஸ்மரணம் வருவதால் மங்களா-சரணம் செய்யப்பட்டதாகவே ஆகிறது. [லோகத்தில் இப்பொழுதும் சொல்லுகிறார்கள். ப்ரயாணகாலத்தில் தயிர் அல்லது பால் எதிரில் வந்தால் நல்ல சகுனம் என்றும், காரியஸித்தி ஆகும் என்றும் சொல்லுகிறார்கள்.] இந்த அநுவாகத்தில் சொல்லப்பட்ட சுக்ரக்ரஹ ஹோமம், மந்திக்ரஹ ஹோமம் இரண்டும் ஸோம யாகத்தில் செய்ய வேண்டியவை.

அநுவாகம்—2

कृत्तिकास्वग्निमादधीत ।

க்ருத்திகா நக்ஷத்திரத்திற்கு அக்னி தேவதை. ‘‘आग्नेयोवैब्राह्मणः’’ என்று வேதத்தில் சொல்லியிருப்பதால் ப்ராம்மணனுக்கு அபிமானி தேவதை அக்னி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னிதேவதாகமான க்ருத்திகா நக்ஷத்ரத்தில், அக்னி தேவதாகனான ப்ராம்மணன், அக்னியை ஆதானம் செய்து கொள்ளுவதால் முகத்தில் ப்ரம்ம தேஜஸ் உண்டாகிறது. வேதாத்யயன ஸம்பன்னனாக ஆகிறான் என்பது தாத்பர்யம்.

ஜோதிஷ சாஸ்திரத்தில் 1வது நக்ஷத்ரம் கிருத்திகை என்றும், பரணி நக்ஷத்ரம் கடைசி நக்ஷத்ரம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த க்ரமத்தில்தான் தசாபுக்தி கணக்கிடப்படுகிறது. ஆதலால் முதல் நக்ஷத்ரமான க்ருத்திகா நக்ஷத்ரத்தில் ஆதானம் செய்து கொண்டால், முதல் தரமாக, முக்யமாக, ப்ரதானமாக ஆகிறான்.

மேல் சொன்னபடி க்ருத்திகா நக்ஷத்திரத்திற்கு இரண்டு குணம் இருந்தாலும் ஒரு தோஷம் இருக்கிறது என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். அதாவது அக்னி தேவதாகமான கிருத்திகா நக்ஷத்திரத்தில் ஆதானம் செய்து கொண்டால், அந்த அக்னி நம் வீட்டை எரித்து விடக்கூடும். ஆதலால் கிருத்திகை நக்ஷத்திரத்தில் ஆதானம் செய்யக்கூடாது என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். [ஆதலால்தான் இப்பொழுதும் லோகத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தில் நல்ல காரியம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள்.]

அக்னி ஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், பசுபந்தம், ஸோமயாகம் இவைகளை த்ரேதாக்னியில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(மூன்று அக்னியில்) செய்யவேண்டும் 1. கார்ஹபத்யம், 2. ஆஹவநீயம், 3. தக்ஷிணாக்னி. இந்த 3 அக்னியும் ஆதானம் என்ற கர்மாவினால் ஸித்திக்கின்றன. ஆதலால் 2வது அநுவாகம் முதல் ஆதானம் என்ற கர்ம சொல்லப்படுகிறது. முதலில் ஆதானம் என்ற கர்ம ஆரம்பிக்க நக்ஷத்ரங்கள் சொல்லப்படுகின்றன.

1. ப்ரம்மவர்சஸ்ஸை விரும்புபவன், ப்ராதான்யத்தை விரும்புபவன் க்ருத்திகா நக்ஷத்ரத்தில்

2. ஸம்ருத்தியை (ஸந்ததிகளின் மேன்மை) விரும்புவன் ரோஹிணி நக்ஷத்திரத்தில்

3. முன்பு தனவந்தனாக இருந்து பிறகு தரித்ரனாக ஆனவன் மறுபடியும் தனிகனாக ஆவதற்கு விருப்பமுள்ளவன் புனர்வஸு நக்ஷத்திரத்தில்.

4. ஜனங்கள் தானாகவே வந்து தனக்கு ஐச்வர்யத்தை கொடுக்கவேணும் என்று விரும்புகிறவன், பூர்வ பல்குனி நக்ஷத்திரத்தில்

5. பாக்யவானாக இருக்க விருப்பமுள்ளவன் உத்ரபல்குனி நக்ஷத்திரத்தில்

6. சத்ரு நாசத்தை விரும்புபவன், சித்ரா நக்ஷத்திரத்திலும் ஆரம்பிக்க வேண்டும்.

7. எப்பொழுது ஸோமயாகம் செய்ய வேணும் என்ற எண்ணம் வருகிறதோ அப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொழுதே ஆரம்பிக்கலாம். நக்ஷத்ர விசேஷங்களை பரிசீலனம் செய்யவேண்டாம்.

ப்ராம்மணன் வஸந்தருதுவிலும், க்ஷத்ரியன் க்ரீஷ்மருதுவிலும், வைச்யன் சரத்ருதுவிலும் ஆதானம் செய்ய வேண்டும்.

ஆதானம் என்பது ப்ராம்மணனுக்கு விதிக்கப்பட்ட ஒரு கர்ம. இந்த கர்மாவை செய்வதின் மூலம் 3 அக்னிகள் (கார்ஹபத்யம், ஆஹவணீயம், தக்ஷிணாக்னி) ஸித்திக்கின்றன. இந்த ஆதானம் செய்த பிறகுதான் ஆஹிதாக்னி என்ற பெயர் ஏற்படுகிறது. அக்னி ஹோத்ரம் போன்ற 3 அக்னிகளில் செய்யவேண்டிய கர்மாக்கள் செய்ய தகுதி கிடைக்கிறது. அன்று முதல் அக்னி ஹோத்ரம் உயிருள்ளவரை செய்ய வேண்டும் என்று வேதம் கூறுகிறது. இது ஒவ்வொரு ப்ராம்மணனுக்கும் தவிர்க்க முடியாத கர்ம என்பதை न अनाहिताग्निः म्रियेत என்ற விதிவாக்யம் உறுதிப்படுகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் ஆதானம் செய்து கொண்டு அக்னி ஹோத்ரம் செய்வது மிகவும் சிறந்தது இப்படிப்பட்ட சிறந்த எல்லோருக்கும் அவசியமான ஆதான கர்ம முதல் ப்ரச்னத்தில் கூறப்படுகிறது. ஆஹிதாக்னியாக ஆகி வாஜபேயாதி முதலிய பெரிய யாகங்களை செய்வதற்கு அடிப்படையான கர்ம ஆதானம். ஆகையால்தான், வீட்டிற்கு அஸ்திவாரம் அடிப்படையாக இருப்பது போல், யாகாதி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்கு அடிப்படையாக இருக்கும் ஆதான கர்ம முதல் அஷ்டகத்தில் முதல் ப்ரச்னத்தில் சொல்லப் பட்டுள்ளது. மூன்று வித ஆதான கர்மாவை சொல்லுவதுண்டு.

1. ஆதானம் செய்து கொண்டு அன்று முதல் தினமும் அக்னிஹோத்ரம் செய்வது, இதற்கு ஹோம பூர்வக ஆதானம் என்று பெயர்.

2. ஆதான கர்மாவை செய்தவுடன் தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளை முதலில் ஆரம்பிக்க வேண்டும். அதன் பிறகு காலை, மாலைகளில் அக்னிஹோத்ரம் செய்யவேண்டும். இதற்கு இஷ்டி பூர்வக ஆதானம் என்று பெயர்.

3. எப்பொழுது ஸோமயாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வருகிறதோ அப் பொழுதே ஆரம்பிக்கலாம். நக்ஷத்ரங்களை பரி சீலனம் செய்யவேண்டாம். இதற்கு ஸோம பூர்வக ஆதானம் என்று பெயர்.

அநுவாகம்—3

उद्धन्ति

புத்து மண் ஆதான வேதியில் போட வேண் டும். பூமியின் காதுகளாக புத்துகள் இருக்கின் றன என்று வேதம் கூறுகிறது.

श्रोत्रँह्येतत्पृथिव्याः यद्वल्मीकः अबधिरो भवति ।
य एवं वेद ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூமியின் காது கரையான் புத்து என்று அறிந்தவனுக்கு காது செவிடு ஆகாது என்று பலன் சொல்லப்பட்டுள்ளது.

புரச மரத்தின் தூளை ஆதான வேதியில் போடவேண்டும். தேவர்கள் புரச மரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு ப்ரம்ம விசாரம் செய்தார்கள். அந்த விஷயத்தை புரச மரம் காது கொடுத்து கேட்டது. ஆதலால் மற்ற மரங்களுக்கு இல்லாத பெருமை புரசமரத்திற்கு கிடைத்தது. பரம்பொருளைப் பற்றிய விஷயத்தை காதால் கேட்டதால் புரச மரத்திற்கு ஸுச்ரவா: என்று பெயர். அதாவது நல்ல காது படைத்தவன் என்று பொருள். எதை காதால் கேட்க வேண்டுமோ அதை அல்லவா கேட்டுள்ளது. ஆதலால் இந்த மரத்தின் அம்சத்தை யக்ஞத்தில் சேர்ப்பதால் ப்ரம்மவர்சஸ் உண்டாகும்.

[உபநயனமான குமாரனுக்கு ப்ரம்மவர்சஸ் உண்டாகவும், கேட்க வேண்டிய விஷயத்தை கேட்டு நல்ல காது படைத்தவனாக ஆவதற்கும் புரச மரத்தின் குச்சி (दण्ड) கொடுக்கப்படுகிறது]. மற்ற வைதிக காரியங்களுக்கும் புரசு சமித்து, புரசு இலைகள் உபயோகப் படுத்துகிறார்கள்.

ஆதானம் செய்வதற்கு ஸௌகரியமாக பூமியை கொத்திவிட்டு ஸமப்படுத்தி, அந்த இடத்தில் 7 விதமான மண்ணையும் 7 விதமான மரத்தூள்களையும் போடவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஆற்று மணல் 2. ஊஷர மண் 3. எலி வளையில் உள்ள மண் 4. புத்து மண் 5. குளத்தின் அடியில் உள்ள வண்டல் மண் 6. பன்றியினால் தோண்டப்பட்ட மண் 7. தங்கம்—தங்கம் பூமியில் கிடைப்பதால் அதுவும் பூமியை சேர்ந்ததாக கருதப்படுகிறது.

மரத்தூள்—1. அரச மரத்தூள் 2. அத்தி மரத்தூள் 3. புரச மரத்தூள் 4. வஹ்னி மரத்தூள் 5. விகங்கத மரத்தூள் 6 இடி விழுந்து பட்டுப்போன மரத்தூள் 7. சித்திரிய அரச மரத்தின் தூள் (அதாவது அதோ அந்த அரச மரம் இருக்கிறதே அதுதான் அந்த கிராமம் அல்லது அதுதான் குளம் என்று அடையாளமாக அமைந்த அரச மரத்தின் தூள்) இவைகளை ஆதானம் செய்யும் இடத்தில் போடவேண்டும். ஆற்று மணலை அக்னி ஆதானம் செய்யுமிடத்தில் போட வேண்டும். ஆற்று மணலில் வைச்வாநர அக்னி ஸாந்நித்யம் இருப்பதால் அந்த மணலைப் போடுவதால் வைச்வாநர அக்னி ஸித்தி உண்டாகிறது.

உப்பு மண்ணை ஆதானம் செய்யும் இடத்தில் போடவேண்டும். ஊஷர பூமி என்பது உப்பு தண்ணீர் உள்ள உப்பு மண். அங்கு விளையும் புல்கள் மாடுகளுக்கு ருசியாக இருக்கும். அதை சாப்பிட்டுவிட்டு பசுக்கள் புஷ்டியாகவும் ப்ரஜா ஸம்ருத்தியுடனும் இருக்கும். வாஸனையால் அந்த இடத்தை அறிந்துகொண்டு பசுக்கள் அந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இடத்தை அடையும். அதனுல் அந்த இடத்திற்கு ஸம்ஞானம் என்று பெயர். [லோகத்திலும் பசுக்களுக்கு தண்ணீர் வைக்கும்போது உப்பு போடுவார்கள். அப்பொழுது நன்ருக ருசிக்கும்]. ஆதான இடத்தில் உப்பு மண் போட்டால் பசு ஸம்ருத்தி ஏற்படும்.

மேலும் ச்ருஷ்டி காலத்தில் பூமியும், ஸ்வர்க்க லோகமும் இடைவெளி இல்லாமல் சேர்ந்து இருந்தது. பகவான் இரண்டையும் பிரிக்கும்போது ஸ்நேகபாவத்தால் பூமி தன்னுடைய அம்சமான கருப்பு வர்ணத்தை ஸ்வர்க்க லோகத்திற்கு ஞாபகார்த்தமாக கொடுத்தது. அந்த கருப்பு வர்ணம் சந்திரனிடத்தில் களங்கம் என்னும் கருப்பு வர்ணமாக உள்ளது. ஸ்வர்க்க லோகமும் தன் ஞாபகார்த்தமாக தன்னுடைய அம்சமான ஊஷர பாகத்தை பூமிக்கு கொடுத்தது. இந்த வ்ருத்தாந்தத்தை ஸ்மரித்தால் பூமி அம்சம், ஸ்வர்க அம்சம் இரண்டிலும் ஆதானம் செய்த பலன் கிடைக்கும்.

அக்னி பகவான் ஏதோ காரணத்தால் தேவதைகளிடமிருந்து பிரிந்து சென்று எலி ரூபம் எடுத்துக் கொண்டு, பூமியில் வளை தோண்டி அதில் வாஸம் செய்தார். வளை செய்யும்போது எலியால் தள்ளப்பட்ட மண்ணுக்கு ஆகு கரீஷம் என்று பெயர். அதை ஆதான இடத்தில் போடுவதால் அக்னியினுடைய அம்சத்தை, தேஜஸ்ஸை சேகரித்ததாக ஆகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கரையான் புற்று என்பது பூமியின் ஸாராம்ச மான மண். இதை கறையான் பூமிக்குள்ளிருந்து மேலே கொண்டு வருகிறது. அதை ஆதான இடத்தில் போடுவதால் பூமியின் ஸாராம்ஸத்தை சேகரித்ததாக ஆகிறது. மேலும் கரையான் புற்று என்பது பூமியின் காது என்று சொல்லப்பட்டுள்ளது. இதை தெரிந்து கொள்பவர்களுக்கு காது செவிடு ஆகாது.

வெயில் காலத்தில் குளத்து நீர் வற்றிவிடும். அங்கு குளத்து மண் வண்டலாகவும், பொருக்காகவும் இருக்கும். அதற்கு ஸூதம் (ஸூதம்) என்று பெயர். ப்ரம்மா இந்த மண்ணை வயலில் போட்டு (உரமாக) அன்ன ஸம்ருத்தியை அடைந்தார். அதுபோல் ஆதான இடத்தில் குளத்துப் பொருக்கு (ஸூதம்) போடுவதால் அன்ன ஸம்ருத்தி உண்டாகும்.

(வராஹ விஹதம்) பன்றியால் தோண்டப் பட்ட மண்ணை ஆதான இடத்தில் போட வேண்டும். ''சர்க்கரா'' என்று சிறு கற்களையும் (சுக்காங்கற்கள்) போட வேண்டும். ஸ்ருஷ்டி காலத்தில் எங்கு பார்த்தாலும் ஜலமாக இருந்தது. ஜனங்கள் வஸிப்பதற்கு பூமி இல்லை. ஒரு தாமரை இலை மிதந்து கொண்டு இருந்தது. ப்ரம்மா ஆலோசித்தார். இந்த தாமரை இலை தண்டுக்கு ஆதாரமாக அடியில் ஏதோ இருக்க வேண்டும் என்று எண்ணி பன்றி உருவமெடுத்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஜலத்தினுள் பிரவேசித்து அங்கிருந்து தண்டுக்கு ஆதாரமான மண்ணை எடுத்து மேலே வந்து தாமரை இலையில் போட்டு பரப்பினார். வாயுவை ஸ்ருஷ்டித்து அந்த மண்ணை உலர வைத்து, சிறு கற்களை போட்டு கெட்டி படுத்தினார். அதுதான் இப்பொழுது நாம் வஸிக்கும் பூமி. அதை ஸ்மரித்துக் கொண்டுதான் ஆதான இடத்தில் பன்றி தோன்றிய மண்ணை போட வேண்டும்.

ஜல தேவதைகளும் அக்னியும் கூடும்பொழுது, அக்னியின் தேஜஸ் கீழே விழுந்து ஸ்வர்ணமாக ஆனது. ஆதலால் ஸ்வர்ணத்தை ஆதான இடத்தில் போடுவதால் அக்னியின் தேஜஸ்ஸை போட்டதாக ஆகிறது.

ஏழு வானஸ்பத்ய ஸம்பாரங்களின் விருத்தாந்தங்கள் :—

1. அக்னி பகவான் ஏதோ காரணத்தால் தேவதைகளிடமிருந்து பிரிந்து வந்து, குதிரை ரூபம் எடுத்துக் கொண்டு, அரச மரத்தில் மறைந்து இருந்தார். ஆதலால் "அச்வத்தம்" என்ற பெயர் அரச மரத்திற்கு வந்தது. அரச மரத்துளை ஆதான மரத்தில் போடுவதால் அக்னியின் தேஜஸ்ஸை சேகரித்ததாக ஆகிறது.

2. தேவதைகள் ஒரு இடத்தில் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு, தங்களுடைய அன்ன ரஸத்தை பிரித்து பங்கு போட்டுக் கொண்டார்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள். அப்பொழுது கீழே சிந்திய அன்ன ரஸத்தி லிருந்து அத்தி மரம் உண்டானது. அத்தி மரத் தூளை ஆதான இடத்தில் போடுவதால் அன்ன ஸம்ருத்தி உண்டாகிறது.

3. ஸ்வர்க லோகத்தில் ஸோமலதை இருந் தது. அதை காயத்ரி தேவி எடுத்து வரும்பொ ழுது ஸோமலதையின் இலை பூமியில் விழுந்தது. அந்த இடத்தில் புரச மரம் உண்டானது. பகவத் ஸங்கல்பம் இருந்தால் இலையில் இருந்தே மரம் உண்டாகும். அவ்விதம் உண்டான புரச மரத் தின் அடியில் உட்கார்ந்து கொண்டு தேவர்கள் ப்ரம்ம விசாரம் செய்தார்கள். அதை புரசமரம் கேட்டுக்கொண்டு இருந்ததால் புரச மரத்திற்கு "ஸுச்ரவா:" என்று பெயர் வந்தது. ஸுச்ரவா என்றால் நல்ல காது படைத்தவன் என்று பொருள். புரசு நல்ல விஷயமான ப்ரம்ம விசா ரத்தை கேட்டதால் அந்த பெயர் புரச மரத்தூளை ஆதான இடத்தில் போடுவதால் ப்ரம்மவர்சஸ் உண்டாகும்.

4. ப்ரம்மா அக்னியை ஸ்ருஷ்டி செய்து விட்டு அந்த அக்னி நம்மை அழித்து விடுமே என்று பயந்து சமீ வ்ருக்ஷ (வஹ்னி மரம் விற கால் சமனம் செய்தார் சமனம் செய்ததால் சமீ என்று வஹ்னி மரத்திற்கு பெயர் வந்தது. வஹ்னி மரத்தூளை ஆதான இடத்தில் போடுவ தால் அக்னியினால் பாதை ஏற்படாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

5. அக்னியின் தேஜஸ் ஒரு ஸமயம் விகங்கத விருக்ஷத்தை அடைந்தது. விகங்கத விருக்ஷ தூளை போடுவதால் வஹ்னியின் ப்ரகாசத்தை அடைகிறான்.

6. மருத் தேவதைகளுக்கும் அக்னிக்கும் விரோதம் ஏற்பட்டபொழுது மருத் தேவதைகள் அக்னியை ஜலத்தினால் வலுவிழக்கச் செய்து அக்னியின் ஹ்ருதயத்தில் அடித்தார்கள். அந்த அடிதான் இடியாக ஆகியது. ஆதலால் அக்னியின் ஹ்ருதயத்தை மறுபடியும் அடைவதற்கு இடி தாக்கிய மரத்தூளை ஆதான இடத்தில் போட வேண்டும்.

7. ஊர் எல்லையில் ஊருக்கு அடையாளமாக உள்ள அரசு, ஆல் முதலான வ்ருக்ஷங்களுக்கு சித்ரியம் என்று பெயர். அந்த வ்ருக்ஷங்களை ஆதான இடத்தில் போடுவதால் பலவித பலன்கள் கிடைக்கும்.

அநுவாகம்—4

द्वादशसु विक्रामेष्वग्निमादधीत ।

இங்கு அக்னியின் ஆதானம் சொல்லப்படுகிறது.

கார்ஹபத்ய அக்னி ஸ்தானத்திலிருந்து 12 அடி கிழக்கு நோக்கி சென்று அங்கு ஆஹவனீயாக்னி ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். 12 அடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களை காலடியால் அளந்து செய்யலாம். அல்லது கண்களால் அநுமானமாக இந்த இடம் 12 அடி இருக்கும் என்று தீர்மானித்து அங்கு ஆஹவனீயாக்னி ப்ரதிஷ்டை செய்யலாம். இந்த இரண்டு பக்ஷங்களில் கண்களால் 12 அடி அளவு இருக்கும் என்று தீர்மானித்து செய்வது உத்தமம். [ஏனென்றால்- கண்ணுக்கு ஸத்யம் என்று பெயர். கண் எதிரில் உள்ள பொருளை அப்படியே உள்ளது உள்ளபடியே பார்க்கும். வாக்கு பொய் கூறலாம். மனது பொய்யை நினைக்கலாம். காது பொய்யை கேட்கலாம். ஆனால் கண் எதிரில் உள்ள பொருளை அப்படியே உள்ளபடியே பார்க்கும். மாறுபட்டு வேறு பொருளாக காண்பிக்காது. ஒரு மனிதன் நம்மிடம் வந்து ஒரு விஷயத்தை கூறிவிட்டு, இந்த விஷயத்தை மற்றொருவன் சொல்லக் கேட்டேன் என்கிறான். அதை நாம் உண்மையென்று ஏற்றுக்கொள்வதில்லை. மற்றொருவன் நம்மிடம் வந்து ஒரு விஷயத்தைச் சொல்லி, இந்த விஷயத்தை நான் கண்ணால் பார்த்தேன் என்கிறான். அதை நாம் உண்மை என்று நம்புகிறோம். ஆதலால் கண்ணால் பார்த்த விஷயம் ஸத்யம்]. ஆதலால் ஸத்யமான கண்ணால் பார்த்து அளக்கப்பட்ட 12 அடி தேசம் ஸத்யம். அந்த ஸத்யமான தேசத்தில் ஆதானம் செய்து கொண்ட யஜமானன் ஸத்யத்தையே பேச வேண்டும் என்று வேதம் கூறுகிறது. [ஒரு க்ரஹஸ்தனுடைய வீட்டில் ஒரு ப்ராம்மணன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்டினியாக தங்கி இருப்பதும் பொய்யிக்கு ஸமானம். இந்த வீட்டில் இருக்கும் யஜமானன் தார்மீகன். நமக்கு ஆகாரம் அளிப்பான் என்று தீர்மானித்து வருகிறுன். அவனுடைய எண்ணம் நிறைவேருமல் நாம் நடப்பது பொய்யிக்கு ஸமானமே ஆதலால் நம் வீட்டிற்கு வந்த ப்ராம்மணனுக்கு போஜனம் செய்து வைக்க வேண்டும்].

नास्य ब्राह्मणोऽनाश्नात् गृहे वसेत्

என்று வேதம் கூறுகிறது.

அசுரர்களின் ஆதானம்

இடா என்ற தேவதை கோ ரூபம் எடுத்துக் கொண்டு அசுரர்கள் செய்யும் ஆதான கர்மாவை பார்க்கச் சென்றது. அசுரர்கள் முதலில் கிழக்கு திக்கில் ஆஹவனீய அக்னி ஆதானம் செய்து, பிறகு மேற்கு திக்கில் கார்ஹபத்ய அக்னியை ஆதானம் செய்து, பிறகு தக்ஷிண திக்கில் தக்ஷிணுக்னியை ஆதானம் செய்தார்கள். கிழக்கில் ஆரம்பித்து மேற்கு நோக்கி செய்து தெற்கில் பூர்த்தி செய்ததால், முதலில் தனிகர்களாக ஆகி, பின்னேக்கி மேற்கில் செய்ததால் தனங்களே இழந்து, தெற்கில் முடித்ததால் கடைசியில் அசுரர்கள் விநாசத்தை அடைந்தார்கள்.

தேவர்களின் ஆதானம்

தேவர்கள் முதலில் தெற்கு திக்கில் தக்ஷிணுக்னியை ஆதானம் செய்து, பிறகு மேற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திக்கில் கார்ஹபத்யாக்னி ஆதானம் செய்து, பிறகு கிழக்கு திக்கில் ஆஹவனீய அக்னியை ஆதானம் செய்தார்கள். தெற்கில் ஆரம்பித்து மேற்கு வந்து கிழக்கில் பூர்த்தி செய்ததால், ஆஹவனீயாக்னி அநுக்ரஹத்தால் தனிகர்களா கவும், கிழக்கு திக்கில் ஸ்வர்கலோகம் இருப்ப தால், ஸ்வர்கலோகத்தையும் அடைந்தார்கள். ப்ரஜா, பசு ப்ராப்தி தேவர்களுக்கு ஏற்படவில்லை.

மனுஷ்யர்களின் ஆதானம்

கோ ரூபத்தை தரித்த இடா தேவதை மனுஷ் யாளுக்கு ஆதானம் செய்ய வேண்டிய முறைப் படி செய்து வைத்து, ப்ரஜா, பசு ப்ராப்தி, தன ப்ராப்தி எல்லாம் கிடைக்கும்படி அனுக்ரஹம் செய்தது. அதாவது முதலில் மேற்கில் கார்ஹ பத்யாக்னி ப்ரதிஷ்டை செய்து, பிறகு தெற்கில் தக்ஷிணாக்னி ப்ரதிஷ்டை செய்து, பிறகு கிழக் கில் ஆஹவனீயாக்னி ப்ரதிஷ்டை செய்ய வேணும். இதுதான் உத்தமமான பக்ஷம். ப்ரஜா, பசு ப்ராப்தி, தன ப்ராப்தி எல்லாம் உண்டாகும்.

ராத்ரி கார்ஹபத்யாக்னியை ஆதானம் செய்துகொண்டு, அங்கிருந்து கண்ணாலேயே 12 அடி தூரம் தீர்மானித்து ஆஹவனீயாக் னியை ஆதானம் செய்ய வேண்டும். முதலில் கார்ஹபத்யாக்னி ஆதானம், இரண்டாவதாக தக்ஷிணாக்னி, மூன்றாவதாக ஆஹவனீயாக்னி ஆதானம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—5

प्रजापतिर्वाचस्सत्यमपश्यत् ।

भूर्भुवस्सुवः என்ற 3 வ்யாஹ்ருதிக்குள் भूः भुवः என்ற 3 அக்ஷரங்களைச் சொல்லி கார்ஹபத்யாக்னி ஆதானம். भूर्भुवस्सुवः என்ற 5 அக்ஷரங்களைச் சொல்லி ஆஹவனீயாக்னி ஆதானம் செய்ய வேண்டும். குதிரையை அழைத்துபோய் அதன் குளம்பு அடிபட்ட இடத்தில் ஆஹவனீயாக்னி ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். அக்னியை ப்ரதிஷ்டை செய்யப் போகும்போது, முதலில் முழங்கால் உயரத்திலும், பிறகு நாபி உயரத்திலும், கடைசியாக முகம்வரையும தூக்கிச்சென்று பிறகு ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். ஆதானம் செய்து ஸித்தியான அக்னிகளில் பவமான இஷ்டி செய்ய வேண்டும்.

அநுவாகம்—6

देवासुरास्संयत्ता आसन् ।

இந்த அநுவாகத்தில் பவமானேஷ்டி தேவதைகள், ஹவிஸ்ஸுகள், தக்ஷிணைகள் சொல்லப் பட்டுள்ளன.

	தேவதை	த்ரவ்யம்
1.	அக்னி	அஷ்டாகபால ப்ரோடாசம்
2.	பவமானுக்னி	,,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

3. பாவக அக்னி ,,
4. சுசி அக்னி ,,
5. இந்த்ராக்னி ஏகாதச கபால ப்ரோடாசம்
6. அதிதி பசு நெய்யில் செய்த சரு (அன்னம்)

ஹோமம் செய்த பிறகு நெய்யில் செய்த சருவை (அன்னத்தை) வேதம் அத்யயனம் செய்த 4 ப்ராம்மணர்களை சாப்பிடச் சொல்லவும். ஆதானம் செய்த பிறகு 12 நாட்கள் கழித்து பவமானேஷ்டி செய்ய வேண்டும். தலையணை, குதிரை, பசுமாடு, வண்டி மாடு, காளை-கிடேரி இரண்டும் சேர்த்து, வஸ்த்ரம் இவைகளை ரித்விக்குகளுக்கு தக்ஷிணையாக கொடுக்க வேண்டும்.

அநுவாகம்—7

घर्मशिरस्तदयमग्निः ॥

இங்கு கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவனீயம் இந்த மூன்று அக்னிகளையும் அந்தந்த இடத்தில் ஆதானம் செய்யும்போது சொல்ல வேண்டிய மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

அநுவாகம்—8

इमे वा एते लोका अग्नयः ॥

7வது அநுவாகத்தில் சொல்லப்பட்ட மந்த்ரங்களுக்கு ப்ராம்மணம் இந்த அநுவாகத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தில் சொல்லப்பட்டுள்ளன. மேலும் கார்ஹபத்ய ஆதான காலத்தில் ரதந்தர ஸாமாவும், ஆஹவனீய ஆதானத்திற்காக அக்னியை எடுத்துச் செல்லும்போது வாமதேவ்ய ஸாமாவும், ஆஹவனீய ஆதான காலத்தில் ப்ருஹத் ஸாமாவும், பிறகு வாரவந்தீயஸாம, ர்யைதஸாம இந்த இரண்டையும் கானம் செய்யவேணும் என்று சொல்லப்பட்டுள்ளது.

அநுவாகம்—9

शमीगर्भादग्निं मन्थति ।

ஆதானத்திற்கு முதல் நாள் ப்ரம்மௌதனம் என்று ஒரு கர்ம, அதாவது 4 ரித்விக்களுக்கு அன்னம் தயார் செய்வது, 1. ப்ரம்மா 2. ஹோதா 3. அத்வர்யு 4. ஆக்னீத்ரன். இவர்களுக்கு ஆகாரம் தயாரித்து போஜனம் செய்து வைக்க வேணும். மறுநாள் உதயத்திற்கு முன், ப்ரம்மௌதனம் தயாரித்த இடத்தில் உள்ள பஸ்மமான (சாம்பலை) எடுத்து விட்டு, அதே இடத்தில் வஹ்னி மரத்தின் நடுவில் இயற்கையாக முளைத்த அரச மரத்தின் கட்டையில் தயாரித்த அரளியை கடைந்து அக்னி எடுத்து ஆதானம் செய்ய வேண்டும். வஹ்னி மரமும், அரச மரமும் யக்ஞ யோக்யமானதாம். அதில் உண்டான அக்னி யக்ஞ யோக்யமான அக்னி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதிதி தேவி, புத்ரப்ராப்திக்காக ரித்விக் மூலமாக ப்ரம்மௌதனம் செய்து, ஸாத்யாள் என்ற தேவதைகளுக்கு ஹோமம் செய்து, ரித்வீக்குகளும் போஜனம் செய்து, அதிதிக்கு ஹவிஸ் சேஷத்தை கொடுத்தார்கள். அவள் ப்ராசனம் செய்து, தாதா (धाता), அர்யமா என்ற இரண்டு பிள்ளைகளை பெற்ருர். இரண்டாவதாக அனுஷ்டித்து, மித்ரன், வருணன் என்ற இரண்டு பிள்ளைகளை பெற்ருள். மூன்ருவது முறை அனுஷ்டானம் செய்து, அம்ச:, மக: என்ற இரண்டு பிள்ளைகளை பெற்ருள். நான்காவது முறை அனுஷ்டானம் செய்து இந்திரன், விவஸ்வான் என்ற இரண்டு பிள்ளைகளை பெற்ருள். ஆகவே ப்ரம்மௌதனம் அவசியம் செய்ய வேண்டும். என்றும் ப்ராம்மணர்களுக்கு ஸமர்பித்து விட்டு அந்த சேஷத்தை சாப்பிடுவது பலப்ராப்தம் என்று தெரிகிறது.

ப்ரம்மௌதனம் நெய்யினுலேயே தயாரிக்க வேணும். மீதி உள்ள நெய்யில் மூன்று ஸமித்துக்களை நனைத்து ஹோமம் செய்ய வேணும். ஸமித்துக்கள் கடினமாக இருப்பதால் அஸ்திக்கு ஸமானம். ஆஜ்யம் என்பது புருஷ வீர்யத்திற்கு ஸமம். இவ்விரண்டு ஸம்பந்தத்தால் பிறக்கும் குழந்தைகள் அஸ்திரோகம் இல்லாமல் (T. B. இல்லாமல்) பிறப்பார்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸமித்துக்கள் ப்ராதேச பரிமிதம் (ஒரு ஓட்டை) அளவு இருக்க வேண்டும். யக்ஞ புருஷனுடைய முகம் ஒரு ஓட்டை அளவுதான் உள்ளது. அதற்கு ஸமமாக இருக்க வேண்டும்.

ப்ராம்மணர்களுக்கு காயத்ரீ சந்தஸ் உள்ள மந்த்ரங்களால் ஸமித்துக்களை ஹோமம் செய்ய வேண்டும். காயத்ரீயும், ப்ராம்மணனும் ப்ரம்மா வின் முகத்திலிருந்து உண்டானவர்கள், சகோதர, சகோதரிகள். க்ஷத்ரியனுக்கு கூடப் பிறந்தது த்ரிஷ்டப் சந்தஸ். வைச்யனுக்கு கூடபிறந்தது ஜகதீ சந்தஸ்.

ப்ரம்மௌதனக்னியில் உள்ள சாம்பலை விலக்கிவிட்டு அந்த இடத்தில் அக்னியை வைத்து, கடைந்து அக்னி எடுத்து ஆதானம் செய்ய வேணும். ஏதாவது காரணத்தால், ப்ரம் மௌதனத்திற்கு மறுநாள் ஆதானம் செய்ய முடியாவிட்டால், ப்ரம்மௌதனக்னியை ஒரு வருஷம் வரை ரக்ஷித்து வந்து, பிறகு ஆதானம் செய்யலாம், அதாவது ஸௌகர்யம் ஏற்பட்டதும் செய்யலாம், வயற்றில் ஒரு வருஷம் சிசு வளர் கிறது அல்லவா. அதுபோல் அக்னியை வளர்க் கிறதாக ஆகிறது. ஒரு வருஷம் அக்னியை ரக்ஷிக்கும் பொழுது அந்த ஒரு வருஷகாலம் மாம்சம் சாப்பிடக்கூடாது. ஸ்திரீ ஸம்போகம் கூடாது மீறி செய்தால் சரீரத்திற்கு ரோகாதி கள் உண்டாகும். அக்னி பகவான் இவனிடம் வரமாட்டார். அநுக்ரஹம் செய்யமாட்டார் என்று தாத்பர்யம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ரம்மௌதனுக்னியில் அரளி கட்டையை காய்ச்சினால் அந்த அக்னி, அரளி கட்டைக்கு வந்து விடுகிறது. மாடு மேய்ப்பவன் வாயால் ஒருவித ஒலியை ஏற்படுத்தி கூப்பிட்டால் அந்த மாடு வருகிறது.

ஒரு வருஷம் ப்ரம்மௌதனுக்னியை ரக்ஷிக்க முடியாவிட்டால் 12 நாள் ரக்ஷிக்கலாம். 12 நாட்கள் 12 மாதத்திற்கு ஸமம். அதுவும் முடியா விட்டால் 3 நாள் ரக்ஷித்து விட்டு, 4வது நாள் ஆதானம் செய்து கொள்ளலாம். இப்பொழுது நடைமுறையில் ஒரே நாளில் ப்ரம்மௌதனமும், ஆதானமும் செய்கிறார்கள்.

அநுவாகம்—10

प्रजापतिः प्रजा असृजत ।

5வது அநுவாகத்தில் த்ரேதாக்னி ஆதானம் விதிக்கப்பட்டது. 10வது அநுவாகத்தில் பஞ்சாக்னி ஆதான பக்ஷம் விதிக்கப்பட்டுள்ளது. ப்ரஜாபதி ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்து விட்டு சக்தியை இழந்து காணப்பட்டார். தபஸ் செய்து சக்தியை விருத்தி செய்து கொண்டார் வீர்யம் மிகவும் அதிகம் ஆகி வெளிவந்து ஒரு பசுவாக உருவெடுத்தது. அதற்கு விராட் என்று பெயர். அந்த பசுவை தேவர்களும் அசுரர்களும் என்னுடையது என்று வ்யவஹாரம் செய்து கொண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

.CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டனர். அப்பொழுது ப்ரஜாபதி அங்கு வந்து பசு என்னுடையது பால் உங்களுடையது என்று சொன்னர். அந்த பசு கிழக்கே சென்றது. அதை ப்ரம்மா பிடித்து வைத்தார். இவ்விதம் 5 தரம் சென்றது. 5 இடத்திலும் 5 அக்னிகள் ஸித்தித்தன. கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம், என்று 5 அக்னிகள். ஆஜ்யத்தை உருக்க பத்னி ஸம்யாஜம் என்ற யாகம் முதலியனது செய்ய கார்ஹபத்ய அக்னி உபயோகப்படுகிறது. ப்ரதான யாகங்கள் செய்ய ஆஹவனீய அக்னி உபயோகப்படுகிறது. தக்ஷிணாக்னிக்கு அன்வாஹார்ய பசனம் என்று பெயர். ரித்விக்குகள் போஜனத்திற்கு அன்னம் சமைக்க இந்த அக்னி உபயோகப்படுகிறது. சூதாட்ட ஸபையில் சாக்ஷியாக இருப்பது ஸப்யாக்னி. ஸப்யாக்னியில் ஆஹாரம் தயாரித்து ஆவஸதம் என்ற போஜன சாலையில் சூதாட்டக்காரர்கள் போஜனம் செய்வார்கள், அந்த இடத்தில் உள்ள அக்னிக்கு ஆவஸத்யம் என்று பெயர். த்ரேதாக்னி பக்ஷத்தைத்தான் நாம் ஆச்ரயிக்கிறோம்.

வெளியூர் செல்லும் பொழுது யஜமானன் அக்னியை பிரார்த்தனை செய்யும். अयर्वपितुमेगोपाय முதலிய மந்திரங்களை சொல்லி பிரார்த்தித்து விட்டு செல்லவேண்டும். [லோகத்தில் கிருஹஸ்வாமி வெளியூர் செல்லும் பொழுது வேறு ஒருவரை வீட்டை ரக்ஷிக்கும்படி சொல்லி விட்டு போகிறோமோ அது போல் அக்னியை பிரார்த்-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திப்பது ஆகிறது] திரும்பி வந்து அக்னியை உபஸ்தானம் செய்யவேணும். பஞ்சாக்னி உத்பத்திக்கு காரணமான விராட் என்ற பசு ரோஹிணி நக்ஷத்திரமாக ஆகிவிட்டது. ஆதலால் ரோஹிணி நக்ஷத்திரத்தில் ஆதானம் செய்வது உசிதம். விராட் என்ற பசுவுக்கும் ஆதானத்தில் உபயோகம் ஏற்பட்டதாகவும் ஆகிறது.

இரண்டாவது ப்ரச்னம்

அநுவாகம்—1

1வது ப்ரச்னத்தில் ஆதானம் பற்றிய விதிகள் கூறப்பட்டன. 2வது ப்ரச்னத்தில் 6 அநுவாகங்கள் உள்ளன.

उद्धन्यमानमस्या अमेध्यम्

1. அவைகளில் 1வது அநுவாகத்தில் யாகவேதி தீர்மானம் (அதாவது யாகம் செய்ய வேண்டிய இடத்தை) நதிக்கரை, குளத்தங்கரை பிரதேசத்தை கொத்தி ஸமப்படுத்தி ஜலம் தெளித்து யாகம் செய்ய தகுதி உள்ளதாக செய்வது.

2. 7 பக்கத்தில் ஸம்பாரங்கள் 7 வானஸ்பத்ய ஸம்பாரங்களை வேதியில் போடுவதற்கு மந்திரங்கள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

3. வஹ்னி மரத்தை நடுவில் வைத்து அரச மரத்தில் அரணீ தயாரிக்கவேணும். அரணீ என்பது அரசமரத்தில் தயார் செய்த ஆசன பலகை அளவு உள்ள ஒரு கட்டை. அதில் நடுவில் பள்ளம் செய்து மரக்கட்டையால் சங்குகளை தயாரித்து அதன் மூலம் அக்னி உண்டாகும் வரை கடைந்து அக்னி உண்டானதும் அந்த அக்னியை பிரதிஷ்டை செய்து அந்த அக்னியில் யாகம் செய்யவேண்டும். கீழே உள்ள கட்டைக்கு ஆதாரக்னி என்றும் மேலே வைத்து கடையும் கட்டைக்கு (மத்து போல் உள்ளது) அதற்கு உத்தராக்னி என்றும் பெயர். அந்த அரணீகளை தயாரிக்க மந்திரங்கள்.

4. ப்ரம்மௌதனம் என்ற பெயருள்ள ஹவிஸ் தயாரிக்கவேணும், அந்த ஹவிஸ்ஸை ஹோமம் செய்துவிட்டு மீதமுள்ள ஹவிஸ்ஸை பிராம்மணர்களுக்கு (ருத்விக்குகளுக்கு) அதாவது ப்ரம்மா, ஹோதா, அத்வர்யு, ஆக்னித்ரன் இந்த நால்வர்களுக்கு போஜனம் செய்து வைக்க வேணும். பிராம்மணர்களுக்கு ஸமர்பிக்கும் ஹவிஸ்ஸுக்கு ப்ரம்மௌதனம் என்று பெயர். ப்ரம்மௌதன ஹோம மந்திரங்கள்.

समि धाग्नि दुवस्यत என்று ஆரம்பித்து 9 வாக்கியங்கள் உள்ளன 3 வாக்கியங்கள் கொண்டது ஒரு மந்த்ரம், காயத்ரீ சந்தஸ் மந்திரங்கள். இந்த மந்திரங்களை சொல்லி பிராம்மணர்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆதானம் செய்தால் 3 ஸமித்துக்களை ஹோமம் செய்யவேணும்.

समिध्यमानः என்று ஆரம்பித்து 12 வாக்கியங்கள் இருக்கின்றன. 4 வாக்யங்கள் கொண்டது ஒரு மந்திரம் அவ்விதம் 3 மந்திரங்களை சொல்லி க்ஷத்திரியன் ஆதானம் செய்தால் 3 ஸமித்துக்களை ஹோமம் செய்யவேணும். இந்த 3 மந்திரங்களும் திருஷ்டுப் சந்தஸ்ஸுடன் கூடியது.

त्वामग्ने समिधानं यविष्ट என்று ஆரம்பித்து 12 வாக்கியங்கள் உள்ளன. 4 வாக்கியங்கள் கொண்டது ஒரு மந்திரம். அப்படி 3 மந்திரமாக பிரித்துக் கொண்டு வைச்யன் ஆதானம் செய்து கொண்டால் 3 சமித்துக்களை ஹோமம் செய்ய வேண்டும். இந்த மந்திரங்கள் ஜகதீ சந்தஸ்ஸுடன் கூடியது. காயத்ரீ சந்தஸ் உள்ள 3 மந்திரங்கள் திருஷ்டுப் சந்தஸ் உள்ள 3 மந்திரங்கள் ஜகதீசந்தஸ் உள்ள 3 மந்திரங்கள் ஆக 9 மந்திரங்களையும் [घृत ஸூக்தம் என்று சொல்வார்கள் ஸ்மார்த்தகர்மாக்களில், ஜபத்திலும் இந்த மந்திரங்கள்) சொல்வார்கள்

அரளீ தயாரித்து அரளீயை கடைந்து அக்னி தயாரித்து கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, இந்த இடங்களில் அக்னியை ப்ரதிஷ்டை செய்யவும். அக்னிகளை ப்ரார்த்தனை செய்யவும். அக்னி ஹோத்ரி வெளியூர் செல்லும்...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொழுது காரியஸித்திக்காகவும் இடையூருகள் இல்லாமல் திரும்பி வருவதற்கும் அக்னி ப்ரார்த்தனு ரூபமான மந்திரங்களும் 1வது அநுவாகத்தில் கூறப்படுள்ளன.

அநுவாகம்—2

नवैतान्यहानि भवन्ति ।

இரண்டாவது அனுவாகம் முதல் 6வது அனுவாகம் வரை गवामयनं என்ற யாக விசேஷமும் அதில் செய்ய வேண்டிய அனுஷ்டான விசேஷமும் சொல்லப்பட்டுள்ளன.

गवामयनं என்ருல் என்ன? அதாவது गो என்ருல் பசு, அயனம் என்ருல் தக்ஷிணுயனம், உத்தராயணம் அதாவது 1வருஷம். பசுக்கள் ஒரு வருஷம் செய்த யாகத்துக்கு கவாமயனம் என்று பெயர். மிருக ரூபமான பசுக்களால் யாகம் செய்ய முடியாது. பசுக்களுக்கு அபிமானியான தேவதையால் அனுஷ்டிக்கப்பட்ட யாகம் என்று இங்கு அர்த்தம் கொள்ள வேண்டும். ஒரு வருஷம் செய்யக் கூடிய கவாமயந யாகத்தில் விஷுவான்என்று ஒரு நாள். அந்த நாள் தான் முக்கியம். அந்த விஷுவான் என்ற நாளுக்கு முன் 6 மாதம் அதாவது 180 நாட்கள் யாகம் செய்ய வேண்டும். விஷுவான் என்ற நாளுக்கு பின் 6 மாதம் அதாவது 180 நாட்கள் யாகம் செய்ய வேண்டும். ஆக 361 நாட்கள் யாகம் செய்ய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும். விஷுவான் என்ற நாளும் அதற்கு முன் உள்ள நான்கு நாட்கள், அதாவது முன் 6 மாதத்தின் கடைசி நான்கு நாட்கள், விஷுவான் என்ற நாளுக்கு பின் 6 மாதத்தின் முதல் நான்கு நாட்கள் ஆக 9 நாட்கள் யாகம் செய்வதற்கு விசேஷபலன் சொல்லி இருக்கிறது. 9 ஸ்வர்க்க லோகம் இருக்கிறது 8 திக்பாலர்கள் எட்டு ஸ்வர்க லோகத்தை ரக்ஷிக்கிறார்கள். ஊர்த்வ லோகத்தில் ஒரு ஸ்வர்கம், ஆக 9 ஸ்வர்கலோகங்கள். 9 ஸ்வர்கலோகத்திலும் இந்த யாகம் செய்பவன் இஷ்டப்படி சஞ்சாரம் செய்கிறான். விஷுவான் என்றநாளுக்கு முன் 3 நாட்கள் பின் 3 நாட்கள் ஆக 6 நாட்களுக்கு பரஸ்ஸாம என்று பெயர். அந்த நாட்களில் எந்த ஸ்தோத்திரங்கள் சொல்லவேணும், என்ன அனுஷ்டானம் செய்ய வேணும், எப்படி செய்ய வேண்டும் என்றெல்லாம் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது.

அநுவாகம்—3

सन्ततिर्वा एते ग्रहाः ।

இந்த அநுவாகத்தில் இரண்டு 6 மாத காலத்திற்கு நடுவில் உள்ள விஷுவான் என்ற நாள் ப்ரசம்ஸிக்கப்படுகிறது. அ தா வ து பெரிய கொட்டகை அமைக்க முதலில் நடுவில் தூண்களை நிருத்தி அதன் மேல் பெரிய மூங்கிலை கட்டி அவ் விதம் ஆதாரமாகக் கொண்டு இரண்டு பக்கம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சார்ப்பு போட்டு கொட்டகை அமைப்பார்கள். அதுபோல் இங்கு விஷுவான் என்ற நாள் நடு மூங்கில் போல் உள்ளது. அதன் இரு புரமும் உள்ள 6 மாத காலம் இரண்டு சார்பு போல் உள்ளது. விஷீவான் நாள் அன்று அதி க்ராஹ்ய க்ரஹம். அதற்கு முன் 3 நாட்கள் அதற்கு பின் 3 நாட்கள் அதிக்ராஹ்ய கிரஹம் கிரஹிப்பது கொட்டகை கீழே விழாமல் கட்டுவது போல் ஆகிறது. அதிக்ராஹ்யம் என்பது ஒரு விதமான மரப்பாத்திரத்தில் ஸோம ரஸத்தை கிரஹிப்பது. இங்கு விஷுவான் என்ற நாளை திவாகீர்த்யம் என்று வேதம் சொல்லு கிறது. அதாவது दिवा என்றால் பகல் कीर्त्य என்றால் சொல்லத்தக்கது. அந்த நாளில் பகலிலேயே எல்லா மந்திரங்களையும் சொல்லி அனுஷ்டா னத்தை முடிக்க வேண்டியது. ஆதலால் திவா கீர்த்தியம் என்று சொல்லப்படுகிறது.

மேலும் விஷுவான் என்ற நாளில் எந்த எந்த க்ரஹங்கள் கிரஹிக்க வேணும், எந்த தேவதை களை உத்தேசித்து கிரஹிக்க வேணும், எவ்வளவு கிருஹிக்க வேணும், என்று பல விசேஷங்கள் சொல்லப்பட்டு உள்ளன.

அனுவாகம்—4

एकविꣳश एषभवति

தேவர்கள் விஷுவான் நாள் அதற்கு முன் 10 நாட்கள் பின் 10 நாட்கள் ஆக 21 நாட்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுஷ்டான சக்தியால் தான் ஆதித்யனை ஸ்வர்க்கலோகத்தில் பிரதிஷ்டையாக (நிலையாக இருத்தல்) இருந்து பிரகாசிக்கச் செய்தார்கள். 21 நாள் அனுஷ்டான பலனாக சூரியனின் முக்கிய மான 10 ரச்மிகள் பூலோகத்தையும், மற்றுமுள்ள முக்கியமான 10 ரச்மிகளால் ஸ்வர்க்கலோகத்தை யும் பிரகாசப்படுத்துகிறது.

ஆதித்யன் கீழே விழுந்துவிடுமோ அல்லது மேல் ஆகர்ஷணசக்தியால் மேல் நோக்கியே போய்க்கொண்டு இருக்குமோ என்றும் பயந்தார் கள். அதற்காக யாக மந்திரங்களில் அமைந் துள்ள காயத்ரீ, திருஷ்டுப், ஜகதீ, அநுஷ்டுப் பங்தி, ப்ருஹதீ, உஷ்ணிக், இந்த 7 சந்தஸ் ஸுகளால் ஆதித்யன் மேல் நோக்கியே போகா மல் கட்டி நிருத்தினர்கள். 5 ரச்மிகள் என்பது 5 விதமான திவாகீர்த்ய ஸாமாக்கள்.

அனுவாகம்—5

अप्रतिष्ठां वा एते गच्छन्ति ।

இந்த அனுவாகத்தில் ஒரு வருஷம் 361 நாட் கள் அனுஷ்டிக்க வேண்டிய கவாமயன யாகத்தில் ஒவ்வொரு நாளும் எந்த எந்த பசுயாகம் செய்ய வேணும் என்று சொல்லப்பட்டுள்ளது.

அனுவாகம்—6

प्रजापतिः प्रजाः सृष्ट्वा वृत्तोऽशयत् ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு வருஷம் அனுஷ்டிக்கக்கூடிய கவாமயன ஸத்ரயாகத்தில் கடைசி நாள் யாகத்திற்கு அதிராத்ரம் என்று பெயர் அதற்கு முதல் நாள் செய்ய வேண்டிய யாகத்திற்கு மஹாவ்ரதம் என்று பெயர். மஹாவ்ரதம் என்று பெயர் வந்ததற்கு காரணம் சொல்லப்படுகிறது. அதாவது ப்ரம்மா ஸ்ருஷ்டிகளை செய்து விட்டு மிகவும் ச்ரமத்தை அடைந்து (களைப்பு அடைந்து) படுத்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது தேவர்கள் பூதங்களுடைய (பஞ்ச பூதங்களுடைய) ஸாரத்தை எடுத்து ப்ரம்மாவுக்கு சிகித்ஸை செய்து ச்ரமத்தை நீக்கி விட்டு மஹானாக இப்பொழுது ப்ரம்மா ஆகி விட்டார் என்று தேவர்கள் சொன்னார்கள். அதனால் ப்ரம்மாவிற்கு மஹாவ்ரதம் என்று பெயர். வ்ரதம் என்றால் இங்கு ஸாரம் என்று பொருள். கடைசி நாள் செய்யக்கூடிய யாகத்திற்கும், முதல் நாள் செய்யக்கூடிய யாகத்திற்கும் மஹாவ்ரதம் என்று பெயர். மஹத் என்றால் உயர்ந்தது. வ்ரதம் என்றால் ஹவிஸ். உயர்ந்த ஹவிஸ்ஸை உடையதால் மஹாவ்ரதம் என்று யாகத்திற்குப் பெயர். அல்லது ப்ரஜாபதிக்கு உயர்ந்த ஔஷதமாக இந்த யாகம் அமைவதால் யாகத்திற்கு மஹாவ்ரதம் என்று பெயர்.

மஹாவ்ரத யாகத்தில் 3 ருக்குகளை ஆவர்த்தி செய்து 25 ஸ்தோமங்கள் (ஸ்தோத்ரங்கள்) செய்ய வேணும். 25ல் அடங்கிய 24 பக்ஷத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யும், அதாவது ஒரு வருஷத்தையும் 25வது எண்ணிக்கை அந்த வருஷத்தில் அன்ன ஸம்ருத்தி ஏற்படப் போகிறது என்பதையும் குறிக்கிறது. மஹாவ்ரதம் என்ற யாகம் ஸம்வத்ஸர மத்தியில் (கடைசி நாளுக்கு முதல் நாள்) அநுஷ்டிக்கப் படுகிறது. அன்ன ஸமிருத்திக்காக மஹாவ்ரதா நுஷ்டானம். [அன்னத்தை மத்யம பரிமாணமாக சாப்பிடவும். அதிக பரிமாணமும் கூடாது. ஸ்வல்ப பரிமாணமும் கூடாது. அதிக பரிமாணம் சாப்பிட்டால் வயிற்று வலி உண்டாகும். ஸ்வல்ப பரிமாணமாகச் சாப்பிட்டால் பசி நிவர்த்தி ஆகாது. அதனால் மத்யம பரிமாணமாக அதாவது அரை வயிறு அன்னம், கால் வயிறு ஜலம், கால் வயிறு காற்று ஸஞ்சரிக்க விடுவது. இது தான் மத்யம பரிமாண ஆஹாரம் என்பது. இப் படிச் செய்தால் நன்கு ஜீரண சக்தி இருக்கும்].

மஹாவ்ரதம் உபாந்த்ய தினத்தில் அனுஷ் டிக்கப்படுகிறது. ஆதலால் அந்த்யத்தில் அனுஷ் டித்ததாகவும் சொல்லலாம். அந்த்யத்தில் அனுஷ் டிப்பதால் ஸஸ்யங்கள் (பயிர்கள்) அந்தி காலத் தில் அதாவது பலன் கொடுக்கும் காலத்தில் அதிக பலன் கொடுக்கும். ப்ரஜைகள் ஸௌக்கிய மாக இருப்பார்கள். இந்த மஹாவ்ரதம் பக்ஷி ரூபமாக வர்ணிக்கப் படுகிறது. மஹாவ்ரதத்தில் 3 ஸூக்தங்கள் சொல்லப்படுகின்றன. பக்ஷி ரூப மாகச் சொல்லப்படுகிறதால் மஹாவ்ரதத்திற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிரஸ்தானமாக 3 ஸூக்தங்கள் ஆகின்றன. சிரஸ் கேசங்கள் தோல் எலும்பு ஆக மூன்று பொருளால் அமைந்து இருப்பதால் 3 ஸூக்தங்களை சிரஸாக சொல்லப்படுகின்றன. ஸ்தோத்திரங்களை ஆவ்ருத்தி செய்து விஸ்தரிக்காமல் ஒரே மாதிரியாக சொல்ல வேணும். ஏனென்றால் சிரஸ் ஒரே மாதிரிதானே இருக்கிறது. அதாவது (உடல் பெருப்பதால் தலை பெருப்பதில்லை. உடல் இளைப்பதால் தலை இளைப்பதில்லை.)

15 ஸ்தோமமும், 17 ஸ்தோமமும் சொல்ல வேண்டும். இந்த இரண்டும் பக்ஷிரூபமான மஹாவ்ரதத்துக்கு இரு இறக்கைகள் போல. கருடன் ஆகாயத்தில் பறக்கும் சமயம், திரும்பும்பொழுது ஒரு இறக்கையை நீட்டிக்கொண்டும் மற்றொரு இறக்கையை சுறுக்கிக்கொண்டும் திரும்புகிறது. ஆதலால் 17 ஸ்தோமம் நீட்டிய இறகுக்கு சமமாகும். 15 ஸ்தோமம் குறுக்கிய இறகுக்கு ஸமானம். 25 ஸ்தோமம் சொல்லப்படுகிறது. அது பக்ஷியின் பெருத்த உடலுக்கு ஸமமாகிறது. 21 ஸ்தோமம் சொல்லப்படுகிறது. அது வாலுக்கு ஸமமாகிறது.

உத்காதா என்ற ருத்விக் அத்திமரத்தால் செய்யப்பட்ட கட்டிலில் அமர வேண்டும். அவன் தனிகனாக இருந்தால் தனிகத்வம் நிலைத்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்க வேண்டும் என்ற மந்திரம் சொல்ல வேண்டும். தனிகனாக இல்லாத உத்காதாதான் தனிகனாக ஆகவேண்டும் என்ற மந்திரத்தை சொல்ல வேண்டும். ஊஞ்சலில் உட்கார்ந்து ஹோம மந்தரத்தை சொல்ல வேண்டும். பொதுவாக ருத்விக்குகள் உத்ஸாகத்துடன் இருக்க வேண்டும். தேவர்களும், அசுரர்களும் கலகம் செய்து கொண்டார்கள். ஸூரியன் எங்கள் பக்கம் இருக்க வேண்டும் என்று தேவர்களும் அவ்விதமே அசுரர்களும் சொல்லிக் கொண்டு கலகம் செய்தார்கள். முதலில் தேவர்கள் ஜயித்தார்கள். அசுரர்கள் தோல்வி அடைந்தார்கள். அதுபோல் இந்த யாகத்தில் தோலால் ஸூர்ய மண்டலம் போன்று செய்துவைத்து தேவஸ்தானத்தில் ப்ராம்மணனும் அசுரஸ்தானத்தில் 4வது வர்ணத்தாரும் இருந்து கொண்டு கலகம் செய்யவேண்டும். நான்காவது வர்ணத்தவன் யாகசாலைக்கு வெளியிலும் பிராம்மணன் யாக சாலையிலும் இருக்க வேண்டும். பிராம்மணன் யாகம் நன்றாக நடக்கிறது, இதனால் உலகம் க்ஷேமமாக இருக்கும் என்கிறான். நான்காவது வர்ணத்தவன் யாகத்தையும் யாகம் செய்பவனையும் நிந்திக்கிறான். யாகத்துக்கு நல்ல பலன் ஏற்படுகிறது. மற்றவன் நிந்திப்பதால் யாகத்தில் ஏதாவது தோஷம் இருந்தால் விலகி நிந்திப்பவனிடம் செல்கிறது. கடைசியில் ப்ராம்மணன் ஜயிக்கிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மூன்றாவது ப்ரச்னம்

இந்த ப்ரச்னத்தில் 10 அனுவாகங்கள் உள்ளன. ஒன்றாவது அநுவாகத்தில் புனராதானம் சொல்லப்பட்டுள்ளது. முதலில் ஆதானம் செய்து கொண்டபின் கொஞ்ச நாட்களில் குடும்பத்தில் சிரமம் ஏற்பட்டால், முதல் ஆதானம் செய்து கொண்ட பின்தான் இது குடும்ப சிரமம் என்று தீர்மானமாக தெரிந்தால் அந்த அக்னியை உத்வாஸம் (அணைத்து) செய்து விட்டு மறுபடியும் நல்ல முஹூர்த்தத்தில் ஆதானம் செய்து கொள்ள வேண்டும் இதற்கு புனராதானம் என்று சொல்வார்கள். उद्वास्य पुनरादधीत என்ற ஸம்ஹிதா பாகத்தில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

அநுவாகம்—1

देवासुरास्संयत्ता आसन्

அக்னி ஸோமன் இவர்கள் கதையை சொல்லி ஆஜ்ய பாகம் என்ற கர்மா விதிக்கப்பட்டிருக்கிறது.

தேவர்களும், அசுரர்களும் யுத்தத்திற்கு தயாராகும் பொழுது தங்களிடம் இருந்த ஐச்வர்யங்களை அக்னி ஸோமன் இவர்களிடம் கொடுத்து ரக்ஷிக்கச் செய்து யுத்தம் செய்தார்கள். தேவர்கள் அபிப்ராயம் என்னவென்றால் நாம் ஜயித்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விட்டால் சௌக்யமாக இருக்கலாம். ஒரு வேளை நாம் தோற்றுப் போனால் அக்னி, ஸோமன் இவர்களிடம் கொடுத்து ஆபத் ஸம்பத்துக்காக இருக்கட்டும் என்று தேவர்கள் அபிப்ராயம். தைவ வசமாக தேவர்கள் ஜயித்துவிட்டார்கள். தாங்கள் கொடுத்துவைத்த ஐஸ்வர்யங்களை வாங்கிக் கொள்ள தேவர்கள் அக்னி, ஸோமன் இருவரை தேடிச் சென்றார்கள். அக்னி ருதுக்களிடம் சென்று மறைந்துவிட்டார். ருதுக்களின் ஆதரவு உள்ள அக்னியை ஒன்றும செய்ய முடியவில்லை. ஆதலால் புனராதானத்தில் ப்ரயாஜை பத்னீ ஸம்யாஜம் இவைகளில் அக்னிக்கு பிராதான்யம் கொடுப்பதாக சொல்லி அக்னியிடமிருந்து ஐஸ்வர்யத்தை வாங்கினார்கள். ஸோமனை தேடி சென்று ஸோமனிடமிருந்து பலாத்காரமாக தாங்கள் கொடுத்த ஐச்வர்யத்தை வாங்கினார்கள். அந்த ஐச்வர்யங்கள் ஸோமக்ரஹங்களாக ஆகி விட்டன. ஆகையால் ஸோமக்ரஹங்களை கிரஹிக்கும் போது இந்த விஷயத்தை அறிந்து கிரஹிப்பது மிகவும் பயனுள்ளதாக ஆகும்.

புனராதானத்தில் எல்லா மந்திரங்களும், அக்னிதேவதா மந்திரமாகவே இருக்கவேண்டும். புனராதானத்தில் இரண்டு ஆஜ்யபாகமும் அக்னி தேவதாகமாக. செய்ய வேண்டும். மற்ற யாகங்களில் முதல் ஆஜ்யபாகம் அக்னி தேவதாகம், இரண்டாவது ஆஜ்யபாகம் ஸோம தேவதாகம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புனராதானத்தில் முதல் ஆஜ்யபாக மந்த்ரம் अग्निं स्तोमेनबोधय: இரண்டாவது ஆஜ்யபாக மந்த்ரம் अग्न आयूंषि पवसे. எல்லா மந்திரமும் அக்னிதேவதாகமாக சொன்னால் அதிக தேஜஸ்ஸினால் அக்னி தஹிக்கும் என்று நினைக்க வேண்டாம். அக்னியினால் அனுகூலமே உண்டாகும். ப்ரஜா ஸம்ருத்தி உண்டாகும். முதல் ஆதானத்தில் எல்வளவு ஸம்பாரங்கள் சேர்த்தோமோ அதே அளவு புனராதானத்தில் ஸம்பாரம் செய்யவேணும். அப்பொழுதுதான் புனராதானம் ஸம்ருத்தமாக ஆகும்.

புனராதான மந்திரங்களை உபாம்சுவாக (மெதுவாக சப்தமில்லாமல்) சொல்ல வேண்டும். புனராதானம் என்பது நஷ்டமான அக்னியை மறுபடியும் தேடி அடைவது. [கெட்டுப்போன வஸ்துவை திருடன் வீட்டில் தேடிச் செல்பவன் கை கால் சப்தம் கேட்காமல் மெதுவாக சென்று எப்படி தேடுவானோ] அதுபோல் நஷ்டமான அக்னியை அடைய சப்தமில்லாமல் மந்திரங்களை சொல்ல வேண்டும். அக்னி ஸித்தியான பிறகு ஸ்விஷ்டக்ருத்யாக மந்திரத்தை உறக்க சொல்ல வேணும். [மாறு வேஷம் போட்டுக் கொண்டு திருட்டுப்போன வஸ்துவை தேடி கண்டுபிடித்து என்னுடைய பொருள் கிடைத்துவிட்டது என்று உறக்க சொல்லுவானோ அதுபோல் ஆகிறது.] புனராதானத்தில் எல்லா மந்திரத்திலும் அக்னி பதத்தை சேர்த்து சொல்ல வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாவது அநுவாகம் முதல் 9வது அநுவாகம் முடிய 8 அநுவாகங்களில் வாஜபேய யாகத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளன.

அநுவாகம்—2

देवा वै यज्ञादन्

வாஜபேய யாகத்தை விதிப்பதற்கு முன் வாஜபேயயாக விஷயமான கதை சொல்லப்படுகிறது. தேவர்களுக்குள் ஒரு தேவன் அக்னிஷ்டோம யாகத்தை கண்டுபிடித்தான். இன்னொரு தேவன் அதிராத்ரயாகத்தை கண்டுபிடித்தான். அவரவர்கள் கண்டுபிடித்த யாகத்தை அவரவர்கள் அனுஷ்டானம் செய்து பலனை அடைந்தார்கள். எல்லா தேவர்களும் சேர்ந்து ஒரே சமயத்தில் வாஜபேய யாகத்தை கண்டுபிடித்ததால் நான் தான் வாஜபேய யாகத்தை முதலில் அனுஷ்டானம் செய்வேன் என்று எல்லாரும் கூற தகராறு செய்து கொண்டு முடிவு ஏற்படாமல் இருந்தார்கள். பிறகு ஒரு பந்தயம் வைத்து பந்தயத்தில் ஜயித்தவர்கள் முதலில் வாஜபேய யாகம் செய்ய வேண்டும் என்பது முடிவாயிற்று. குறிப்பிட்ட இடம் வரையில் எல்லோரும் சேர்ந்து ஒட வேணும், யார் முதலில் குறிப்பிட்ட இடத்தை அடைகிறாரோ அவரே வாஜபேயயாகத்தை முதலில் அனுஷ்டிக்க வேண்டும் என்பது அந்த பந்தயம், அந்த பந்தயத்தில் ப்ரஹஸ்பதி ஜெயித்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விட்டார். ப்ரஹஸ்பதி முதலில் வாஜபேய யாகத்தை அனுஷ்டித்து ஸ்வாராஜ்யம் (ஸ்வாதந்திரியம்) என்ற பலத்தை அடைந்தார். பிறகு இந்திரன் பிரஹஸ்பதியை பிரார்த்தனை செய்து தனக்கும் வாஜபேய யாகத்தை நடத்தி வைக்க வேணும் என்று பிரார்த்தித்தார். அதன்படி ப்ரஹஸ்பதி இந்திரனுக்கு வாஜபேய யாகத்தை நடத்திவைத்தார். அதனால் இந்திரன் ஸ்வர்காதிபதி என்கிற ஸ்வாராஜ்யத்தை அடைந்தான். இந்த கதையை தெரிந்துக் கொண்டு வாஜபேய யாகம் செய்பவர் ஸ்வாராஜ்ய பலத்தை அடைவார். வாஜபேய யாகம் செய்தவரை எல்லோரும் பெரியவர் என்று மதிப்பார்கள். ப்ருஹஸ்பதி ப்ராம்மண அபிமானி, இந்திரன் க்ஷத்ரிய அபிமானி. இந்த இருவர்கள் மட்டும் வாஜபேய யாகம் செய்ததால் பிராம்மணன் க்ஷத்ரியன் இருவர்கள் மட்டும் வாஜபேய யாகம் செய்யலாம். வைச்யன் செய்யக் கூடாது.

[வாஜம் என்றால் ஸோமரஸம் அது இந்த யாகத்தில் ஹவிஸ் ஆனபடியால் இந்த யாகத்துக்கு வாஜபேயம் என்று பெயர். அல்லது வாஜம் என்றால் அன்னம் இந்த யாகத்தால் அன்ன ப்ராப்தி ஏற்படுகிறது. ஆதலால் வாஜபேயம் என்று பெயர். வாஜபேய யாகம் செய்தவன் ரோகமில்லாமல் நன்றாக சாப்பிடுவான். வேதம் சொல்லி குருதக்ஷிணை மூலம் ஜீவனம் நடத்தும் பிள்ளை பிறப்பான். வாஜபேய யாகம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்தவன் தலைமையில் நன்றாக பேசுவான். அப்படி பேசும் சக்தி உண்டாகும். ஸபையில் எல்லோரும் அவனை ஸ்தோத்திரம் செய்வார்கள். மேலும் மேலும் வாஜபேயம் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவான்.]

ப்ரம்மா மற்ற தேவர்களுக்கு மற்ற யாகங்களை பிரித்து கொடுத்துவிட்டு தனக்கு வாஜபேய யாகத்தை வைத்துக் கொண்டதாலேயே அந்த யாகம் மிக உயர்ந்தது என்று தேவர்கள் அறிந்து கொண்டு அதிலும் எங்களுக்கு பாகம் வேண்டும் என்று தேவர்கள் ப்ரம்மாவிடம் கூறினார்கள். அதன் பின் வாஜபேய யாகத்தில் உள்ள உஜ்ஜிதி என்ற மந்த்ரங்களை தேவர்களுக்கு கொடுத்தார். தேவர்கள் வேதத்தை சோதனம் (சுத்தி) செய்தார்கள். அதிலிருந்து நரஸ்துதி என்பது பாகமாக வந்தது. அன்னத்தை சுத்தி செய்தார்கள். அதிலிருந்து ஸுரா(கள்ளு) மலமாக வந்தது. ஆதலால் [நரஸ்துதி செய்பவனிடமிருந்தும், ஸுராபானம் செய்பவனிடமிருந்தும் ப்ரதிக்ரஹம் வாங்கக் கூடாது. வாங்கினால் மலத்தை வாங்குவது போலாகும்] வாஜபேய யாகத்தில் பல மந்திரங்கள் உபயோகப்படுவதால் வாஜபேய யாகம் செய்பவன் எல்லா யாகத்திலும் ருத்விக்காக இருக்கிற தகுதி உள்ளவன்.

அநுவாகம்—3

देवा॒ वै यद॒न्यैर्ग्रहैः

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த அநுவாகத்தில் அதிக்ராஹ்ய கிரஹங்கள் விதிக்கப்படுகின்றன. க்ரஹம் என்பது மரப் பாத்திரம் உரல் மாதிரி அமைப்பு உள்ளது. மத்தியில் பள்ளம் குழி இருக்கும். அதில் ஸோமம் என்ற கொடியை இடித்து பிழிந்து ரஸத்தை எடுத்து அந்த ரஸத்தை க்ரஹம் என்ற பாத்திரத்தில் க்ரஹித்து ஹோமம் செய்வார்கள். இந்திரனை உத்தேசித்து ஸோமரஸம் கிரஹித்தால் ஐந்த்ரக்ரஹம் என்றும், அக்னியை உத்தேசித்து ஸோமரஸம் கிரஹித்தால் ஆக்னேயக்ரஹம் என்றும், தேவதையின் பெயரை வைத்து க்ரஹத்தின் பெயர் சொல்லப் படுகின்றன. அதிக்ராஹ்யம் என்று ஒரு க்ரஹத்தின் பெயர். வாஜபேய யாகத்தில் 5 அதிக்ராஹ்ய கிரஹம் கிரஹிக்கப் படுகின்றன. 5ம் இந்திர தேவதையை உத்தேசித்து கிரஹிக்கப் படுகின்றன. ஆனாலும் ஐந்திரக்ரஹம் என்று பெயர் வைக்கப்படவில்லை. ஏனென்றால் தேவதையை வைத்து பெயர் வைக்காமல் பலத்தை வைத்து பெயர் வைக்கப் பட்டுள்ளது. அதாவது மற்ற க்ரஹங்களால் அடையமுடியாத பலத்தை இந்த கிரஹங்களால் அடைகிறார்கள். ஆதலால் இவைகளுக்கு அதிக்ராஹ்ய க்ரஹங்கள் என்று பெயர். வாஜபேய யாகத்தில் ப்ரஜாபதி தேவதையை உத்தேசித்து 17 ப்ராஜாபத்ய க்ரஹங்களும் க்ரஹிக்கவேண்டும். 5 அதிக்ராஹ்ய கிரஹங்களில் ஸோமரஸத்தையும் 17ப்ராஜாபத்ய கிரஹங்களில் ஸுரா த்ரவ்யத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யும் கிரஹிக்க வேண்டும். ஸோமக்ரஹங்கள் தேவர்களுக்கு உயர்ந்த போஜனம். ஸுராக்ரஹங்கள் அத்மஜாதி மனுஷ்யர்களுக்கு உயர்ந்த அன்னம். இதை அறிந்தவனுக்கு அரிசி, பருப்பு முதலிய உயர்ந்த தான்ய வகைகளும் மற்றும் கம்பு, கேழ்வரகு போன்ற ஸாதாரண தான்ய வகைகளும் கிடைக்கும். ஸோமக்ரஹத்தால் நல்ல குலத்தில் பிறந்தவன் என்ற பெருமையும், ஸுராக்ரஹத்திஞல் அபகீர்த்தி நிவ்ருத்தியும் உண்டாகிறது. ஸோமக்ரஹத்தையும் ஸுராக்ரஹத்தையும் வெவ்வேறு இடத்தில் இடைவெளி விட்டு ஸ்தாபனம் செய்யவேண்டும். ஸோமக்ரஹம் என்பது புண்யகர்மா. ஸுரா க்ரஹம் என்பது பாபகர்மா. ஆதலால் தனித் தனியாக வைக்க வேண்டும். ஸோமக்ரஹ மந்த்ரம் மங்களம் ஏற்பட வேண்டும் என்று சொல்கிறது. ஸுராக்ரஹ மந்த்ரம் பாபங்கள் நிவிருத்தி ஆகவேண்டும் என்று சொல்கிறது [வியாபாரத்திற்கு அன்றுதம் [பொய்] தேவை. ஆதலால் பொய் க்ரஹமான ஸுராக்ரஹத்தை வைச்யனிடம் கொடுக்க வேண்டும்.] ஹிரண்ய பாத்திரத்தை தேன் பூர்ணமாக வைச்யனுக்கு தக்ஷிணையாக கொடுக்க வேணும். அவன் பிரம்மா என்ற ருத்விக்கிடம் கொடுக்க வேணும். அதஞல் யாகம் செய்பவன் தேன் முதலிய போக்யத்ரவ்யத்துடனும், தீர்க்காயுஸ்ஸுடனும் இருப்பான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—4

ब्रह्मवादिनीवदन्ति

இந்த அனுவாகத்தில் வாஜபேய யாகத்தில் பசுக்கள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. யாகத்தில் பசு என்று சொல்லுமிடத்தில் ஆடு என்ற அர்த்தம் கொள்ள வேண்டும். வாஜபேய யாகம் செய்கிறவனுக்கு எல்லா யாகங்களும் எல்லா க்ரதுக்களும் அனுஷ்டானம் செய்த பலன் கிடைக்கிறது. வாஜபேய யாகத்தில் 17 ப்ராஜாபத்ய பசு அனுஷ்டானம் செய்ய வேணும். எல்லா பசுவும் கருப்பாகவும், கொம்பு முதலிய அவயவங்கள் ஒரே மாதிரியாகவும் இருக்க வேண்டும். நீவார தான்யத்தினுல் செய்த புரோடாசம் ஹவிஸ்ஸாக ஆகிறது. மருத் தேவதாகமான வசாயாகம் (வசா என்பது குட்டி போடாத கர்ப்பதாரண தகுதி இல்லாத மலடு ஆடு) செய்ய வேண்டும். ஸரஸ்வதியை உத்தேசித்து மேஷீ (செம்மரி பெண் ஆடு) யாகம் செய்யவேண்டும். [பல் இருந்தால் சொல் வரும். பல் போனுல் சொல் போய்விடும்] ஆதலால் சொல்லுக்கு தேவதையான ஸரஸ்வதிக்கு ஸமர்பிக்கும் ஆட்டுக்கு பல் பட்டு இருக்க வேணும். அப்படி செய்தால் உலகத்தில் உள்ள எல்லா ஜனங்களும் நன்ருக பேசுவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—5

सावित्रं जुहोतिकर्मणः कर्मणः पुरस्तात् ।

இந்த மந்திரத்துக்கு ஸாவித்ர மந்த்ரம் என்று பெயர். இந்த மந்திரத்தில் ஸவிதா என்ற பதம் இருப்பதால் ஸாவித்ர மந்த்ரம் என்று பெயர் வந்தது. இந்த மந்திரத்தினுல் ஸோம யாகத்தில் ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்தில் ஹோமம் செய்ய வேணும். வாஜபேய யாகத்தில் பல கர்மாக்கள் இருப்பதால் எந்த கர்மாவை முன்பு செய்ய வேணும், எந்த கர்மாவை பின் செய்ய வேணும் என்று யாவருக்கும் ஸந்தேஹம் ஏற்படலாம். ஸாவித்ர ஹோமத்தை ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்தில் செய்வதால் ஸவிதாவின் அனுக்ரஹத்தால் எல்லா கர்மாவும் முறைப்படி அந்த அந்த காலத்தில் செய்ததாக ஆகிறது.

ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்தில் ஸாவீத்ர ஹோமம் செய்ய முடியாதவன் 3 ஸவனங்களில் (அதாவது 3 காலங்களில் 1 ப்ராதஸ்ஸவனம் 2 மாத்தியந்தினஸவனம் 3 திருதீயஸவனம் என்ற 3 காலங்களில் செய்தால் போதும். ஸாவித்ர மந்திரத்தில் वाचस्पति...स्वदाति என்ற இரண்டு பதங்கள் உள்ளன. அவைகளின் தாத்பர்யம் என்ன வென்ருல் ஸ்தோத்ரமாகிற வாக்கை கேட்டு அன்ன ஸம்ருத்தியை அடைந்தவனுக்கு எவ்வளவு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

த்ருப்தி வருமோ அவ்வளவு த்ருப்தி தேவர்களுக்கு வருகிறது என்று தாத்பர்யம்.

குதிரைகளை குளிப்பாட்டி ரதத்தில் பூட்டி குதிரைகளின் முதுகில் தட்டி சந்தோஷப்படுத்தி ரதத்தில் உள்ள ரத அபிமானி தேவதைகளுக்கு மந்த்ர பூர்வமாக நமஸ்காரம் செய்து ரதத்தில் ஏறி பவனி வரவேண்டும். வாஜபேயயாஜிக்கு இவ்வளவு உயர்வு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அநுவாகம்—6

देवस्याह्ँसवितुः प्रसवे

வாஜபேய யாகம் செய்பவன் ரதத்தில் சென்று அன்னத்தை ஜபித்துக் கொண்டு வருகிறான். ரதத்தில் யஜமானன் போகும் பொழுது ப்ரம்மா என்ற ருத்விக் அன்ன ஸம்ருத்தி ஏற்படக் கூடிய ஸாமாவை கானம் செய்ய வேணும். துந்துபி வாத்யம் முழங்க வேண்டும். ஒரு ஸமயம் தேவதைகளின் வாக்கு எல்லாம் மரங்களை அடைந்தன. அந்த வாக்குகள் தான் மரங்களால் செய்யப்பட்ட வாத்யங்கள். வீணை, பிடில், துந்துபி புல்லாங்குழல் முதலிய வாத்யங்களில் இருந்து வெளிப்படுகின்றன. துந்துபி சப்தம் எல்லா சப்தத்தையும் விட பலமான சப்தமாக உள்ளது. அதனால் அதற்கு பரமவாக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்று பெயர். மற்ற வாத்ய சப்தங்கள் அவர வாக்கு த்வனி குறைவு என்று அர்த்தம்.

யஜமானன் கையில் சாட்டையை கொடுத்து குதிரையை ஒட்டச் செய்யவேணும், 17 வில்லடி துரம் ரதத்தை ஒட்டவேணும். 17 ஸ்தோத்திரங் களை கானம் செய்ய வேண்டும். 10 வித த்ரவ் யங்களை 1. ரதம், 2. வண்டிகள் 3. குதிரைகள் 4. யானைகள் 5. தங்கம் 6. தாஸிகள் 7. ஆடுகள் 8. செம்மரி ஆடுகள் 9. வஸ்திரங்கள் 10. பசுக்கள் ஒவ்வொரு வஸ்துவும் 17 கொடுக்க வேணும். ஏனென்றால் யாகத்தில் முக்கியமான மந்திரங் களில் 17 அக்ஷரங்கள் உள்ளன. ஆச்ராவய, அஸ்து ச்ரௌட்யே யஜாமஹே, வௌஷட் இந்த 17 அக்ஷரமும் பரமாத்ம ஸ்வரூபம், அதனால் 17 எண்ணிக்கை மிகவும் உயர்ந்தது. ரதத்தை கிழக்கு நோக்கி ஒட்டி சென்று வடக்கு நோக்கி திரும்பி கொண்டு வரவேண்டும். யஜமானன் கூட சென்றவர்களுக்கு சுவர்ணதானம் செய்ய வேணும். அவர்கள் சுவர்ணத்தை வாங்கிக் கொண்டு ப்ரம்மா என்கிற ருத்விக்கிடம் கொடுத்து விடவேணும். தேவர்கள் ஒரு ஸமயம் ஒட்டப்பந்தயம் நடத்தினார்கள். அந்த பந்தயத் தில் ப்ரஹஸ்பதி ஜயித்து நீவார தான்யத்தை வெகுமானமாக அடைந்தார். ஆதலால் ப்ருஹஸ் பதிக்கு நீவார தான்யத்தினால் ஹவிஸ் செய்து பால் நெய் கலந்து ஹோமம் செய்யவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—7

तार्प्यं यजमानं परिधापयति ।

வாஜபேய யாகத்தில் யஜமானன் நெய்யில் நனைந்த வஸ்திரத்தை கட்டிக் கொண்டும் யஜமான பத்னீ தர்பத்தினால் வஸ்திரம் போல் செய்து கட்டிக் கொள்ளவேணும். யூபம் என்று பெயருள்ள ஒரு மரம் நட்டு வைத்திருக்கும். அது 17 விரல் அளவு நீளம் இருக்கும் 17 வஸ்திரங்களை அந்த யூபத்தில் சுத்தி கட்ட வேண்டும். வாஜப்ரஸவீயம் என்கிற சில ஹோமங்களை செய்துவிட்டு 16 விதமான கல்ப மந்திரங்களை சொல்லி யஜமானன் யூபம் என்னும் மரத்தில் ஏறவேண்டும். இதனால் யஜமானன் நேராக ஸ்வர்க்கலோகத்துக்கு போய் வருவதாக தாத்பர்யம். யஜமானன் யூபத்திலிருந்து இறங்கும் பொழுது வலது காலை ஸுவர்ணத்தில் வைத்து இறங்க வேணும். ஸுவர்ணம் அழிவற்றது. அதனால் அழிவில்லாத ஸ்வர்கலோகத்தில் யஜமானன் வாழ்கிறான். இடது காலை ஆட்டுத் தோலில் வைத்து இறங்க வேண்டும். அதனால் புஷ்டி உள்ளவனாகவும் வீர்யமுள்ளவனாகவும் ஆகிறான். [பசு வருஷத்துக்கு ஒரு தரம் கன்று ஈர்க்கிறது. ஆடு வருஷத்துக்கு 3 தரம் குட்டி போடும். ஒவ்வொரு தரமும் 2 குட்டி போடுகிறது. அதனால் ஆடு புஷ்டியாகவும் வீர்ய முள்ளதாகவும் இங்கு சொல்லப்பட்டு உள்ளது.]

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—8

सप्तान्नहोमाञ्जुहोति

கிராமத்தில் உண்டான தான்யங்கள் 7 - எள்ளு, உளுந்து, நெல்,யவை, ப்ரியங்கு, அணவ, கோதுமை,

காட்டில் உண்டான தான்யங்கள் 7 வேணு, ச்யாமாகம், நீவாரம் ஜர்த்திலம், கவீதுகம், மார்க்கடகா, கார்முதம் அல்லது கொள்ளு ஆக 7 தான்யங்கள்.

இந்த க்ராம்மியமான 7 தான்யம் அரண்யமான 7 தான்யம் இவைகளில் இருந்து அரிசியை வேகவைத்து, கரைத்து அதை ஹோமம் செய்ய வேண்டும். ஒவ்வொரு தான்ய ரஸத்தையும் தனித்தனியாக எடுத்து ஹோமம் செய்யவேணும் என்று ஒரு பக்ஷம். எல்லா தான்ய ரஸத்தையும் ஒன்ருக சேர்த்து அதை எடுத்து ஹோமம் செய்ய வேணும் என்பது மற்ருெரு பக்ஷம். அத்திக் கட்டையால் கரண்டி போல் செய்த (ஸ்ருவம்) என்ற ஹோம கட்டையால் ஹோமம் செய்ய வேணும். இதனுல் உலகத்துக்கு தேவையான எல்லா தான்யங்களும் தட்டுப்பாடு இல்லாமல் எல்லோருக்கும் கிடைக்கும். ஹோமம் முடிந்ததும் மீதி உள்ள தான்ய ரஸத்தால் வாஜபேயயாஜிக்கு அபிஷேகம் செய்ய வேணும். தலையில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபிஷேகம் செய்து, முகம் வழியாக உடம்பு பூராவும் வழிந்து கால்வரை அபிஷேகரஸம் வரும் படியாக அபிஷேகம் செய்ய வேணும். கிழக்கில் இருந்து கொண்டு தன்னை நோக்கி யஜமானனை உட்காரவைத்து அபிஷேகம் செய்ய வேணும். அபிஷேகம் ஆனபிறகு யஜமானனை ஸந்தோஷப் படுத்த நாட்டியம் ஆட வேணும். பல மந்திரங் களை சொல்லி ஸ்தோத்திரம் செய்ய வேணும்.

அநுவாகம்—9

नृषदस्त्वेरपाहु ।।

வாஜபேயயாஜியை அபிஷேகம் செய்த பிறகு அவரை ஸ்தோத்ரம் செய்கிறது வேதம். யஜ மானன் ப்ரஜைகளுக்கு ஸ்வாமியாக அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார். காடுகளுக்கும் ஸ்வாமியாக அபிஷேகம் செய்யப்பட்டார். பூலோகத்திற்கே ஸ்வாமியாக அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார். ஜனங்களுக்கும் மற்ற எல்லா பொருள்களுக்கும் ஸ்வாமியாக ஆகிவிட்டார். ஸ்ரீமானாக ஆகி விட்டார். ஸ்ரீமாஹாஜனங்கள் ஆகாயத்தில் இருக்கிறார்கள் என்பார்கள். யாஜகுதிரை மீது ஏறிக்கொண்டு செல்கிறார் என்று தாத்பர்யம். அக்னி முதலிய எல்லா தேவதைகளுக்கும் ஸ்வாமி யாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டுள்ளார். ஆதலால் வாஜபேயயாஜீ யாஜகுதிரையின் மீது வரும் பொழுது யாரைக்கண்டும் மரியாதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நிமித்தமாக கிழே இறங்க வேண்டியதில்லை; அவர் தான் ஸர்வலோக அதிபதி என்று சொல்லப்படுகிறது. இத்துடன் வாஜபேய விஷயம் முடிந்தது.

அனுவாகம்—10

इन्द्रो॑ वृ॒त्रꣳ ह॒त्वा ।

இந்த அனுவாகத்தில் பிண்ட பித்ரு யக்ஞம் சொல்லப்படுகிறது. இந்திரன், விருத்ரன் என்னும் அசுரனைக் கொன்று விட்டு அவனைச் சேர்ந்த அஸுர சைன்யங்களை விரட்டி விட்டு அமாவாசை அன்று தன் இருப்பிடம் வந்தான். பித்ருக்கள் (வெளியே சென்றவர்கள்) அமாவாசைக்கு முதல் நாள் சதுர்தசியே வந்து விட்டார்கள். முதலில் வந்த பித்ருக்களிடம் தர்சயாகம் (தர்ச இஷ்டி) வந்து சேர்ந்தது. முதலில் வந்த பித்ருக்கள் யாகம் செய்து பலனை அடையவேணும் என்று யாகம் நினைத்து பித்ருக்களிடம் வந்தது. இந்திரனுடன் அமாவாசை அன்று வந்த தேவர்கள் யாகத்தை தங்களிடம் கொடுக்கவேணும் என்று பித்ருக்களை பிரார்த்தித்தார்கள். நான் கேட்டதை கொடுத்தால் யாகத்தை கொடுப்பேன் என்று பித்ருக்கள் சொன்னார்கள். தேவதைகளும் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டார்கள். அதாவது அமாவாசை அன்று எங்களுக்கு ஒரு யாகம் செய்ய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதை செய்தால் மறு நாள் சுக்லபக்ஷ பிரதமை அன்று செய்ய வேண்டிய தர்சயாகத்தை (இஷ்டியை) உங்களுக்கு கொடுக்கிறேன் என்றார்கள்.

தேவர்களும் அமாவாசை அன்று பித்ருக்களை உத்தேசித்து பிண்ட பித்ரு யக்ஞம் என்ற கர்மாவை செய்தார்கள். பித்ருக்களும் தர்சயாகத்தை தேவர்களிடம் கொடுத்துவிட்டார்கள். அமாவாசை அன்று பிண்டபித்ரு யக்ஞமும், மறுநாள் தர்சயாகமும் செய்யவேணும் என்று தாத்பர்யம். பிண்டபித்ரு யக்ஞத்தில் ஹோம மந்த்ரம் सोमाय पितृपीताय स्वधानमः என்பதாகும். பித்ருக்களால் அம்ருத ரூபமாக சாப்பிடப்பட்ட ஸோமனை உத்தேசித்து ஹவிஸ் ஹோமம் செய்யப்பட்டது. நமஸ்காரமும் செய்யப்பட்டது என்று ஹோம மந்திரத்துக்கு அர்த்தம். இந்த மந்திரத்தை சொல்லி ஹோமம் செய்வதால் தகப்பன் செய்த ஸோமயாக பலத்தை பிள்ளை அடைகிறான். தகப்பன் மரணம் அடையும் சமயம் பிள்ளையை கூப்பிட்டு இந்த வயல்கள் வீடுகள், பணம் எல்லாவற்றையும் கொடுப்பது போல் ஸோமயாக பலத்தை கொடுப்பதில்லை. ஆகையால் ஹோமம் செய்துதான் தகப்பனுடைய ஸோமயாக பலத்தை அடையலாம். மேலும் இந்த ஹோமம் செய்வதால் வீர்யம் உண்டாகிறது. இந்த இடத்தில் வேதம் வேடிக்கையாக பேசுகிறது. தனக்கு உள்ள இந்திரிய வீரியத்தினால் ஒரு மனைவியை அடைந்து அநுபவிக்கமுடியும். ஹோமம் செய்து பித்ருக்களுடைய அநுகிரஹத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தால் கிடைக்கிற இந்திரிய வீர்யத்தால் இரண்டாவது மனைவியை அடைந்து அனுபவிக்க முடியும் என்று வேதம் சொல்கிறது. அவச்யம் இந்த ஹோமம் செய்ய வேணும் என்று தாத்பர்யம். முன்னொரு சமயம் வாஜச்ரவஸ் என்ற மஹரிஷி இந்த கதையை அறிந்து கொண்டதினால் 2 மனைவிகளை அடைந்து ஸுகமாக இருந்தார். அவர் போல் மற்றவர்களும் இருக்க முடியும்.

2வது ஹோம மந்திரம் अग्नयेकव्यवाहनायस्वधानमः பித்ருக்களுக்கு ஹவிர்பாகத்தை ஸமர்ப்பிக்கிற அக்னிக்கு कव्यवाहन என்று பெயர். இந்த ஹோமத்தினால் பித்ருக்களுடைய அக்னிக்கு திருப்தி. 3வது ஹோம மந்திரம் यमायाङ्गिरस्वते पितृमते स्वधानमः இந்த 3 ஆஹுதிகளையும் தக்ஷிணாக்னியில் ஹோமம் செய்ய வேணும். 3 ஆஹுதி செய்துவிட்டு 3 பிண்டங்கள் வைக்க வேண்டும். மொத்தம் 6 ஆகிறது. 6 ஸங்க்யையினால் 6 ருதுக்களுக்கு ப்ரீதி ஏற்படுகிறது. ருதுக்கள் 6 என்று சில பேரும் மற்றும் சிலர் 5 ருதுக்கள் என்கிறார்கள். [5 என்பவர்கள் ஹேமந்தருதுவில் சிசிரருது அந்தர்கதம் என்கிறார்கள்] மேக்ஷணம் என்பது ஒரு ஸமித்து. ஹவிஸ்ஸை கிளருவதற்கு உபயோகப்படுத்தியது. அந்த ஸமித்தை மந்திரம் சொல்லாமல் அக்னியில் வைக்க வேண்டும். மந்திரம் சொல்லாமல் இருப்பது 6வது ருது இல்லை என்பதற்கு ஒப்பாகும். ஸமித்தை வைத்தது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6 வது ருது உண்டு என்பதற்கு ஒப்பாகும். [பித்ருக்கள் இரண்டு விதம். ஒன்று தேவ பித்ருக்கள், இரண்டாவது மனுஷ்ய பித்ருக்கள். பித்ரு லோகத்திற்கு அதிபதிகளான தேவர்கள், தேவ பித்ருக்கள். மனுஷ்யர்களாக இருந்து போகத்துக்காக பித்ரு லோகத்தை அடைந்தவர்கள் மனுஷ்ய பித்ருக்கள்] 3 ஆஹுதி செய்வதால் தேவ பித்ருக்களுக்கும் 3 பிண்ட ப்ரதானம் செய்வதால் மனுஷ்ய பித்ருக்களுக்கும் ப்ரீதி. பிண்ட ப்ரதானம் செய்ய பூமியில் போடும் தர்ப்பங்கள் ஒரே தரம் நறுக்கப் பட்டதாக இருக்க வேணும். ஏனென்றால் ஒரு தரம் மரணம் அடைந்து பித்ருக்களாக ஆகிறார்கள். 1. பூலோகத்தில் 2. அந்தரிக்ஷலோகம் 3. ஸுவர்லோகம். இவ்விதம் பூலோகத்தில் ஆரம்பித்து 3வது லோகத்தில் பித்ருக்கள் இருப்பதால் 3 பிண்டங்கள் வைக்க வேண்டும். தெற்கு முகமாக இருந்து பிண்ட ப்ரதானம் செய்துவிட்டு வடக்கு முகமாக திரும்பி விடவேண்டும்.

[பித்ருக்கள் சாப்பிடும் போது மற்றவர்கள் பார்ப்பதை விரும்பமாட்டார்கள், வெட்கப்படுவார்கள். லோகத்திலும் பிரபுக்கள் மற்றவர்கள் கண்டு சாப்பிடமாட்டார்கள். பித்ருக்கள் பிண்டங்களில் இருந்து வரும் ஆவியைத்தான் சாப்பிடுகிறார்கள். ஆதலால் ஆவி அடங்கும் வரை காத்திருக்க வேண்டும்]. 3 பிண்டம் வைத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறகு பாத்திரத்தில் மீதமுள்ள சேஷத்தை சாப்பிடலாமா கூடாதா என்று வித்வான்களுக்குள் சர்ச்சை ஏற்பட்டது. சாப்பிட்டால் விரை நெல் சாப்பிட்டது போல் ஆகும். அதனால் மறு வருஷம் அன்னம் இருக்காது, ஆகவே சாப்பிடக் கூடாது என்று சில வித்வான்கள் சொன்னார்கள். எல்லா கர்மாக்களிலும் ஹவிஸ் சேஷபக்ஷணம் உண்டு. இந்த கர்மாவிலும் அவசியம் சேஷ பக்ஷணம் செய்ய வேணும். இல்லை என்றால் இது ஹவிஸ்ஸே இல்லை என்பார்கள். ஆகவே சேஷபக்ஷணம் செய்ய வேணும் என்று சிலர் சொன்னார்கள். சேஷபக்ஷணம் செய்தாலும் தோஷம், சேஷபக்ஷணம் செய்யாவிட்டாலும் தோஷம் என்று விசாரித்ததிலிருந்து கிடைத்தது. இதற்கு வேதம் பதில் சொல்கிறது. என்ன வென்றால் சேஷத்தை முகர்ந்துவிட்டு கீழே போட்டு விடவேண்டும். ஹவிஸ்ஸை முகர்ந்து விட்டதால் சாப்பிட்டது போல் ஆகிறது. மென்று சாப்பிடாததால் சாப்பிடாதது போல் ஆகிறது. ஆதலால் இரண்டு தோஷமும் இல்லை என்று வேதம் அழகாக பதில் கூறுகிறது.

பிண்ட பித்ரு யக்ஞம் நன்றாக நடக்கவில்லை என்றால் பித்ருக்கள் நம்மிடமிருந்து எதையாவது அபஹரித்து செல்வார்கள். நன்றாக நடந்திருந்தால் நமக்கு ஏதாவது கொடுத்து அனுக்ரஹிப்பார்கள். சரியாக நடந்ததா நடக்கவில்லையா என்று நமக்கு தெரியாது. ஆதலால் வஸ்திரத்தி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லிருந்து நூலை எடுத்து பிண்டங்களில் போட வேண்டும். நம்மிடமிருந்து ஏதாவது அபஹரிப்பதனுல் இந்த நூல்களை அபஹரித்துச் செல்லட்டும் என்று அபிப்ராயம், 50 வயதானவர் நூல்களை போடவேண்டும். 50 வயதுக்கு மேல் லோமத்தை (ரோமம்) உடலில் இருந்து எடுத்து போடவேண்டும். [50 வயதுக்கு மேல் பித்ருக்களுக்கு ஸமீபத்தில் நெருங்கி கொண்டு இருக்கிருன் என்று வேதம் சொல்கிறது. பித்ருக்களுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும். நமஸ்காரம் செய்வது பித்ருக்களுக்கு ப்ரியம்] பித்ருக்கள் சாப்பிடக்கூடிய க்ஷீராதிகள் அவர்களுடைய ஜீவாத்மா, அவர்களுடைய பத்னீ அவர்களுடைய கோபம், அவர்கள் கோபத்திஞல்செய்யக்கூடியக்ரூரகர்மா எல்லாவற்றிர்க்கும் நமஸ்காரம் செய்கிறேன். உங்களைச் சேர்ந்தவர்களை நீங்கள் ஆதரியுங்கள். எங்களைச் சேர்ந்தவர்களை நாங்கள் ஆதரிக்கின்ருேம். உங்களைச் சேர்ந்தவர்கள் உங்களை அனுசரிக்கட்டும். எங்களைச் சேர்ந்தவர்கள் எங்களை அனுசரிக்கட்டும். பிண்ட பித்ருயக்ஞம் மனுஷ்ய பித்ருக்களுக்கு ப்ரியம். மறுநாள் பிரதமையில் செய்யக் கூடிய தர்சயாகம் தேவர்களுக்கு ப்ரீதிகரமாக ஆகிறது. பிண்ட பித்ருயக்ஞம் முடிந்த பிறகு ப்ராஜாபத்ய மந்திரத்திஞல் - ப்ரார்த்தனை செய்யவேண்டும். அதனுல் க்ஷேமத்தை அடைவான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நான்காவது ப்ரச்னம்

இந்த ப்ரச்னத்தில் ஸோமயாகங்களில் செய்ய வேண்டியவைகளும், ஸோமயாக ப்ரகரணத்தில் சொல்ல வேண்டியவைகளாகவும், ஆனால் ஏதோ காரணத்தால் அங்கு சொல்ல விட்டுப் போனவைகளாகவும் உள்ள சில ஸோமயாக விஷயங்கள் இங்கு சொல்லப்படுகின்றன.

அநுவாகம்—1

उभये वा एते

ஸோமயாகத்தில் ஸோமலதா என்ற ஒருவித கொடியை பிழிந்து அதை க்ரஹம் என்ற ஒரு மரப் பாத்திரத்தில் கிரஹித்து ஹோமம் செய்வார்கள். அதைப்பற்றிய விவரங்கள் இங்கு சொல்லப்படுகின்றன.

ப்ரம்மா தேவர்களையும் அஸுரர்களையும் ஸ்ருஷ்டி செய்தார். மிக மிக அதிகமாக தேவர்களையும் அசுரர்களையும் ஸ்ருஷ்டி செய்ததால் அந்த கும்பலில் தேவர்கள் எவர்கள், அசுரர்கள் எவர்கள் என்று புரியவில்லை. ஆதலால் தேவர்கள் சரீரத்தை ஸோமலதை (ஸோமக் கொடியாக) செய்து விட்டார். ஸோமக்கொடியாக உள்ளவர்கள் தேவர்கள், மற்றவர்கள் அசுரர்கள் என்று ப்ரம்மா புரிந்து கொண்டார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸோமக்கொடி ரூபமான தேவதைகளின் சரீரத்தை பிழிந்து ஸோமரஸத்தை எடுத்து "தசாபவித்ரம்". என்ற வஸ்திரத்தினுல் சக்கை வேறு, ரஸம் வேறு என்பதாக பிரித்து எடுத்தார்கள். பிரித்து எடுத்த ரஸத்துக்கு க்ரஹங்கள் என்று பெயர்.

குறிப்பு : சில இடங்களில் க்ரஹம் என்ருல் ஸோமரஸத்தை க்ரஹிக்கும் பாத்திரம் என்றும், சில இடங்களில் ஸோமரஸம் என்றும் பொருள். இந்த இடத்தில் ஸோமரஸம் ஆகும்.

ஹவிர்தானம் என்ற ஸோமயாக மண்டபத்தில் ஒரு இடம் உள்ளது. அந்த இடத்தில்தான் ஸோமலதையை பிழிந்து ரஸம் எடுக்கவேண்டும். இந்த கதையை தெரிந்து கொண்டு எவன் ஸோமயாகம் செய்கிருனே அவனை தேவர்கள் நன்ருக அறிந்து கொண்டு தேவலோகத்தில் நன்கு ப்ரஸித்தி அடைய செய்வார்கள். பல க்ரஹங்களில் உபாம்சுக்ரஹம் என்று ஒன்று உள்ளது. அதில் கிரஹிக்க வேண்டிய ஸோமரஸத்தை கிரஹித்து தேவர்கள் யாவரும் திருப்தி அடையட்டும் என்று மந்த்ரம் சொல்லி ஹோமம் செய்கிருர்கள். அதன்படி தேவர்களும் திருப்தி அடைகிருர்கள். தேவர்களின் கொடி ரூபமான சரீரத்தை பிழிந்து ரஸத்தை எடுத்து திவ்ய சரீரத்துடன் கூடிய தேவர்களுக்கு ஸமர்ப்பிக்கிருர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சமஸம் என்ற சில பாத்திரங்கள் இருக்கின்றன. அவைகள் க்ரஹம்போல் உயரமாக இருக்காது நான்கு மூலையுடன் கூடிய கிண்ணம் போல் இருக்கும். அதில் ஸோமரஸத்தை க்ரஹித்து ஹோமம் செய்ய வேண்டும். அதனால் யாகம் செய்பவனுக்கு ஸ்வர்க்க ப்ராப்தி ஏற்படுகிறது. வித்வான்கள் பரஸ்பரம் யக்ஞபாத்ர விஷயமாக சர்ச்சை செய்தார்கள். அதாவது இப்பொழுது யாகசாலையில் இருக்கின்ற பாத்திரங்கள் முன்பு எப்படி இருந்தது. அதாவது பாத்திரங்களின் மூல காரணம் என்ன என்று கேள்வி எழுப்பினார்கள். அதற்கு சில வித்வான்கள் பதில் சொன்னார்கள். அதாவது பாத்திரங்கள் மண் பாத்திரமாக இருக்கின்றன. அதனால் இந்த பாத்திரங்களின் மூலகாரணம் பூமி, அதாவது மண் என்று சொன்னார்கள். அப்படியானால் மனுஷ்யர்களுக்கும் தேவர்களுக்கும் வித்யாஸம் இல்லாமல் போய்விடும். மனுஷ்யர்கள் சமையல் அறையில் மண் பாத்திரத்தை உபயோகிக்கிறார்கள். தேவர்களும் மண் பாத்திரத்தை உபயோகித்தால் மனுஷ்யர்களுக்கும் தேவர்களுக்கும் வித்யாஸம் இல்லாமல் போய்விடும் என்று சில வித்வான்கள் சொன்னார்கள். இதிலிருந்து நமக்கு புரிவது என்னவென்றால் மனுஷ்யர்கள் முன் காலத்தில் மண் பாத்திரத்தை உபயோகித்தார்கள் என்று தெரிகிறது. இப்பவும் சிலபேர்கள் மண் பாத்திரத்தை உபயோகிப்பதை பார்க்கிறோம். தேவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் மனுஷ்யர்களைக் காட்டிலும் தனக்கு மாறுதல் ஏற்படுவதற்காக மரப் பாத்திரங்களைப் பார்த்து அதை தனக்கு உபயோகபடுத்திக் கொண்டார்கள். அதனால் யாகத்தில் தேவர்களுக்கு மரப் பாத்திரங்களை உபயோகிக்க வேண்டும். ஆனாலும் சில பாத்திரங்கள் மண் பாத்திரங்களாக இருக்கின்றன. மண் என்பது பூமி. மண் பாத்திரத்தை உபயோகிப்பதால் யஜமானனுக்கு பூலோக ப்ராப்தி ரூபமான பலன். மரப்பாத்திரங்களை உபயோகிப்பதால் மரம் மேல் நோக்கி வளரும் காரணத்தால் யஜமானனுக்கு மேலே உள்ள ஸ்வர்கலோக ப்ராப்தி பலன்.

யாகத்தில் மரபாத்திரங்களுக்கு வாயவ்ய பாத்திரங்கள் என்று பெயர். யாகத்தில் உள்ள மரபாத்திரங்களை என் பெயரால் குறிப்பிட வேணும் என்று வாயுதேவன் வரம் பெற்றுள்ளார். அதனால் யாகத்தில் உபயோகப்படும் மரப்பாத்திரங்களை வாயவ்ய பாத்திரங்கள் என்று சொல்வார்கள். மண்ணால் செய்யப்பட்ட 4 ஸ்தாலிகள் உள்ளன. ஸ்தாலீ என்றால் மண்ணால் ஆன பெரிய பாத்திரங்கள். அந்த 4 பாத்திரங்களிலும் ஸோமரஸத்தை நிறப்பி வைத்திருப்பார்கள். அவ்வப்பொழுது க்ரஹம் என்ற பாத்திரங்களில் ஸ்தாலீயில் உள்ள ஸோமரஸத்தை க்ரஹித்து ஹோமம் செய்வார்கள். 1 ஆதித்யஸ்தாலீ 2. உக்தியஸ்தாலீ 3 ஆக்ரயணஸ்தாலீ. 4 துருவஸ்தாலீ இந்த நான்கு ஸ்தாலீகளும் என்ன ரூபமாக இருந்தது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்று சில வித்வான்கள் கேள்வி கேட்டார்கள். பூமி பசு உருவம் (வெள்ளை பசு) எடுத்தது. அப்பொழுது 4 ஸ்தாலிகளும் பசுவின் 4 ஸ்தனங்களாக ஆகிவிட்டன. ஆதித்ய ஸ்தாலீ ரூபமான ஸ்தனத்திலிருந்து ஆதித்யர்கள் பசுக்களை கறந்தார்கள். உக்தியஸ்தாலீ ரூபமான ஸ்தனத்திலிருந்து இந்திரன் இந்திரிய சாமர்த்தியத்தைக் கறந்தான். ஆக்ரயண ஸ்தாலீ ரூபமான ஸ்தனத்திலிருந்து விச்வே தேவர்கள் அன்ன ரஸத்தை கறந்தார்கள். த்ருவஸ்தாலீ ரூபமான ஸ்தனத்திலிருந்து மனுஷ்யர்கள் ஆயுஸ்ஸை கறந்தார்கள்; என்று மற்ற வித்வான்கள் பதில் சொன்னார்கள். ஸ்தாலீயில் உள்ள ஸோமரஸத்தை க்ரஹம் என்ற பாத்திரங்களில் எடுத்து ஹோமம் செய்கிறார்கள் [லோகத்திலும் பால் கறக்கும் பாத்திரம் வேறு, நாம் உபயோகப்படுத்தும் பால் பாத்திரம் வேறு என்று காண்கிறோம்]

அநுவாகம்—2

युवꣳ सुराममश्विना ।

ஸௌத்ராமணி என்ற பெயருள்ள ஒரு யாகம் இருக்கிறது. அந்த யாகத்தில் ஸுரா என்ற ரஸத்தை கிரஹித்து ஹோமம் செய்ய வேண்டும். ஹோமத்துக்காக இரண்டு மந்தரங்கள் சொல்லப் பட்டுள்ளன. ஒரு மந்திரத்துக்கு புரோனுவாக்யா என்றும் மற்றொரு மந்திரத்துக்கு யாஜ்யா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்று பெயர். ஹவிஸ்ஸை பாத்திரத்தில் கிரஹிக்கும் பொழுது சொல்ல வேண்டிய மந்தரம் யாஜ்யா. இந்த் ஸௌத்ராமணி யாகத்தில் அச்விநீ, ஸரஸ்வதி, இந்திரன் இந்த மூன்று தேவர்களுக்கும் ஸுரா ஹோமம் செய்யப் படுகிறது. இந்த மூன்று தேவதைகளும் புரோனு வாக்யா மந்திரமும் யாஜ்யா மந்திரமும் ஒன்றே தான், ஏனென்றால் இந்த மூன்று தேவதைகளின் பெயர் இந்த இரண்டு மந்திரங்களில் வந்து விடுகிறது. ஆதலால் 3 தேவர்களுக்கும் ஒரே யாஜ்யானு வாக்யா மந்திரம்.

மேல் கொண்டு இரண்டு மந்த்ரங்கள் சொல் லப்பட்டுள்ளன. ஸுராஹோமம் செய்த பிறகு இரண்டு மந்திரங்களை சொல்லி அக்னியை பிரார்த்திக்க வேண்டும். அக்னி பகவானே உன் முகத்தில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்துள்ளேன். உன் அனுக்ரஹத்தால் எங்களுக்கு வித்யாவானை யும், ஐச்வர்யவானையும், கீர்த்திமானையும், அன்ன தானம் செய்பவனையும், மஹானைகவும் உள்ள புத்ரர்கள் உண்டாக அனுக்கிரஹம் செய்ய வேணும் என்று 1வது மந்த்ர அர்த்தம்.

ஹே அக்னே, உனக்கு பலவிதமான திரவ்யங் களை ஸமர்ப்பித்து உள்ளேன். உன்னை மனப் பூர்வமாக பிரார்த்தனை செய்கிறேன். நீ என்னை அனுக்ரஹம் செய்யவேணும் என்று இரண்டா வது மந்த்ர அர்த்தம். அடுத்தபடியாக இரண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரங்கள், முதல் மந்திரத்தினுல் ஸுரா சேஷத்தை சாப்பிட ஏழு பிராம்மணர்களை தக்ஷிணை கொடுத்து வரித்து அழைத்து வர வேண்டும். இரண்டாவது மந்திரத்தினுல் ஸோம ரஸ சேஷத்தை யஜமானன் (யாகம் செய்கிறவன்) சாப்பிடவேண்டும். ஸுராசேஷத்தை சாப்பிடுவ தற்கு ப்ராம்மணன் கிடைக்காவிட்டால் த்வே ஸ்ருதி என்ற மந்திரத்தை சொல்லி ஸுராசேஷத்தை கரையான் புற்றில் விடவேண்டும்.

இரண்டு மார்க்கங்கள் இருப்பதாக சாஸ்த் ரங்கள் முகமாக அறிந்து இருக்கிறேன். ஒரு மார்க்கம் தேவமார்க்கம். அந்த மார்க்கம் வழி யாக தேவர்கள் பிரம்மலோகம் சென்று திரும்புவ தில்லை (மறு ஜன்மா இல்லை என்று தாத்பர்யம்). எந்த மார்கம் வழியாக மனுஷ்யர்கள் ஸ்வர்க்க லோகம் சென்று புண்யம் முடிந்ததும் திரும்பி விடுகிருர்களோ அது மற்ரேரு மார்கம். இந்த இரண்டு மார்கம் வழியாக மனுஷ்யர்கள் சாஸ்தி ரப்படி நடப்பவர்கள், அவரவர்கள் கர்மானுஷ் டானத்துக்கு தக்கவாறு இரண்டு மார்கங்களில் செல்லுகிருர்கள். இந்த இரண்டு மார்கங்களும் பூமிக்கும் த்யலோகத்துக்கும் நடுவில் உள்ளது என்று இந்த மந்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அடுத்தபடியாக 3 மந்திரங்கள் படிக்கப்பட் டுள்ளன. இந்த மந்திரங்களைச் சொல்லி 3 ஸுரா பாத்திரங்களையும், அவப்ருதஸ்நான காலத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நதீ தீரத்தில் உடைத்து விடவேண்டும். இதனுல் உதரரோகம் (வயிற்றில் நீர் தங்குவது) வராது என்று மந்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

ராஜா அல்லது ராஜாவாக ஆகவேணும் என்று யார் விரும்பி ஸோமயாகம் செய்கிருனே அவனுக்கு ஸோமதேவனுடைய அனுக்கிரஹம் இல்லாவிட்டால் ராஜ்யம் ஸித்திக்காது. ஸோமனே ராஜ்யத்தை ஸ்வீகரித்து விடுவான். அதனுல் 1வது காண்டம் 8வது ப்ரச்னம் 10வது அனுவாகம் अग्नये गृहपतये என்று ஆரம்பித்து விதிக்கப்பட்ட 8 ஹவிஸ்ஸை தயாரித்து 8 இஷ்டிகள் செய்வேணும். அப்படி செய்தால் எல்லா ஐச்வர்யமும் ஸித்திக்கும், ராஜாவாக ஆகிவிடலாம். 8 ஹவிஸ்ஸுக்கும் தேவஸூவாம் ஹவிஸ் என்று பெயர்.

அநுவாகம்—3

उदस्थाद्देवी ।

3வது அநுவாகத்திலும் 4வது அனுவாகத்திலும் அக்னிஹோத்ர ஸம்பந்தமான ப்ராயச்சித்தங்கள் சொல்லப்படுகின்றன. 3வது அநுவாகத்தில் அக்னிஹோத்ரத்திற்காக மாடு கறக்கும் பொழுது, சில ப்ராயச்சித்தங்கள் சொல்லப்படுகின்றன. அக்னிஹோத்ரத்துக்கு பால் கொடுக்-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கும் பசுவை மந்த்ரம் புகழ்ந்து பேசுகிறது. அதாவது அக்னிஹோத்ர பசு பூமிக்கு சமம், பல வர்ணங்களுடன் கூடின பசு. யஜமானனுக்கு நீண்ட ஆயுளை கொடுக்கும். இந்திரன், மித்ரன், வருணன் இவர்களுக்கு ஹவிஸ்ஸை கொடுக்கக் கூடியது என்று அக்னிஹோத்ர பசுவை மந்த்ரம் புகழ்கிறது.

அக்னிஹோத்ரத்திற்கு பால் கறக்க பசுவிடம் வரும்பொழுது பசு எழுந்திருக்காமல் படுத்துக் கொண்டு இருந்தால் उदस्थाद्देवी என்ற மந்திரத்தை சொல்லி எழுப்ப வேண்டும். இது ஒரு ப்ராயச்சித்தம்.

2வது ப்ராயச்சித்தம், பால் கறப்பதற்காக கன்றை ஊட்ட விடும்பொழுது, பசு படுத்துக் கொண்டுவிட்டால் அது தோஷம், யஜமானனுக்கு தாரித்ரியம் வரப்போகிறது என்று சூசகமாகிறது. அதற்கு பிராயச்சித்தமாக அந்த பசுவை கறந்து அந்த பசுவை ஒரு ப்ராம்மணனுக்கு கொடுத்து விடவேணும். அதற்கு பிறகு அந்த ப்ராம்மணன் வீட்டில் சாப்பிடக்கூடாது. அப்படி செய்வதால் தாரித்திரியத்திற்கு காரணமான பாபத்தை பிராம்மணனிடம், சட்டையை உடம்பில் மாட்டுவது போல் பாபத்தை ப்ராம்மணனிடம் போட்டு விடுகிறான். இது ஒரு ப்ராயச்சித்தம். தக்ஷிணையை வாங்குபவன் தக்ஷிணை எவ்வளவு என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறியாமல் வாங்குவதில்லை. ஆதலால் பசுவை் தானம் செய்யும் பொழுது பாலை கறந்து இவ்வளவு அளவு இந்த பசு கறக்கும் என்று ப்ராம்மணனுக்கு காண்பித்து விட்டு பசுவை தானம் செய்யவேணும்.

3வது பிராயச்சித்தம் : அக்னிஹோத்ர ஹோமத்திற்காக பால் கறக்கும்பொழுது பால் துளிகள் பூமியில் விழுந்தால் यदद्य दुग्धम् என்ற மந்த்ரத்தை சொல்லவேணும். மந்த்ரத்தை படிப்பதே தோஷத்திற்கு பரிஹாரம். கீழே கொட்டின பால் வீணாக வேண்டாம். அதேபோல் ஜலத்தில், செடிகளில் சிந்திய பால் வீணாக வேண்டாம். அந்த பால் பசுவின் மடியில் இருக்கட்டும் கன்றின் வயிற்றில் இருக்கட்டும் என்றும், என் வீட்டில் இருக்கட்டும், என்னிடத்தில் இருக்கட்டும் என்று மந்த்ரார்த்தம். பிறகு கையை அலம்ப வேண்டும். ஜலம்தான் பாலாக ஆகிறது. ஆதலால் ஜலத்தை தொடுவது பாலையே ஸ்வீகரிப்பதாக ஆகிறது.

4வது பிராயச்சித்தம் : ஹோமத்திற்காக பால் கறக்கும்பொழுது கீழே கொஞ்சம் சிந்தி விட்டால் மேல்கொண்டு கறக்கக் கூடாது. கீழே சிந்தியபின் பாத்திரத்தில் கொஞ்சம் இருக்கும் பாலுக்கு ஆர்த்தம் என்று பெயர். அதாவது தோஷமுள்ளபால். மேல்கொண்டு கறக்கப்போகும் பால் அனார்த்தம் (தோஷமில்லாத பால்). மேல் கொண்டு அதே பாத்திரத்தில் பால் கறந்தால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எல்லா பாலுமே தோஷமுள்ளதாக ஆகிவிடும். பாத்திரத்தில் உள்ள தோஷமுள்ள பாலை வைத்துக் கொண்டு அந்த பால் அக்னிஹோத்திரத்திற்கு போதுமோ போதாதோ, எப்படி இருந்தாலும் அந்த பாலை வைத்துக்கொண்டு அக்னிஹோத்ரத்தை செய்துவிட்டு மறுபடியும் வேறு மாட்டின் பாலை கறந்து அந்த தோஷமில்லாத பாலால் மறுபடியும் அக்னிஹோத்ரம் செய்ய வேணும். முன் செய்த ஹோமம் நித்யாக்னிஹோத்ரம், பின் செய்த ஹோமம், தோஷத்துக்கு பிராயச்சித்தம்.

5வது பிராயச்சித்தம் : பால் கறந்த பிறகு ஹோமம் செய்ய ஆஹவனீய அக்னியை நோக்கி செல்லும்போது பால் கீழே சிந்திவிட்டால் ஹோமத்தை நிருத்திவிடாமல் சிந்திய இடத்தில் உட்கார்ந்து கொண்டு சிந்தியபாலை பாத்திரத்தில் எடுத்து நித்யாக்னிஹோத்ரத்தை செய்துவிட வேண்டும். கீழே விழுந்து எடுத்த பால் ஹோமத்துக்கு போதுமோ போதாதோ, எப்படி இருந்தாலும் ஹோமம் செய்துவிட வேண்டும். பிறகு வேறு மாட்டை கறந்த பால் எடுத்து அந்த பாலால் மறுபடியும் ஹோமம் செய்ய வேணும். இரண்டாவது ஹோமத்தினுல் முதல் ஹோமத்தினுல் ஏற்பட்ட தோஷம் போய்விடுகிறது. இது ஒரு பிராயச்சித்தம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

6வேது ப்ராயச்சித்தம். எந்த எஜமானன் அக்னிஹோத்ர ஹோமம் செய்ய பாலை கறந்து வந்து கார்ஹபத்ய அக்னியில் பாலை காய்ச்சிக் கொண்டு இருக்கும் பொழுது, ஆகவனீயாக்னி, கார்ஹபத்ய அக்னி இரண்டுக்கும் நடுவில் நாய் சென்று விடுமானால் அந்த தோஷ பரிஹாரத்துக் காக பசுவை அக்னிஹோத்ர சாலையில் நடக்க விடக்கூடாது. நடக்கவிட்டால் கோபத்துடன் இப் பொழுது இருக்கும் அக்னி ருத்ரரூபமாக ஆகி பசுவை ஸ்வீகரித்துவிடுவார். யஜமானனுக்கு பசு ப்ராப்தி இல்லாமல் போய்விடும். நாய் சென்ற இடத்தை அலம்பிவிடலாம் என்று ஜலத்தை கொட்டினால் ஜலம் அக்னிக்கு சாப்பிட கூடிய வஸ்து இல்லை. இரண்டு அக்னிக்கும் சாப்பிடக் கூடாத வஸ்துவை கொடுத்ததாக ஆகும். ஆத லால், தோஷ பரிஹாரத்துக்கு கார்ஹபத்ய அக்னி ஸ்தானத்திலிருந்து பஸ்மம் (விபூதி) எடுத்து ஆஹவநீய அக்னிவரை தூவிக்கொண்டு செல்ல வேண்டும். इदं विष्णुः विचक्रमे என்ற மந்திரத்தை சொல்ல வேண்டும். யக்ஞரூபியான விஷ்ணு யக்ஞத்தில் உள்ள தோஷத்தை நிவ்ருத்தி செய் வார். நாய் காலடியை பஸ்மத்தைபோட்டு மறைக்க வேண்டும். இதுதான் நாய் செய்த தோஷத்துக்கு பரிஹாரம். [இப்பொழுதும் லோகத்தில் சிஷ்டர் கள், சாப்பிடும் பொழுது அன்னத்தில் கேசம் இருந்தால் அதை எடுத்து விட்டு அன்ன சுத்திக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காக பஸ்மாவை (விபூதியை) அன்னத்தில் துவிக் கொள்கிறுர்கள்].

அநுவாகம்—4

निवाएतस्याहवनीयः

இந்த அநுவாகத்தில் அக்னிஹோத்ர கர்மா வில், அக்னி ஸம்பந்தமான தோஷம் ஏற்பட் டால் அதற்கு செய்யவேண்டிய பிராயச்சித்தங் கள் சொல்லப்படுகின்றன.

1வது ப்ராயச்சித்தம். சாயங்கால அக்னி ஹோத்ரம் செய்வதற்கு கார்ஹபத்ய அக்னியில் இருந்து ஆஹவனீயதேசத்தில் கொஞ்சம் அக்னியை போட்டு அக்னியை விருத்தி செய்ய வேண்டும். இந்த காரியத்தை சூரியன் அஸ்த மனமாவதற்கு முன் செய்யவேண்டும். ஒரு வேளை ஆஹவானீய அக்னி பிரதிஷ்டை செய்வதற்குள் சூரியன் அஸ்தமனமாகிவிட்டால் தோஷமாக ஆகும். அதாவது ஆஹவனீய அக்னி கார்ஹ பத்ய அக்னியை அலக்ஷ்யம் செய்வார். கார்ஹ பத்ய அக்னி ஆஹவனீய அக்னியை அலக்ஷ்யம் செய்வார். ஆகவே இரண்டு அக்னியும் நமக்கு பலனை கொடுக்கமாட்டார்கள். இதற்கு பரிஹார மாக ஸுவர்ணத்தை (தங்கத்தை) தர்பையால் கட்டி முன்னுல் ஒருவர் பிடித்து செல்லவேண்டும். ஸுவர்ணத்துக்குபின்னுல் ஆஹவனீய அக்னியை ப்ரதிஷ்டை செய்ய எடுத்துச் செல்ல வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதற்கு பின்னால் அக்னிஹோத்ர ஹவிஸ்ஸை கொண்டு செல்லவேண்டும். ஸுவர்ணம் சூரிய ஜ்யோதிஸ்ஸுக்கு சமானம். அதை அக்னிக்கு முன்னால் கொண்டு செல்வதால் சூரியன் அஸ்தமனமாகவில்லை இருக்கிறான் என்று தாத்பர்யம். அக்னிக்கு பின்னால் அக்னிஹோத்ர ஹவிஸ்ஸை கொண்டு செல்வதால் அக்னிக்கு பிரியமான பொருளோடு செல்கிறான். அக்னி ஸந்தோஷத்துடன் இருப்பதாக தாத்பர்யம். ஸுவர்ணத்துக்கு பின்னால் அக்னியை எடுத்துச்செல்பவன், தன்னுடைய ரிஷி பரம்பரையை அறிந்தவனாக இருக்க வேணும். அபிவாதயே தெரிந்தவனாக இருக்க வேணும்.

[வேதமறிந்த பிராம்மணன் சரீரத்தில் எல்லா தேவதைகளும் இருப்பதால் எல்லா தேவதைகளும் அக்னியை எடுத்துச் செல்வதாக தாத்பர்யம்] அக்னிக்கு பின்னால் அக்னிஹோத்ர ஹவிஸ்ஸை எடுத்துச் செல்பவன் ஹவிஸ்ஸை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துவிட்டு, மூச்சை அடக்கிக் கொண்டு சரீரத்துக்கு ச்ரமம் ஏற்படும் வரை இருக்கவேணும். அப்படி செய்வது எதற்கு என்றால் சூரியன் அஸ்தமிப்பதற்குள் அக்னிப்ரதிஷ்டை செய்யவேணும் என்ற வ்ரதம் நஷ்டமாகி விட்டது அல்லவா, அது போல் நானும் இறந்து நஷ்டமாக ஆகிவிட்டேன் என்று மூச்சை அடக்கி தெரிவிக்கிறான். மிகவும் நெருங்கிய நண்பன் இறந்துவிட்டால் மற்றொரு நண்பன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உடன் கட்டை ஏறுகிருன் அல்லவா, அதுபோல் இங்கு நடப்பதாக தாத்பர்யம். அடக்கிய ச்வாஸத்தை வெளியே விட்டு விட்டு, முன்போல் மூச்சுவிட்டுக்கொண்டு அக்னிஹோத்ரம் செய்ய வேணும். அப்படி செய்வதால் தனக்கும் அக்னி ஹோத்ர யாகத்துக்கும் ஏற்பட்ட விநாசத்தை நீக்கிவிடுகிருன். சூரிய அஸ்தமனத்துக்கு பிறகு ஆஹவனீய அக்னி ப்ரதிஷ்டை செய்து ஹோமம் செய்தால் அந்த ஹோமபலத்தை வருணன் ஸ்வீகரித்துக்கொள்கிருன். வருணனுக்காக இஷ்டி செய்து ஹவிர்பாகத்தை கொடுத்து அக்னி ஹோத்ர பலத்தை நாம் வருணனிடமிருந்து வாங்கிக் கொள்ளவேண்டும். இரவுக்கு தேவதை வருணன் என்று சொல்லப்படுகிறது.

2வது ப்ராயச்சித்தம்: காலையில் அக்னி ஹோத்ரம் செய்ய சூரியன் உதிப்பதற்குள் அக்னி ப்ரதிஷ்டை செய்ய வேணும். அஜாக்கிரதையாக இருந்து அக்னி ப்ரதிஷ்டை செய்வதற்குள் சூர்ய உதயம் ஆகிவிட்டால் அது தோஷம். அந்த தோஷநிவிருத்தி செய்யவேணும். அதாவது அக்னி ப்ரதிஷ்டை செய்ய அக்னியை எடுத்துச் செல்லும் பொழுது ஆஜ்யத்தை அக்னிக்கு முன்ளுல் கொண்டு செல்ல வேண்டும். ஆஜ்யத்திளுல் அக்னி ஜ்வாலை விருத்தி அடைகிறது. அதளுல் அக்னிக்கு இருப்பிடம் ஆஜ்யம் என்று சொல்லப்படுகிறது. அதளுல் ஆஜ்யத்தை முன்ளுல் எடுத்துச் செல்ல வேண்டும். அக்னிக்கு பின்ளுல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னிஹோத்ர ஹவிஸ்ஸை கொண்டு செல்ல வேணும். ஹவிஸ் அக்னிக்கு பிரியமான ஆகாரம். பிரியமான ஆகாரத்துடன் அக்னி ப்ரதிஷ்டை செய்ய சொல்வதாக தாத்பர்யம். ஸூர்ய உதயத்துக்குள் அக்னி ப்ரதிஷ்டை செய்யாததால் நியமத்துக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதை அநுசரித்து தனக்கும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது போல், அதாவது தானும் இறந்துவிட்டதுபோல், அதாவது உடன்கட்டை ஏறிவிட்டது போல் பாவித்து மூச்சை இழுத்துக் கொண்டு அடக்கி சிரமம் ஏற்படும்வரை கிரஹிக்க வேண்டும். பிறகு மூச்சு விட்டுக்கொண்டு எழுந்து ஹோமம் செய்ய வேணும். 1வது ப்ராயச்சித்தத்தில் சொன்ன விஷயங்கள் எல்லாம் 2வது ப்ராயச்சித்தத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காலம் தவறி செய்யப்படும் அக்னிஹோத்ர பலத்தை மித்ர தேவதை ஸ்வீகரித்து விடுகிறார். பகலுக்கு தேவதை மித்ரன். ஆதலால் அவர் ஸ்வீகரித்து விடுகிறார். அதனால் மித்ர தேவதைக்கு இஷ்டி செய்து, ஹவிர்பாகம் கொடுத்து, அவரிடமிருந்து அக்னிஹோத்ர பலத்தை நாம் வாங்கிக் கொள்ள வேண்டும். எவன் காலம் தவறி அக்னிஹோத்ரம் செய்கிறானோ, அவனுக்கு மறுநாள் பொழுது விடியாது. அந்த தோஷ நிவ்ருத்திக்காக उपा: क्तेना என்ற மந்திரத்தை சொல்லி மேற்கு பார்த்து உட்கார்ந்து ஆஜ்ய ஹோமம் செய்ய வேணும், அதனால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தோஷநிவ்ருத்தி ஆகி மறுநாள் பொழுது விடியும். நித்யப்படியும் பொழுது விடியும்.

3வது பிராயச்சித்தம்: கார்ஹபத்ய அக்னியில் இருந்து கொஞ்சம் அக்னியை எடுத்து ஆஹவனீய ஸ்தானத்தில் ப்ரதிஷ்டை செய்து அக்னிஹோத்ரம் செய்யப்படுகிறது. அப்படியிருக்க ஏதாவது ஒரு நாள் ஆஹவனீய அக்னி இருக்கும் பொழுது கார்ஹபத்ய அக்னி அணைந்துவிட்டால் கார்ஹபத்ய அக்னியை தயாரித்து ஹோமம் செய்தால் தோஷம். ஏனென்றால் கார்ஹபத்ய அக்னிக்கும் ஆஹவனீய அக்னிக்கும் தொடர்பு வேண்டும். கார்ஹபத்ய அக்னியிலிருந்து தயார் செய்த ஆஹவனீய அக்னிக்கு தொடர்பு உண்டு. (ஜன்ய ஜனக ஸம்பந்தம்) அப்படி இல்லாமல் கார்ஹபத்யத்திலிருந்து ஆஹவனீய அக்னி தயார் செய்த பிறகு கார்ஹபத்ய அக்னி அணைந்துவிட்டதே என்று நினைத்து வேறு கார்ஹபத்ய அக்னி அரணியை கடைந்து தயாரித்தால் முன் சொன்னபடி ஆஹவனீயத்துக்கும் கார்ஹபத்யத்துக்கும் (ஜன்ய ஜனன ஸம்பந்தம்) தொடர்ந்து வராது. அதனுல் கார்ஹபத்யம் அணைந்தால் ஆஹவனீயத்தையும் அணைத்து விட்டு புதிதாக அரணியை கடைந்து கார்ஹபத்ய அக்னி ப்ரதிஷ்டை செய்து அதிலிருந்து அக்னியை எடுத்து ஆஹவனீய அக்னியை ப்ரதிஷ்டை செய்யவேணும். இல்லாவிட்டால் வெவ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேறு அக்னியாக ஆகிவிடும். அக்னிக்குள் தொடர்பு இருக்காது. அக்னிக்குள் விரோதம் உண்டாகும். அதை அநுசரித்து யஜமானனுக்கும் விரோதிகள் உண்டாவார்கள். அந்த தோஷம் இல்லாமல் இருக்க கார்ஹபத்ய அக்னி அணைந்து விட்டால் ஆஹவனீய அக்னியையும் அணைத்து புதிதாக கார்ஹபத்ய அக்னியை கடைந்து எடுத்து அதிலிருந்து ஆஹவனீய அக்னியை தயாரிக்க வேணும். அப்பொழுதுதான் முன் சொன்ன தோஷம் வராது. அக்னிகளுக்குள் தொடர்பு இருக்கும்.

इतः प्रथमं जज्ञे अग्निः......प्रजामाशासिहि ।

இந்த மந்திரத்தைச் சொல்லி அக்னியை கடைந்து எடுக்க வேணடும். மந்திரத்தில் காயத்ரீ திருஷ்டுப்-ஜகதீ என்ற சந்தஸ்ஸுகளின் பெயர் இருப்பதால் சந்தஸ்ஸுகளே அக்னியை தயாரிப்பதாக ஆகின்றன. கார்ஹபத்ய அக்னியின் அநுக்ரஹத்தால் பசுக்கள் கிடைக்கின்றன. ஆதலால் கார்ஹபத்ய அக்னியை கடைந்து எடுக்க வேணும். கார்ஹபத்ய அக்னி அணைந்துவிட்டால் பசுக்களுக்கு நாசம் வரும். ஆதலால் इषे रय्यै रमस्व... रमयति என்ற மந்திரத்தை சொல்லவேணும். மந்திர அர்த்தம் என்னுடைய வீட்டில் அன்ன ஸ்ம்ருத்திக்காகவும், தன ஸம்ருத்திக்காகவும், பல ஸம்ருத்திக்காகவும், யசஸ்ஸுக்காகவும், க்ஷீரம் முதல

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லிய ரஸ ஸம்ருத்திக்காகவும் நான் க்ருஹஸ்வாமி யாக இருப்பதற்கும், கார்ஹபத்ய அக்னி நிரந்தர மாக என் வீட்டில் பிரகாசிக்கட்டும் என்று மந்த் ரார்த்தம்.

4வது ப்ராயச்சித்தம் : ஆஹவனீய அக்னிக் கும்-கார்ஹபத்ய அக்னிக்கும் நடுவில் வண்டியோ ரதமோ சென்று விட்டால் செய்யப் போகிற யக்ஞம் விச்சின்னமாக ஆகிவிடும். பலத்தை கொடுக்காது. ஆதலால் இப்பொழுது உள்ள ஆஹவனீய அக்னியை அணைத்து விட்டு வேறு ஆஹவனீய அக்னியை கார்ஹபத்ய அக்னியி லிருந்து வைத்து யக்ஞம் செய்யவேணும். கார்ஹ பத்ய அக்னி பிதாஸ்தானம். ஆஹவனீய அக்னி புத்ரஸ்தானம். இரண்டுக்கும் நடுவில் சென்றால் இரண்டுக்கும் உள்ள துடர்பு போய்விடும். [இதை அனுசரித்துதான், தர்ம சாஸ்திரத்தில் பிதா புத்ரன் நடுவே, பிதாக்களுக்கு நடுவே தம்பதிகளுக்கு நடுவே, சிவனுக்கும் நந்திக்கும் நடுவே போகக்கூடாது என்று சொல்லப்படு கிறது]. நடுவே போனால் விச்சேதம் (அறுந்து வீடும்) ஏற்படும். விச்சேத நிவ்ருத்திக்காக பதிக்ருத் இஷ்டி செய்யவேணும். இந்த இஷ்டி செய்வதால் நல்ல மார்கத்தை அக்னிபகவான் காண்பித்துக் கொடுப்பார். இந்த இஷ்டிக்கு தக்ஷிணையாக வண்டி இழுக்கும் மாட்டை கொடுக்க வேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம் — 5

यस्य॑ प्रा॒तस्स॑वने

இந்த அனுவாகத்தில் ஸோமயாக ஸம்பந்தமான பிராயச்சித்தம் சொல்லப்படுகிறது. ஸோமயாகத்தில் மூன்று ஸவனம் இருக்கிறது. காலையில் ப்ராதஸ்ஸவனம். நடுபகலில் மாத்யந்தின ஸவனம். சாயங்காலம் திருதீயஸவனம், 3 காலத்திலும் ஸோமலதையை பிழிந்து அந்த ரஸத்தினும் ஹோமம் செய்யவேணும். ப்ராதஸ் ஸவன ஹோமத்துக்கு பிழிந்த ஸோமரஸம் ப்ராதஸ்ஸவனத்திலேயே தீர்ந்து விடவேணும். அதே போல் மாத்யந்தின ஸவனத்துக்காக பிழிந்த ரஸம் அந்த ஸவனத்திலேயே தீர்ந்து விடவேணும். மிச்சப்பட கூடாது. மிச்சமானுல் அது தோஷம். பகலும் இரவும் கூடும் ஸமயம் அதாவது ஸந்தியாகாலத்தில் வேதம் சொன்னுல் எவ்வளவு பாபமோ அவ்வளவு பாபம் ஸோமம் மிச்சப்படுவது. ப்ராதஸ்ஸவனம் முடிந்து ஸோம ரஸம் மிச்சமானுல் அந்த காலம் ப்ராதஸ்ஸவனம் மாத்யந்தினஸவன ஸந்திகாலம். அதே போல் மாத்தியந்தின ஸவனம் முடிந்த பிறகு ஸோம ரஸம் மிச்சமானுல் அந்த காலம் மாத்யந்தின ஸவனம் திருதீயஸவன ஸந்திகாலம். அந்த காலத்தில் ஸோமரஸம் மிச்சமானுல் ஸந்தியா காலத்தில் வேதம் சொன்ன தோஷத்துக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸமமான தோஷம் வரும். அதற்கு பரிகாரமாக गौर्धयति मरुतां என்ற ருக்கில் ஸ்தோத்ரம் செய்ய வேணும். 10 சமஸ பாத்திரங்களுள் ஹோதாவின் சமஸ பாத்திரத்தில் மிச்சமான ஸோமரஸத்தை க்ரஹிக்க வேண்டும். ஹோதா சஸ்திர மந்திரத்தை படிக்க வேணும். அதனால் தோஷ நிவிருத்தி. மாத்தியந்தினஸவன ஹோமத்துக்கு பிறகு ஸோமரஸம் மிச்சமானால் गौरिवीत साम கானம் செய்யவேணும். ग॰महूँ असि என்ற மந்திரத்தை சொல்ல வேணும். அந்த மந்திரத்தில் அளவுக்கு மீறிய அக்ஷரங்கள் இருப்பதால் அளவுக்கு மீறி மிஞ்சிய ஸோமரஸ தோஷத்துக்கு பரிஹாரமாகிறது.

திருதீயஸவன ஹோமம் முடிந்த பிறகு ஸோமரஸம் மிச்சமானால் அக்னிஷ்டோம யாகத்தை விட பெரியதான உக்திய யாகத்தை செய்ய வேணும். அதற்கும் பிறகு ஸோமரஸம் மிச்சமானால் உக்தியத்தைவிட பெரியதான அதிராத்ர யாகத்தை அனுஷ்டிக்க வேணும். அதிராத்ர யாகம் முடிந்து ஸோமரஸம் மிச்சமானால் என்ன பரிஹாரம் செய்வது என்று சொல்வது மிக்க சிரமம். அதை அறியமுடியாது என்று வேதம் சொல்லிவிட்டு லோக க்ஷேமத்துக்கு பரிஹாரம் அவச்யம் சொல்லியாஹவேணும் என்று தீர்மானித்து ப்ருஹத்ஸாம கானம் செய்தால் அதிரிக்த தோஷத்துக்கு பரிகாரம் ஆகும் என்று வேதம் சொல்லி இருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—6

एकैकोवैजनतायामिन्द्रः

ஸோம யாகத்தில் பிரதான தேவதை இந்திரன் ஒருவன்தான் இருக்கிறுன். எனக்கு இந்த இந்திரன், அநுக்ரஹம் வேணும் என்று 2 பேர்கள் ஒரேசமயத்தில் ஸோம யாகம் செய்தால் ஒருவனுக்கு இந்திரன் அநுக்ரஹம் இருக்கும் மற்றவனுக்கு இருக்காது. இதை அனுசரித்து இருவர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்படும். ஒருவனுக்கு யாக பலன் கிடைக்கும், மற்றவனுக்கு கிடைக்காது. [லோகத்திலும் ஒரு அதிகாரியை இரண்டு பேர்கள் ஆச்ரயிக்கிருர்கள். யார்பக்கம் அதிகாரி இருக்கிருனே அவனுக்கு அனுகூலம்] அது போல்தான் யாகத்திலும். ஒரு இந்திரனை குறித்து இருவர் யாகம் செய்தால் யார் பக்கம் இந்திரன் இருக்கிருனே அவனுக்கு யாகபலம். மற்றவனுக்கு யாக பலம் இல்லை. ஆதலால் பெரியவர்கள் சொல்கிருர்கள். மற்றவர் யாகம் ஆரம்பிப்பதற்கு முன் நாம் ஆரம்பிக்க வேணும். அதிகாரியை மற்றவன் பார்ப்பதற்கு முன் நாம் பார்ப்பது போல் என்று சொல்கிருர்கள். அது ஒருவழி. ஆஜ்யஸ்தோத்ரம் என்று சில ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. அதில் एति, एति என்று வரக்கூடிய ருக்குகளை சேர்த்து சொல்ல வேண்டும். அப்படி செய்தால் இந்திரனின் அனுக்ரஹம் கிட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மருத்தேவதாகமான ருக்குகளை சொல்ல வேணும். இந்திரனை அடைய பலவாருன மருத் தேவதைகள் அனுகூலம் செய்வார்கள். ப்ருஹத் ஸாம, ரதந்தரஸாம, அபிவர்த்த ஸாம, இவை களை கானம் செய்யவேணும். இரண்டு பேர்கள் ஒரே காலத்தில் யாகம் செய்தால், இந்திரனை தன்பக்கம் இழுக்க, ஒருவன் அக்னிஷ்டோமயாகம் செய்வதாக தெரிந்தால் மற்ருருவன் அதைவிட பெரியதான உக்த்ய யாகத்தை அனுஷ்டிக்க வேணும். மற்றவன் உக்த்ய யாகம் செய்வதாக தெரிந்தால் இன்னெருவன் அதைவிட பெரிய தான அதிராத்ரயாகம் செய்ய வேணும். இந்தமாதிரி செய்தால் பெரிய யாகம் செய்கிறவ னிடம் இந்திரன் வருவான், பலனை கொடுப்பான். மற்றவன் யாகத்தில் சொல்லக்கூடிய சந்தஸ் ஸுக்கு பலன் இல்லாமல் செய்வதற்கு संवेशायत्वोप-वेशायत्वा என்ற மந்திரத்தை சொல்லவேணும். அப்படி செய்வதால்தான் சந்தஸ்ஸுக்கு பலன் கிடைக்கும். அத்வர்யு தனக்கு பிராணவாயு, அபானவாயு இவைகள் சரியாக இயங்க प्राणापानौ मृत्योर्मापातम् என்ற மந்திரத்தை சொல்லவேணும். இந்த மந்திரத்தை சொன்னுல் 100 வயதுக்கு முன்னுல் பிராணுபானங்கள் வெளியில் சென்று விடாது.

ஸத்ர யாகத்தில் ஸம்பந்தப்பட்ட எல்லோ ருமே ருத்விக்குகள். எல்லோருமே யஜமானர்கள் (தீக்ஷிதர்கள்) தீக்ஷிதர்களுக்குள் ஒருவர் இறந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விட்டால் எல்லோருக்குமே வருத்தம் கஷ்டம் இருக்கும். யக்ஞத்துக்கு நாசம் வரும். அந்த இறந்த தீக்ஷிதரின் சரீரத்தை மற்ற தீக்ஷிதர்கள் அவமதித்து தூரத்தில் எரிந்துவிட்டு யாகம் நடத்தினுல் ப்ரம்மஹத்தி முதலிய க்ரூரகர்மா செய்தவர்களுக்கு உள்ள நரக லோகம் மற்ற தீக்ஷிதர்களுக்கு கிடைக்கும், அதனுல் அப்படி செய்யக் கூடாது. இறந்துபோன தீக்ஷிதரின் புத்ரனை கூப்பிட்டு அவருக்கு செய்ய வேண்டிய கிரிகைகளை செய்யச் சொல்ல வேணும். வேதிக்கு தெற்கு பாகத்தில் ம்ருத சரீரத்தை வைத்து भूमि भूम्ना என்ற பூஸூக்தத்தை ஜபிக்க வேணும். பூமியிடமே இந்த சரீரத்தை ஸமர்பித்தாக ஆகிறது. ஹோதா என்று ருத்விக் ப்ராசினு வீதம் போட்டுக் கொண்டு யமதேவதாகமான ருக்குகளை சொல்லிக் கொண்டு தீக்ஷிதரின் ம்ருத சரீரத்தை, ப்ரதக்ஷிணமாக மூன்று தரமும், அப்ரதக்ஷிணமாக மூன்றுதரமும் சுற்றவேணும். வஸ்திரத்தை உதறுவது போன்ற ப்ரேதத்துக்கு செய்யவேண்டிய எல்லா உபசாரங்களையும் செய்யவேண்டும். பகிஷ்பவமான ஸ்தோத்திரத்தில் अग्न आयूंषि पवसे என்ற ருக்கை முதலில் ஆரம்பிக்க வேண்டும். காயத்ர ஸாமாவுக்கு பதில் ரதந்தர ஸாமாவை கானம் செய்யவேணும். அதனுல் மற்ற தீக்ஷிதர்களுக்கு ஆயிஸ் கெட்டியாகிறது. க்ரூரகர்மா செய்யாததால் அதற்கு உள்ள தோஷமும் இல்லை புண்யலோகம் கிடைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—7

असुर्यं वा एतस्मात् ।

1வது ப்ராயச்சித்தம். யக்ஞீயமான மரத்தை வெட்டி பட்டைகளை செதுக்கி எட்டு கோணங்கள் வரும்படி இழைத்து, ஆஹவனீய அக்னிக்கு கிழக்கே நடுவார்கள். அந்த மரத்துக்கு யூபம் என்று பெயர். அந்த யூபத்தில் ஆட்டை கட்டி விட்டு மந்தரங்கள் சொல்லி அந்த ஆட்டை தேவதைகளுக்கு ஸமர்பிப்பார்கள். பல நாட்கள் நடக்கக்கூடிய யாகமும் உண்டு. பல நாட்கள் பூமியில் நட்டுவைத்த அந்த மரம் அதாவது பட்டை உரித்த யூபம் என்றும் மரம் தளிர்விட்டு முளைத்து விட்டால் தோஷம். அதாவது அஸுரர்களுக்கு நன்மை, நமக்கு தீமை. நம்மிடம் உள்ள சக்தியும், பசுக்களும் நம்மைவிட்டு விலகிவிடும். அதற்கு பரிஹாரமாக, த்வஷ்டா என்ற தேவதையை உத்தேசித்து பலவர்ணம் உள்ள அஜத்தை வைத்து யாகம் செய்யவேணும். த்வஷ்டாவின் அனுக்ரஹத்தால் நம்மைவிட்டு பசுக்களும் சக்தியும் விலகாது.

2வது ப்ராயச்சித்தம். தீக்ஷிதர்களுடைய அக்னி அணைந்துவிட்டால் தீக்ஷிதர்களுக்கு விநாசம் வரும். ஆஹவனீய அக்னி அணைந்து விட்டால் அரணியை கடைந்து ஆஹவனீய அக்னி தயாரிக்கக்கூடாது. அப்படி தயாரித்தால் கார்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹபத்ய அக்னியிலிருந்து தயாரித்த அக்னியாக ஆகாது. ஆஹவனீய அக்னியும் கார்ஹபத்ய அக்னியும் வெவ்வெறு அக்னியாக ஆகிவிடும். அதனுல் அக்னிகளுக்குள் கலகம் உண்டாகும். அதை அனுசரித்து யஜமானனுக்கும் கலகம் உண்டாகும். ஆகவே ஆஹவனீய அக்னி அணைந்தால் ஆக்னீத்ர அக்னியில் இருந்து அக்னி எடுத்து கொள்ளவேணும். ஆக்னீத்ர அக்னி அணைந்து விட்டால் கார்ஹபத்ய அக்னியிலிருந்து அக்னி எடுத்துக்கொள்ளவேண்டும். கார்ஹபத்ய அக்னி அணைந்து விட்டால், எந்த கட்டையில் கார்ஹபத்ய அக்னி கடைசியாக அணைந்ததோ அந்த கட்டையை கடைந்து அக்னி எடுக்கவேணும். [லோகத்தில் பொருள் எந்த இடத்தில் கெட்டுப் போனதோ அந்த இடத்தில் தேடுகிருன்] அது போல் கார்ஹபத்ய அக்னி எந்த கட்டையில் கடைசியாக மறைந்ததோ அந்தக் கட்டையை கடைந்து அக்னி எடுப்பது உசிதம். அக்னியை கடைந்து எடுக்க மரத்தூளை போட்டு கடைந்தால் அக்னி சீக்கிரம் வரும். இவ்விதம் முறைப்படி செய்தால் முன் சொன்ன தோஷம் (கலகம்) வராது.

3வது ப்ராயச்சித்தம் : ஸோமயாகத்தில் ஸோமரஸ யாகம் செய்வதற்கு ஸோமலதையை பிழிந்து எடுத்த ஸோமரஸம் ஹோமத்துக்கு போதுமானதாக இல்லாவிட்டால் ஸுவர்ணத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டாக வெட்டி ஒரு துண்டை ஸோம ரஸம் எடுக்கப்பட்டுள்ள சக்கையில் போட்டு மறு படியும் பிழிந்து தேவையான ரஸத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றொரு ஸுவர்ண துண்டை சமஸம் என்ற மரப்பாத்திரத்தில் உள்ள ஸோமரஸத்தில் போட்டு ஹோமம் செய்ய வேணும். ஸோமலதையை அறைத்து பிழியும் பொழுது அதனுடைய சரீரம் விலகி சென்றது. அது ஸுவர்ணமாக ஆனது. ஆதலால் ஸோமலதை சக்கையில் ஸுவர்ணத்தை போட்டு பிழிந்தால் ஸோமரஸமே வந்துவிட்டதாக தாத்பர்யம்.

ஸோமலதையை ஸம்பாதித்து யாகசாலையில் வைத்திருப்பார்கள். யாகத்துக்கு தேவையான ஸோமலதையை ஒரு பிராம்மணன் மூலமாக விலைக்கு வாங்க வேண்டும். அவ்விதம் விலைக்கு வாங்குவதற்குள் ஸோமலதையை யாராவது அபகரித்துவிட்டால் வேறு ஸோமலதையை விலைக்கு வாங்க வேண்டும். வேறு விலைக்கு வாங்குவது தான் கெட்டு போனதிற்கு பரிஹாரம். தனியாக வேறு பரிஹாரமில்லை.

ஸோமலதையை விலைக்கு வாங்கிய பிறகு யாராவது அபஹரித்து விட்டால், ஆதாரா என்ற கொடியையோ, பால்குன (அருகம்புல் முதலிய) கொடிகளையோ பிரதிநிதியாக வைத்து பிழிந்து ரஸத்தை எடுத்து ஹோமம் செய்ய வேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முன் காலத்தில் காயத்ரீ சாந்தஸ் பக்ஷி ரூபம் எடுத்துக் கொண்டு ஸோமலதையை வாயில் எடுத்துச் செல்லும் பொழுது ஒரு அம்சம் பூமியில் விழுந்தது. அது ஆதாரா என்ற கொடியாக முளைத்தது. விருத்ராசுரனை இந்திரன் கொல்லும் பொழுது அவனுடைய தோல் ஒரு பக்கம் விழுந்தது. அது பால்குன என்ற கொடியாக முளைத்தது. ஆதலால் இவைகளை ஸோமலதைக்கு பதிலாக வைத்துக் கொள்ளலாம். அருகம்புல் பசுவுக்கு பிரியம். பசுவை கொடுப்பவர் ஸோமன். ஆதலால் பால்குன கொடிக்கும் ஸோமலதைக்கும் ஸம்பந்தம் இருக்கிறது ஆதலால் அதுவும் பிரதிநிதியாக ஆகிறது.

ஆதாரா ரஸத்தையோ, பால்குன ரஸத்தையோ பிரதிநிதியாக வைத்துக் கொண்டு ஹோமம் செய்பவன், ப்ராதஸ்ஸவனத்தில் காய்ச்சின பாலை அந்த ரஸத்துடன் கலந்து ஹோமம் செய்ய வேண்டும். மாத்யந்தின ஸவனத்தில் தயிரை கலந்து ஹோமம் செய்ய வேண்டும். திருதீய ஸவனத்தில் தயிரை கடைந்து வெண்ணெய் உண்டாவதற்கு முன்னால் உள்ள மோரை கலந்து ஹோமம் செய்ய வேண்டும். யஜமானன் உக்த்ய யாகமோ, மற்ற எந்த யாகம் ஆரம்பித்து செய்துகொண்டு இருந்தாலும் அதை நிறுத்தி விட்டு அக்னிஷ்டோம யாகத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஸோமலதை கெட்டுப்போனதற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இது பிராயச்சித்தமாக ஆகிறது. முன் வரிக்கப் பட்ட ருத்விக்குகளே பிராயச்சித்தம் செய்ய ருத் விக்குகளாக இருக்க வேண்டும். எல்லா ருத்விக்கு களுக்குமாக ஒரே பசுவை தக்ஷிணையாக கொடுக்க வேண்டும். இவ்வளவும் பிராயச்சித்த கர்மா. இதை முடித்துவிட்டு மறுபடியும் ஸோமலதையை விலைக்கு வாங்கி, ஸங்கல்பித்த யாகத்தை தொடர்ந்து நடத்த வேண்டும்.

ஸத்ரயாக ஸம்பந்தமான பிராயச்சித்தம் :

எந்த யஜமானன் ஸத்ரயாகம் செய்வதாக ஸங்கல்பிக்கிறானோ, அவன் தன்னையே தேவதை களுக்கு ஸமர்ப்பிக்கிறான். அவன் ஸங்கல்பித்த படி ஸத்ரயாகம் செய்யாவிட்டால் தோஷம். அந்த தோஷத்துக்குப் பரிகாரமாக ஸோமயாகம் செய்ய வேண்டும். எல்லா ப்ருஷ்ட ஸ்தோத்திரங்களை யும் படிக்க வேணும். எல்லா சொத்தையும் தானம் செய்தால் தேவதைகளிடம் சமர்ப்பித்த தன்னை தேவதைகளிடமிருந்து விலைக்கு வாங்கியதாக ஆகிறது.

அநுவாகம்—8

8¹

पवमानस्सुवर्जनः

ஸோமயாகத்தில் அத்வர்யு என்ற ருத்விக் யஜமானனை चित्पतिस्त्वा पुनातु முதலிய மந்திரங்களைச் சொல்லி யஜமானனை தர்பமுஷ்டியால் தீர்த்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தத்தை எடுத்து ப்ரோக்ஷணம் பண்ணி சுத்தி செய்கிறான். அந்த ஸமயம் யஜமானன் ஜபிக்க வேண்டியது पवमानस्सुवर्जनः முதலிய 17 மந்திரங்கள். இந்த மந்திரங்கள் [ஸ்மார்த்த கர்மாவில் புண்யாஹ வாசனத்தில் உபயோகப்படுகிறது. கலசத்தில் தீர்த்தத்தை வைத்து அதில் வருணனை ஆவாஹனம் செய்து பூஜித்து இந்த மந்திரங்களை (பவமான மந்திரங்களை) ஜபித்து ப்ரோக்ஷணம் செய்து கொண்டால் சரீரசுத்தி. க்ருஹத்தை ப்ரோக்ஷித்தால் க்ருஹத்துக்கு சுத்தி. தீர்த்தத்தை சாப்பிட்டால் வியாதி, பாபம் இவைகள் நிவ்ருத்தி ஆகும். எந்த எந்த வஸ்துக்களுக்கு சுத்தி தேவையோ அந்த அந்த வஸ்துவை ப்ரோக்ஷிக்கவேண்டும்] இதுவரை ஸோம யாக ஸம்பந்தமான விஷயங்கள் சொல்லப்பட்டன.

அநுவாகம்—9

प्रजावैसत्रमासत

இந்த அனுவாகத்தில் ராஜஸூய யாக மத்தியில் செய்யக்கூடிய சாதுர்மாஸ்ய யாகத்தைப் பற்றி சொல்லப்படுகின்றன.

முன்னொரு சமயம் தேவர்கள் பித்ருக்கள், மனுஷ்யர்கள், பசுக்கள் ஸத்ரயாகத்துக்கு ஸமமான புண்யத்தை அடைவதற்கு உபவாஸம் முதலான தபஸ்ஸை அனுஷ்டித்தார்கள். அவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்குள் தேவர்கள் கொஞ்சகாலம் தபஸ் செய்து நெய்யினால் நிரம்பிய சமஸம் என்ற பாத்திரத்தைப்பார்த்து அதை எடுத்து ஹோமம் செய்து, தன்னுடைய போஜனத்திற்கு தேவையான அன்னரஸத்தை அடைந்தார்கள். அதை சாப்பிட்டு 15 நாட்கள் பசி இல்லாமல் இருந்தார்கள். 15 நாளைக்கு ஒருமுறை தேவதைகளுக்கு பசி எடுக்கும். அதனால் தான் பூர்ணமாஸேஷ்டி, தர்சேஷ்டி என்று 15 நாளைக்கு ஒரு தடவை இஷ்டி செய்து தேவதைகளுக்கு ஹவிர்பாகம் கொடுக்கிறோம்.

பித்ருக்கள் தபஸ் செய்து நெய் நிரம்பிய சமஸ பாத்திரத்தைக் கண்டு எடுத்து ஹோமம் செய்து ஒரு மாஸத்துக்கு தேவையான அன்ன ரஸத்தை அடைந்தார்கள். அந்த அன்ன ரஸத்தை சாப்பிட்டு ஒரு மாதம் பசி இல்லாமல் இருந்தார்கள். பித்ருக்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் பசி எடுக்கும். அதனால் தான் பித்ருக்களுக்கு மாதம் ஒரு முறை அதாவது அமாவாசை, ப்ரதி அமாவாசையில் பிண்டபித்ரு யக்ஞம் என்று ஒரு யாகம் செய்து ஹவிர்பாகம் கொடுக்கிறோம். [மனுஷ்யர்கள் தபஸ் செய்து நெய் நிரம்பிய சமஸ பாத்திரத்தை எடுத்து ஹோமம் செய்து ஒரு நாளைக்கு இரண்டு வேளைக்கு தேவையான அன்னரஸத்தை அடைந்தார்கள். மனுஷ்யர்களுக்கு இரண்டு வேளை-

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(பகல் இரவு) பசி எடுக்கும். இரண்டு வேளை தான் சாப்பிட வேணும். அதனுல் பரிஷேசன மந்திரங்கள் ऋतंत्वासत्येन सत्यंत्वर्तेन என்று இரண்டு மந்திரங்களே சொல்லப்பட்டுள்ளன.]

பசுக்களும் தபஸ் செய்து நெய்யை எடுத்து தேவையான ஹோமம் செய்து ஒரு நாளைக்கு 3 வேளைக்கு அன்னரஸத்தை அடைந்தன. பசுக்களுக்கு 3 வேளை பசி எடுக்கும் ப்ராதக்காலம், ஸங்கவகாலம், சாயங்காலம். ஆகையால் பசுக்களுக்கு 3 வேளை ஆகாரம் கொடுக்கவேணும். பாக்கி ஸமயங்களில் அசை போட அவகாசம் தேவை. அசுரர்கள் ஒரு வருஷத்துக்கு தேவையான அன்னரஸத்தை அடைந்தார்கள். அசுரர்களுக்கு ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை தான் பசி எடுக்கும். அசுரர்கள் ஒரு தரம் சாப்பிட்டால் ஒரு வருஷம் பசி எடுக்காது. ஆதலால் நம்முடன் சண்டை செய்து நம் சொத்துக்களை அபகரித்து விடுவார்களே என்று பயந்தார்கள். அதற்கு பரிகாரமாக தேவர்கள் சாதுர்மாஸ்ய யாகத்தை அனுஷ்டித்தார்கள். சாதுர்மாஸ்ய யாகம் செய்ய ஒரு வருஷம் ஆகும். அந்த யாகத்தை ஒரு வருஷகாலம் அனுஷ்டித்து அசுரர்களின் ஒரு வருஷம் பசி இல்லாத தன்மையை நாசம் செய்து விட்டார்கள். பிறகு யுத்தத்தில் தேவர்களுக்கு ஜயமும் அஸுரர்களுக்கு பராஜயமும் (தோல்வியும்) ஏற்பட்டது.

தர்சபூர்ணமாஸ யாகம் செய்வதால் தேவர்கள் அடைந்த பலனை (15 நாள் பசி இல்லாதத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தன்மையும், பிண்டபித்ரு யக்ஞம் செய்வதால் பித்ருக்கள் அடைந்த பலனையும் ஒரு மாதம் பசி இல்லாதத் தன்மையும், அதிதி ஸத்காரம் செய்வதால் மனுஷ்யர்கள் அடைந்த பலனையும், தக்ஷிணை கொடுப்பதால் பசுக்கள் அடைந்த பலனையும், சாதுர்மாஸ்ய யாகம் செய்வதால் அசுரர்கள் அடைந்த பலனையும்) அடைகிறேன். மேலும் தனக்கு ஜயமும், சத்ருக்களுக்கு பராஜயமும் (தோல்வியும்) உண்டாகிறது.

விராட் என்கிற ப்ரஜாபதியின் லோகத்ரயப்ராப்திஸாதனம், இந்த சாதுர்மாஸ்ய யாகம். சாதுர்மாஸ்யம் என்பது 4 மாதத்துக்கு ஒரு முறை அனுஷ்டிப்பது. நாலு யாகங்கள். 1. வைச்வதேவ யாகம். 2. வருணப்ரகாஸ யாகம். 3. ஸாகமேத யாகம். 4, சுநாஸீரிய யாகம், பால்குன பௌர்ணமாஸையில் வைச்வதேவ யாகம். 4 மாதம் கழித்து, ஆஷாட பௌர்ணமியில் வருணப்ரகாஸ யாகம். 4 மாதம் கழித்து க்ருத்திகா பௌர்ணமியில் ஸாகமேத யாகம் 4 மாதம் கழித்து மறுபடி வரும் பால்குன பௌர்ணமியில் சுநாஸிரீய யாகம். 4 மாதத்துக்கு ஒரு முறை அனுஷ்டிப்பதால் சாதுர்மாஸ்ய யாகம் என்று இவைகளுக்கு பெயர். இவைகளை அனுஷ்டித்து லோகத்ரயத்தையும் அடைகிறான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம்—10

अग्निर्वाव संवत्सरः

இந்த அனுவாகத்தில் சாதுர்மாஸ்யத்தில் உள்ள விசேஷங்கள் சொல்லப்படுகின்றன. பிரபவ வருஷம் முதல் 5 வருஷங்களுக்கு ஸம்வத்ஸரம் என்று பெயர். ஆங்கிரஸ வருஷம் முதல் தாத்ரு வருஷம் முடிய 5ந்து வருஷங்களுக்கு பரிவத்ஸரம் என்று பெயர். ஈச்வர வருஷம் முதல் விஷு வருஷம் முடிய 5ந்து வருஷங்களுக்கு இதாவத்ஸரம் என்றும், சித்ரபானு முதல் வ்யய வருஷம் முடிய 5 வருஷங்களுக்கு அநுவத்ஸரம் என்றும், ஸர்வஜித் முதல் கர வரை 5 வருஷங்களுக்கு இத்வத்ஸரம் என்றும் பெயர்கள். மேல் கொண்டு ஐந்து ஐந்து வருஷங்களுக்கு இந்த பெயரையே திரும்பவைக்க வேண்டும். ஸம்வத்ஸரம் என்ற 5 வருஷம் அக்னி ஸ்வரூபம். பரிவத்ஸரம் என்ற 5 வருஷம் ஆதித்ய ஸ்வரூபம், இதாவத்ஸரம் என்ற 5 வருஷம் சந்திர ஸ்வரூபம். அனுவத்ஸரம் என்ற 5 வருஷம் வாயு ஸ்வரூபம். இங்கு சாதுர்மாஸ்யத்தைப் பற்றி பேசுவதால் நான்கு தொகுப்பு எடுத்துக் கொள்கிறோம். வைச்வதேவ யாகம் செய்யும் பொழுது ஸூக்தவாகமந்திரத்தில் संवत्सरीणां स्वस्ति-माशास्ते என்று சேர்த்துக்கொள்ளவேண்டும். அதனால் ஸம்வத்ஸரம் என்ற 5 வருஷங்கள் க்ஷேமமாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கிருன். வருணப்ரகாச யாகம் செய்யும் பொழுது ஸூக்தவாக மந்திரத்தில் परिवत्सरीणाँ स्वस्तिमाशास्ते என்று சேர்த்துக்கொள்ள வேண்டும். அதனுல் ஆதித்ய அனுக்ரஹத்தால் பரிவத்ஸரம் என்ற 5 வருஷங்கள் க்ஷேமமாக இருக்கிருன். ஸாகமேத யாகம் செய்யும் பொழுது ஸூக்தவாக மந்திரத்தில் इदावत्सरीणाँ स्वस्तिमाशास्ते என்ற மந்திரத்தை சேர்த்துக் கொள்ளவேண்டும். அதனுல் சந்திரன் அனுக்ரஹத்தால் இதாவத்ஸரம் என்ற 5 வருஷங்களுக்கு க்ஷேமமாக இருக்கிருன். ஸாகமேதயாக மத்தியில் பித்ருயக்ஞ அனுஷ்டானம் செய்வதால் பித்ருக்களுக்கு ராஜாவான ஸோம தேவதை த்ருப்தி அடைகிருர். சுனுஸீரிய யாகம் அனுஷ்டிக்கும் போது ஸூக்தவாக மந்திரத்தில் अनुवत्सरीणाँ स्वस्तिमाशास्ते என்ற மந்திரத்தை சேர்த்துக் கொள்ளவேண்டும். அதனுல் வாயுவுக்கும் அனுவத்ஸர காலத்துக்கும் ப்ரீதி. அனுவத்ஸரம் என்ற 5 வருஷம் க்ஷேமமாக இருக்கிருன். முன் கூறின 4 பர்வ அதாவது 1. வைச்வதேவ பர்வ, 2. வருணப்ரகாஸ பர்வ 3. ஸாகமேத பர்வ 4. சுனுஸீரிய பர்வ இந்த 4 பர்வாக்களும் சேர்ந்ததுதான் சாதுர்மாஸ்ய யாகம். இதை அனுஷ்டானம் செய்வதால் ஸம்வத்ஸர அபிமானியான ப்ரஜாபதி ஸ்வரூபமாகவே ஆகிருன். விச்வேதேவாள் என்று தேவர்களுக்குள் ஒரு பிரிவு அவர்களைதான் ச்ராதத்தில் வரிக்கிரேம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர்கள் வைச்வதேவ யாகம் அனுஷ்டித்து அக்னி லோகத்தை அடைந்தார்கள். நாமும் வைச்வதேவ யாகம் செய்தால் அக்னி லோகத்தை அடையலாம். வைச்வதேவ யாகம் செய்பவன் ஸத்ர யாகம் செய்தவனுக்கு ஸமமாகவும், ஸஹஸ்ரதரிணு யாகம் செய்தவனுக்கு ஸமமாகவும், ச்ருதி, ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்மாக்களை செய்பவன் க்ருஹபதி, அவனுக்கு ஸமமாகவும் அக்னி தேவதா ஸ்வரூபமாகவும், கோ தேவதா ஸ்வரூபமாகவும் ஆகிறான். இவ்வளவும் வைச்வதேவயாக பலன். இவ்வளவு மஹிமையும் அடைவது என்ற பலன் மற்ற 3 பர்வாக்களின் பலத்தை விட குறைவு என்றால் மற்ற பர்வாக்களின் பலனை ஊகித்துக் கொள்ளதான் வேண்டும். விச்வே தேவர்கள் இந்த யாகத்தை அநுஷ்டானம் செய்த தால் இந்த யாகத்துக்கு வைச்வதேவ யாகம் என்று பெயர். வருணப்ரகாச யாகத்தை ஆதித்யன் அநுஷ்டானம் செய்துதான். இப்பொழுது நம் கண்ணுக்கு நேர் ஆதித்ய லோகத்தில் பிரகாசிக்கிறான். நாமும் இதை அனுஷ்டித்தால் ஆதித்யலோகத்தை அடையலாம். சந்திரன் ஸாகமேத யாகம் செய்து இப்பொழுது சந்திர லோகத்தில் ப்ரகாசிக்கிறான் நாமும் இந்த யாகத்தை அநுஷ்டித்தால் சந்திர லோகத்தை அடையலாம். சந்திரனுக்கு ஸோமன் என்று பெயர். ஸோம யாகத்தில் ஹவிஸ்ஸாக உபயோகப் படுகிற கொடிக்கும் ஸோமன் என்று பெயர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதனுல் ஸோமனுடைய அநுக்ரஹத்தால் ஸோமயாக அனுஷ்டானம் செய்ய பாக்யம் ஏற்படும்.

ருதுக்கள் ஜனங்களை ரக்ஷிப்பதால் ஜனங்களுக்கு பிதா. ருதுக்களுக்கு ப்ரஜாபதி பிதா. ஆகவே ருதுக்கள் தங்களுடைய பிதாவான ப்ரஜாபதியை பித்ருயக்ஞ அனுஷ்டானத்திஞல் பூஜித்து ருதுக்களின் லோகத்தை (இப்பொழுது இருக்கும் இடத்தை) அடைந்தன. அதுபோல் மற்றவர்களும் பித்ருயக்ஞும் செய்து ருதுக்களின் லோகத்தை அடையலாம்.

சாதுர்மாஸ்ய யாகத்தில் திரயம்பக யாகம் உண்டு. அந்த யாகத்திஞல் ருதுக்களுக்கு ப்ரீதி. ஓஷதி தேவதைகள் தங்களுடைய வ்ருத்திக்காக திரயம்பக யாகம் செய்து வ்ருத்தி அடைந்தன. அதுபோல் நாமும் திரயம்பக யாகம் செய்து ப்ரஜா, பசுக்களால் விருத்தி அடைவோம்.

வாயு சுநாஸீரிய யாகத்தால் பரமேஷ்டியை ஆராதித்து இப்பொழுது வாயு லோகத்தில் ப்ரகாசிக்கிருர். நாமும் சுநாஸீரிய யாகம் செய்து பரமேஷ்டியை ஆராதித்தால் வாயு லோகத்தில் ப்ரகாசிக்கலாம்.

தர்ச பூர்ணமாஸ யாகம் செய்தவனுக்கு பலம் ஆதித்ய பலம். ஸ்வர்க்க லோகத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பலத்தை அனுபவித்து பலம் முடிந்ததும் பூலோகத்திற்கு திரும்பி விடுகிறான். சாதுர்மாஸ்ய யாகம் செய்தவனுக்கு நித்ய பலம் திரும்பி வருவதில்லை. ருது தேவதையாக ஆகிறான். பிறகு ருதுக்களுக்கு அதிபதியான ப்ரஜாபதியாக ஆகிறான். ப்ரஜாபதி நித்ய ஸ்வரூபம். நித்ய ஸ்வரூபமான ப்ரஜாபதியாக ஆகிறான். சாதுர்மாஸ்ய யாகம் செய்ததும் யஜமானனுடைய சரீரத்தில் தேவதா பாவம் முளை விட்டுவிடுகிறது. விதையில் இருந்து முளை வருவது போல் தேவதா பாவமுளை சரீரத்தில் உண்டாகிவிடுகிறது. பிறகு விருத்தி ஆகிறது. சாதுர்மாஸ்ய யாஜி எந்த ருதுவில் காலமாகிறானோ அந்த ருது ஸ்வரூபமாக ஆகிறான். பிறகு அந்த ருதுவின் அதிபதியான ப்ரஜாபதி ஸ்வரூபமாக ஆகிறான். ப்ரஜாபதி ஸ்வரூபமாகவே நிலைத்து நிற்கிறான். ஆகவே சாதுர்மாஸ்ய யாஜிக்கு நித்யமான பலன். ஆகவே சாதுர்மாஸ்ய யாகம் அவச்யம் அநுஷ்டிக்க வேண்டும்

ஐந்தாவது ப்ரச்னம்

இந்த ப்ரச்னத்தில் நக்ஷத்ர இஷ்டகா முதலியவைகள் சொல்லப்படுகின்றன. இஷ்டகை என்றால் கற்கள். கற்களை எடுத்து நக்ஷத்ர மந்த்ரங்களைச் சொல்லி நக்ஷத்திரங்களாக பாவித்து யாகதேசத்தில் வைத்து மற்றும் ஆங்காங்கு சொல்லப்பட்ட மந்திரங்களைச் சொல்லி பல இஷ்டகைகளை வைத்து விட்டு அந்த இடத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அக்னி ப்ரதிஷ்டை செய்து யாகம் செய்ய வேணும். முதலில் நக்ஷத்திர இஷ்டகா மந்திரங்ரங்கள் சொல்லப்படுகின்றன. லோகத்தில் அசுவனி முதல் ரேவதி வரை 27 நக்ஷத்திரங்கள் என்பார்கள். வேதத்தில் எல்லா இடத்திலும் கிருத்திகை முதல் பரணி வரை 27 நக்ஷத்திரங்கள் சொல்லப் பட்டுள்ளது. மேலும் [உத்திராஷாடா நக்ஷத்திரத்தின் பின் இரண்டு பாதங்கள், திருவோண நக்ஷத்திரத்தின் முன் இரண்டு பாதம் ஆக இந்த நான்கு பாதங்கள் கொண்டது அபிஜித் என்ற நக்ஷத்திரம் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது].

அநுவாகம்—1

अग्नेः कृत्तिकाः ।

கிருத்திகா நக்ஷத்திரம் என்பது 7 நக்ஷத்திரங்கள் கொண்டது. ஏழும் சேர்ந்ததுதான் கிருத்திகா நக்ஷத்திரம். அவைகளின் பெயர்கள் 1. அம்பா 2. துலா 3. நிதத்னீ 4. அப்ரயந்தீ 5. மேகயந்தீ 6. வர்ஷயந்தீ 7. சுபுணீகா என்று பெயர்கள். இந்த 7 நக்ஷத்திரங்கள் கொண்ட கிருத்திகா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி அக்னி. இந்த நக்ஷத்திரம் ஆகாயத்தில் அது இருக்க வேண்டிய இடத்தில் உள்ளது. அதற்கு ஒரு பக்கத்தில் சுக்ரம் என்ற தேஜஸ்ஸும் மற்றொரு பக்கம் 'ஜ்யோதி' என்ற பிரகாசமும் இருக்கிறது. இந்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு தேஜஸ்ஸும் அக்னி யுடையது. இந்த இரண்டு தேஜஸ்ஸும் கிருத்திகா நக்ஷத்திரத்தின் இரண்டு பக்கங்களில் இருந்து கொண்டு கிருத்திகா நக்ஷத்திரத்திற்கு ஒளியை கொடுக்கிறது.

ரோஹிணீ நக்ஷத்திரத்தின் ஸ்வாமி ப்ரஜாபதி. இந்த நக்ஷத்திரத்தின் ஒரு பக்கத்தில் ஜல தேவதைகளும், மற்றொரு பக்கத்தில் ஓஷதி (பயிர்) தேவதைகளும் இருக்கின்றன. ரோஹிணீ நக்ஷத்திர ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் ஜல ஸம்ருத்தியும், பயிர் ஸம்ருத்தியும் ஏற்படுகிறது என்று தாத்பர்யம்.

மிருகசீர்ஷ நக்ஷத்திர தேவதை ஸோமன். மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தின் ஒரு பக்கத்தில் பருத்தி நூல் தேவதைகளும் மற்றொரு பக்கம் வஸ்திரம் நெய்பவர்களும் (தேவதைகள்) இருக்கிறார்கள். மிருகசீர்ஷ நக்ஷத்திர தேவதா அனுக்ஹத்தால் வஸ்திரம் ஸம்பத் உண்டாவதாக தாத்பர்யம்.

திருவாதிரை நக்ஷத்திரத்தின் ஸ்வாமி ருத்ரன். இந்த நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் வேடர்களுக்கு அபிமானி தேவதையும், மற்றொரு பக்கம் லக்ஷ்யத்தை அடிக்கும் தேவதைகளும் இருக்கிறார்கள். திருவாதிரை நக்ஷத்திரத்தின் இருபக்கமும் ஹிம்ஸிக்கும் தேவதைகள் இருப்பதால் நல்ல கார்யம் இந்த நக்ஷத்திரத்தில் செய்வதில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹிம்ஸை இல்லாமல் இருக்க இந்த நக்ஷத்திரத்தில் பரமேச்வரனை பூஜிக்கிறோம்.

புனர்வஸு நக்ஷத்திரத்தின் ஸ்வாமி அதிதி தேவதை. இந்த நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் மழையை வரவழைக்கும் காற்றும், மற்றொரு பக்கம் மழை பெய்த பிறகு பூமியில் ஜல ஊற்று உண்டாக்குகிற தேவதையும் இருக்கிறார்கள். கடகராசி ஜல ராசி என்பார்கள். புனர்வஸு பாதத்தில் சந்திரன் வந்தால் மழைவரும் என்பார்கள்.

புஷ்ய நக்ஷத்திரத்திற்கு ஸ்வாமி ப்ருஹஸ்பதி. புஷ்ய நக்ஷத்திரத்துக்கு ஒரு பக்கம் யாகத்தில் ஹோமம் முதலிய வேலை செய்யும் ருத்விக்குகள் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் யாகம் செய்யும் யஜமானர்கள் இருக்கிறார்கள்.

ஆச்ரேஷா நக்ஷத்திரத்துக்கு ஸ்வாமி ஸர்ப தேவதைகள். (பாம்புக்கு அபிமானி தேவதைகள்) இந்த நக்ஷத்திரத்திற்கு ஒரு பக்கம் பாம்புகள் படம் எடுத்து ஆடுகின்றன. மற்றொரு பக்கம் படம் எடுத்து ஆடும் பாம்புகளை பார்க்க பல பேர்கள் நிற்கிறார்கள்.

மகா நக்ஷத்திரத்துக்கு ஸ்வாமி பித்ரு தேவதைகள். மகா நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் சரீரம் கீழே விழுந்து கிடக்கிறது. மற்றொரு பக்கம் அழுது கொண்டு இருக்கிறார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூர்வபங்குனி நக்ஷத்திரத்தின் ஸ்வாமி அர்யமா என்கிற தேவதை. நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் மனைவி. மற்றொரு பக்கம் புருஷன். அதாவது லோகத்தில் மனைவிமார்கள், புருஷன் மார்கள் என்று இருக்கிறார்கள் அல்லவா, அவர் களுக்குள் மனைவிமார்கள் ஒரு பக்கமும் புருஷன் மார்கள் ஒரு பக்கமாக இருப்பதாக தாத்பர்யம்.

உத்திரபல்குனி நக்ஷத்திரத்தின் ஸ்வாமி பசு தேவதை. அதாவது ஸௌபாக்ய தேவதை. இந்நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் கன்னிகைக்கு பிதா கொடுக்கும் சீர்வரிசைகளும், மற்றொரு பக்கம் சீர்வரிசைகளை வகிப்பவர்களும் இருக்கிறார் கள்.

ஹஸ்த நக்ஷத்திற்கு ஸ்வாமி ஸவிதா. ஒரு பக்கம் கார்யங்களில் ப்ரேரணம் (ஏவுதல்) செய் யும் சக்தி, மற்றொரு பக்கம் தனதான சக்தி.

சித்ரா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி இந்திரன் (த்வஷ்டா). நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் ருதம் அதாவது மானஸீகஸத்யம். மற்றொரு பக்கம் ஸத்யம், அதாவது வாசிகஸத்யம். மனதால் உண்மையை நினைப்பது ருதம், வாக்கினால் உண் மையை பேசுவது ஸத்யம்.

ஸ்வாதி நக்ஷத்திரத்துக்கு ஸ்வாமி வாயு. இந்நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் காற்றால் அசைக்

ய.மு—7

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கத்தகுந்த கொடி இருக்கிறது. மற்றொரு பக்கம் அசைக்கப்பட்ட கொடி விழுந்து உள்ளது.

விசாகா நக்ஷத்திரத்தின் ஸ்வாமீ சித்தி ராக்னி தேவதை. நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் உழவர்களால் இரண்டு காளை மாட்டின் கழுத்தில் வைக்கக் கூடிய மரத்தினுல் செய்யப்பட்ட நுகத்தடிகள் இருக்கின்றன. மற்றொரு பக்கம் உழவர்கள் இருக்கிறார்கள்.

அனுராதா நக்ஷத்திரத்திற்கு ஸ்வாமி மித்ர தேவதை. ஒரு பக்கம் உயர்ந்த ஸ்தானத்தில் எறுவதற்கு உயர்த்தப்பட்ட பாதம் இருக்கிறது. மற்றொரு பக்கம் உயர்ந்த ஸ்தானம் இருக்கிறது.

ஜேஷ்டா நக்ஷத்திரத்துக்கு ஸ்வாமி இந்திரன், இந்நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் சத்ருவை ஹிம்ஸிக்கும் தன்னுடைய பலம் உள்ளது. மற்றொரு பக்கம் சத்ருவின் பலம் இருக்கிறது.

மூலா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி நிர்ருதி தேவதை (மற்றொரு இடத்தில் மூல நக்ஷத்திர ஸ்வாமி ப்ரஜாபதி என்று சொல்லப்பட்டுள்ளது) மூல நக்ஷத்ரத்திற்கு ஒரு பக்கம் பிரதிகூல சேனைகளை அழிக்கும் புருஷர்கள் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் தன்னையே ஹிம்ஸித்துக் கொள்கிற புருஷர்கள் இருக்கிறார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூர்வாஷாடா நக்ஷத்திரத்திற்கு ஸ்வாமி ஜல தேவதைகள். அதற்கு ஒரு பக்கம் சத்ரு சைன்யத்தை அழிக்கக் கூடிய பலம், மற்றொரு பக்கம் யுத்தம் இருக்கிறது.

உத்திராஷாடா நக்ஷத்திரத்திற்கு ஸ்வாமி விச்வே தேவர்கள். ஒரு பக்கம் ஜயத்தை நோக்கி செல்லும் சைன்யம் இருக்கிறது. மற்றொரு பக்கம் ஜயத்தை அடைந்த சைன்யம் இருக்கிறது.

ச்ரவண நக்ஷத்திரத்தின் ஸ்வாமி விஷ்ணு, ஒரு பக்கம் விஷ்ணு லோகத்தை அறிந்து கொள்ள விரும்புகிற புருஷர்கள் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் விஷ்ணு லோகப்ராப்திக்கு உபாயம் இருக்கிறது.

ச்ரவிஷ்டா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி அஷ்ட வஸுக்கள். ஒரு பக்கம் அநுபவிக்கப்பட்ட ஐஸ்வர்யங்கள் இருக்கிறன. மற்றொரு பக்கம் அநுபவிக்கப்படுகிறது அநுபவிக்கப் போகிற ஐஸ்வர்யங்கள் இருக்கின்றன. அதனால்தான் ச்ரவிஷ்டா நக்ஷத்திரக்காரர்களுக்கு தவிட்டுப்பானை எல்லாம் பணம் என்கிறார்கள்.

சதய நக்ஷத்திரத்தின் ஸ்வாமி இந்திரன் (வருணன்.) இந்நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் உலகம் பூராவும் பெய்யும் மழை உள்ளது. மற்றொரு பக்கம் அதிகமழை பெய்யும் பூமி இருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூர்வ ப்ரோஷ்டபதா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி ஸூர்யன். அதன் ஒரு பக்கம் உலகம் பூராவும் வியாபிக்கும் ஸூர்ய ப்ரகாசம். மற்றொரு பக்கம் ஸூர்ய ஒளியால் உலக க்ஷேமத்துக்கு உண்டாகிற மழை இருக்கிறது.

உத்தரப்ரோஷ்டபதா நக்ஷத்திரத்தின் ஸ்வாமி ஆவஸதம் எனப் பெயருள்ள அக்னி. நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் ராஜஸூய யாகத்தில் ராஜாவுக்கு அபிஷேகம் செய்கிற ருத்விக்குகள் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் ஸோம யாகத்தில் ஸோமலதையை அறைத்து பிழிகின்ற ருத்விக்குகள் இருக்கிறார்கள்.

ரேவதி நக்ஷத்திரத்தின் ஸ்வாமி பூஷ தேவதை, ஒரு பக்கம் பசுக்கள். மற்றொரு பக்கம் கன்றுகள்.

அச்வநீ நக்ஷத்திரத்தின் தேவதை (ஸ்வாமி) அச்வினீ தேவதைகள் (அதாவது தேவவைத்யர்கள்). அச்வநீ நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் வைத்யம் செய்து கொள்ளவேண்டிய ஜனக்கூட்டம் இருக்கிறது. மற்றொரு பக்கம் வைத்யம் செய்து கொள்ளவேண்டிய பாராஷ்டா சேனைகள் (out patient) இருக்கிறார்கள்.

பரணீ நக்ஷத்திர ஸ்வாமி யமன். பரணீ நக்ஷத்திரத்தின் ஒரு பக்கம் பாபி ஜனங்களை ஹிம்ஸிப்பதற்கு பலவந்தமாக இழுத்து வரும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யமதூதர்கள் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் இழுத்து வரப்பட்ட பாபிகளுக்கு தண்டனை கொடுப்பவர்கள் இருக்கிறார்கள்.

இதுவரை சொல்லப்பட்ட அந்த அந்த நக்ஷத்திர ஸ்வாமிக்கு அந்த நக்ஷத்திரத்தின் இருபக்கம் உள்ளவர்கள் அனுகூலம் செய்கிறவர்கள் என்று அறியவேண்டும். மேலும் எந்தெந்த நக்ஷத்திரத்தின் ஸ்வாமியும், நக்ஷத்திரத்தின் பக்கத்தில் உள்ளவர்களும் நல்லவர்களோ, அந்தந்த நக்ஷத்திரங்கள் நல்ல நக்ஷத்திரங்கள். அந்த நக்ஷத்திரங்களில் சுப காரியங்கள் செய்யலாம் என்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

அனுவாகம்—2

यत्पुण्यं नक्षत्रम्

இந்த அனுவாகத்தில் கர்மானுஷ்டானம் செய்வதற்கு புண்யகாலம் சொல்லப்படுகிறது. அதுவும் யாகம் செய்வதற்கு புண்யகாலம் சொல்லப்படவில்லை. மனுஷ்யர்கள் ஸௌக்யமாக சொந்த கார்யங்கள் செய்வதற்கு புண்யகாலம் சொல்லப்படுகிறது. முதலில் நக்ஷத்திரத்தை வைத்து புண்யகாலம் சொல்லப்படுகிறது. அதாவது ஜோதிஷ சாஸ்திரபடி கர்த்தாவுக்கும் கர்மாவுக்கும் அனுகூலமான ஒரு நக்ஷத்திரத்தை தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். பிறகு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உஷத்காலத்துக்கு முன்னால் அதாவது விடியர் காலையில், நாம் முன்பு தீர்மானித்த நக்ஷத்திரம், சூரியன் உதிக்கப் போகிற இடத்திலிருந்து எவ் வளவு தூரத்தில் இருக்கிறது என்பதையும் மான ஸீகமாக தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சூரியன் உதித்த பிறகு நக்ஷத்திரங்கள் மறைந்து விடும். ஆதலால் சூரியன் உதிப்பதற்கு முன்பே நாம் தீர்மானித்த நக்ஷத்திரம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளவேண்டும். சூரியன் உதித்து மேற்கு நோக்கி மேலே வரும் பொழுது நாம் தீர் மானித்த நக்ஷத்திரம் இருக்கும் இடத்துக்கு கொஞ்சம் கீழ்பாகத்தில் சூரியன் வரும் பொழுது நாம் செய்யவேண்டிய காரியத்தை ஆரம்பிக்க வேணும். அதுதான் நல்லகாலம். அந்த ஸமயம் மற்ற தோஷங்கள் இருந்தாலும் தோஷமாக ஆவ தில்லே. தோஷம் மறைந்துவிடும். புண்ய காலத்தில் செய்ததாகவே ஆகிவிடும். மாத்யர் என்பவர், யக்ஞேஷு என்பவருக்கும், சதத்யும்னர் என்பவருக்கும் மேலே சொல்லப்பட்ட முஹூர்த்தத் தில் நல்ல காரியத்தை ஆரம்பித்துவைத்து, மிகச் சிறந்தவராக செய்தார்.

அடுத்தபடியாக இந்த லோகத்திலும் பர லோகத்திலும், ச்ரேயஸ்ஸை கொடுக்கக்கூடிய நக்ஷத்ர ஸமூஹ த்யானம் சொல்லப்படுகிறது. அதாவது எந்த மனிதன் நக்ஷத்திரங்களையே சரீரமாகக் கொண்ட ப்ரஜாபதி தேவதையை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தெரிந்துகொண்டு த்யானம் செய்கிறாளோ அவனை, இந்த லோகத்தில் மனுஷ்யர்களும், பரலோகத்தில் தேவர்களும் அறிவார்கள். இரண்டு உலகத்திலும் புகழுடன் இருக்கிறான் என்று தாத்பர்யம். ப்ரஜாபதியின் எந்த எந்த அவயங்களாக எந்த எந்த நக்ஷத்திரங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஹஸ்த நக்ஷத்திரம் ப்ரஜாபதிக்கு கையாக உள்ளது. சித்ரா நக்ஷத்திரம் சிரஸ், ஸ்வாதீ ஹ்ருதயஸ்தானம். விசாகம் இரண்டு உருவமாக இருக்கிறது. அந்த இரண்டும் இரண்டு துடைகள், அனுராதா பாதமாக இருக்கிறது. இது தான் நக்ஷத்திர ரூப சரீரத்தை உடைய ப்ரஜாபதி. இவரை த்யானம் செய்பவனுக்கு இரண்டு லோகத்திலும் புகழ் உண்டாகும். தன்னுடைய பெண்ணை கல்யாணம் செய்து கொடுப்பவன், பர்தா பிரியமாக தன்னுடைய பெண்ணை வைத்துக் கொள்ள வேணும் என்றால் ஸ்வாதி நக்ஷத்திரத்தன்று கல்யாணம் செய்து கொடுக்கவேணும். அப்படி செய்தால் பர்த்தா பிரியமாக வைத்துக்கொள்வான். பெண்ணுக்கு பிறந்த வீட்டுக்கு போகவேணும் என்ற எண்ணமே வராது. அவ்வளவு பிரியமாக வைத்துக்கொள்வான் என்று தாத்பர்யம். அவச்யம் வரவேண்டிய விஷயங்களுக்கு வருவாள். ஸ்வாதீ நக்ஷத்திரத்தை ஸ்தோத்திரம் செய்ய இந்த விஷயம் கூறப்பட்டது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபிஜித் என்று பெயர் உள்ள ஒரு நக்ஷத்திரம் உண்டு. அதாவது உத்திராட நக்ஷத்திரத்தின் 4வது பாதமும் ச்ரவண நக்ஷத்திரத்தின் முதல் பாதமும் சேர்ந்து இரண்டு பாதத்திற்கும் அபிஜித் நக்ஷத்ரம் என்று பெயர். தேவர்களும் அசுரர் களும் யுத்தம் செய்து கொண்டிருக்கும் பொழுது இந்த இரண்டு நக்ஷத்திர பாதங்கள் வரும் பொழுது தேவர்கள் அசுரர்களை ஜயித்தார்கள். அதனால் இந்த இரண்டு நக்ஷத்ர பாதங்களுக்கும் ஜயத்துக்கு காரணமாக இருந்ததால் அபிஜித் நக்ஷத்ரம் என்ற பெயர் வந்தது. ஜயிக்க முடியாத சத்ரு ஸைன்யத்தை ஜயிக்க வேணும் என்று ஆசைப்படுகிற ராஜாவை அபிஜித் நக்ஷத்திரத் தில் யுத்தம் செய்ய சொல்ல வேண்டும். யுத்தத் தில் அவன் ஜயிப்பான். ஸைன்யங்கள் பராஜயம் (தோல்வி) என்பது பாபத்தினால் உண்டாகிறது. நக்ஷத்திரத்தை காரணமாகச் சொல்வது அபிஜித் நக்ஷத்திர ஸ்துதிக்காகச் சொல்லப்பட்டது.

ரேவதி நக்ஷத்திரத்தில் பசுபந்த யாகம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. காரணம் ப்ரம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பசுக் கள் ரேவதி நக்ஷத்திரத்தைத் தவிர்த்து மற்ற நக்ஷத்திரங்களில் ப்ரம்மாவை வந்து அடைந்தன. அந்த பசுக்கள் எவ்வளவு வந்தனவோ அவ்வளவு தான் இருந்தது. அதாவது வம்சவ்ருத்தி உண் டாகவில்லை என்று தாத்பர்யம். அந்த பசுக்கள் திரும்பிபோய் ரேவதி நக்ஷத்திரத்தன்று ப்ரம்மா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீடம் வந்தன. ரேவதி நக்ஷத்திர மகிமையால் பசுக்களுக்கு வம்ச விருத்தி ஏற்பட்டது. ஆதலால் ஸோமயாகத்தைவிட சிறிய யாகமான பசுபந்த கர்மாவை ரேவதீ நக்ஷத்திரத்தன்று செய்தால் பசு விருத்தி ஏற்படும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது பசுக்களை வாங்கினால் ரேவதீ நக்ஷத்திரத்தன்று வீட்டுக்கு கொண்டு வந்தால் பசு விருத்தி (வம்சா விருத்தி) ஏற்படும் என்று அறியலாம்.

நக்ஷத்திரங்களுக்கு தாரா என்ற பெயர் வந்ததிற்கு காரணம் சொல்லப்படுகிறது. நம்மால் பார்க்கப்படுகிற உலகம் முன்பு பிரளயத்தில் ஒரே ஜல ரூபமாக இருந்தது. அப்பொழுது நக்ஷத்திரங்கள் தரணம் செய்து (நீந்தி) லோகாந்தரத்திற்கு (பரலோகம்) சென்றன. தரணம் செய்ததால் நக்ஷத்திரங்களுக்கு தாரா, தாரகா என்று பெயர் வந்தது. நக்ஷத்திரம் என்ற பெயர் வந்ததிற்கு காரணம் அதாவது எவன் இந்த லோகத்தில் யாகம் செய்கிறானோ அவன் ஸ்வர்க்க லோகத்தை 'नक्षते' அடைகிறான். நக்ஷத்திர ரூபமாக பிரகாசிக்கிறான். அதனால் நக்ஷத்திரம் என்ற பெயர் வந்தது. நக்ஷத்திரங்கள் தேவர்களுக்கு க்ருஹம் போன்றவைகள். மனுஷ்யர்கள் வீட்டில் தீப ப்ரகாசத்தை வைத்துக்கொண்டு வேலைகள் செய்கிறார்கள். அதுபோல் தேவர்கள் நக்ஷத்திர ப்ரகாசத்தை பயன் படுத்தி வியவகாரம் செய்கிறார்கள். அதனால் நக்ஷத்திரங்கள் தேவர்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

க்ருஹஸ்தானம் என்று சொல்லப் படுகின்றன. இந்த விஷயத்தை அறிந்தவன் நல்ல க்ருஹத்தை அல்லது பல க்ருஹத்தை அடைவான். பூமியில் இருக்கின்ற பல கிராமங்கள், பல நகரங்கள் மூதலிய ஸ்தானங்கள் நக்ஷத்திரங்களுக்கு ஸமமானவைகள். நல்ல நக்ஷத்திரங்களில் செய்யக் கூடிய கார்யங்களுக்கு நல்ல பலன்களை கொடுத்து நக்ஷத்திரங்கள் நமக்கு உபகாரமாக இருக்கின்றனவோ அதுபோல் நல்ல கிராமங்களிலோ, நல்ல நகரங்களிலோ நாம் வாசம் சேய்தால் உபகாரமாக இருக்கின்றன. அதனுல் கிராமங்களும் நகரங்களும் நக்ஷத்திரங்களுக்கு ஒப்பானவைகள். அதனுல் கெட்ட நக்ஷத்திரத்தில் செய்த கார்யங்கள் எப்படி உபகாரமாகாதோ அதுபோல் ம்லேச்சர்கள் சூழப்பட்டதாயும், நிந்திக்கப் பட்டதாயும், நல்ல பெயர் இல்லாததும் உள்ள கிராமம் அல்லது நகரத்தில் வசிப்பதோ, யாகம் செய்வதோ பலனைக் கொடுக்காது.

நிஷித்த தினத்தில் நல்ல கார்யம் செய்தால் எப்படி பலனைக் கொடுக்காதோ அப்படியே நிஷித்ததேசத்தில் செய்த கார்யம் பலனை கொடுக்காது.

நக்ஷத்திரங்களில் சில தேவ நக்ஷத்திரங்கள் சில யம நக்ஷத்திரங்கள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. சில உத்தமம் என்றும், சில அதமம் என்று நக்ஷத்திரங்கள் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதாவது கிருத்திகை முதல் விசாகம் முடிய 14 தேவ நக்ஷத்திரங்கள். அனுராதா முதல் பரணி வரை 13 யம நக்ஷத்திரங்கள். தேவலோகத்துக்கு ஸமீபத்தில் தெற்கு பக்கத்தில் சஞ்சரிக்கும் காரணத்தால் தேவ நக்ஷத்திரம் என்றும், யமலோகத்தின் ஸமீபத்தில் வடக்கு பக்கத்தில் சஞ்சரிக்கும் காரணத்தால் யம நக்ஷத்திரம் என்று சொல்லப்படுகிறது.

யம நக்ஷத்திரங்கள் அதமம் என்பதற்கு காரணம் சொல்லப்படுகிறது. அதாவது முன்னொரு காலத்தில் தேவர்கள் அஸுரர்களோடு யுத்தம் செய்வதற்கு வேண்டிய ஆயுதம் முதலிய சாமக்ரீகளுடன் ஸம்ருத்தியுடன் இருக்கிறோம் என்று பேசிக் கொண்டார்கள். அநு ராத்ஸ்ம என்று சொன்னதால் அன்று உள்ள நக்ஷத்திரத்துக்கு அனுராதா என்று பெயர் வந்தது. எந்த நக்ஷத்திரத்தன்று தேவர்கள் அஸுரர்களுடைய முக்யமான புருஷனை கொன்று விட்டோம் என்றுபேசிக் கொண்டு இருந்தார்களோ அந்த நக்ஷத்திரத்துக்கு ஜ்யேஷ்டனீ என்று பெயர். ஜ்யேஷ்டனீ என்று முழுப் பெயர். பாதி பெயரை இப்பொழுது கூறுகிறோம். அதாவது ஜ்யேஷ்டா (கேட்டை) என்று சொல்கிறோம். பீமஸேனனை பீமன் என்றும் ஸத்யபாமாவை பாமா என்றும் அழைக்கிறோம். அது போல் ஜ்யேஷ்டக்னீ என்ற நக்ஷத்திரத்தை ஜ்யேஷ்டா என்று அழைக்கிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்கள் எந்த நக்ஷத்திரத்தன்று அசுரர்களின் மூலத்தை (இருப்பிடத்தை) அழித்துவிட்டோம் என்று பேசினார்களோ இந்த நக்ஷத்திரத்திற்கு मूलवर्हिणी என்று பெயர். இங்கும் பாதி நக்ஷத்திரத்தின் பெயரை சொல்லி मूलम् என்று சொல்லுகிறோம். இதை வைத்துதான் மூல நக்ஷத்திர முள்ள பெண் மூலத்தை அழிந்து விடுவாள் என்று லோகத்தில் சொல்லுகிறார்கள்.

எந்த இரண்டு நக்ஷத்திரங்கள் உள்ள தினத்தில் அஸுரர்கள் தேவர்களால் செய்யப்பட்ட உபத்ரவங்களை ஸஹிக்க முடியவில்லை என்று சொன்னார்களோ அந்த இரண்டு நக்ஷத்திரங்களுக்கு अषाढा (ஸஹிக்க முடியவில்லை) என்று பெயர் முதலில் உள்ளது. பூர்வாஷாடா (பூராடம்) இரண்டாவதாக இருப்பது உத்தராஷாடா (உத்தராடம்) எனப்படும்.

ச்ரவண நக்ஷத்திரத்திற்கு வேதத்தில் श्रोणा என்று பெயர். ச்ரோணா என்றால் ஸங்கம் (ஸமூகம்). எந்த நக்ஷத்திரத்தில் அசுரர்களுக்கு பல அடிகள் விழுந்தனவோ அந்த நக்ஷத்திரத்துக்கு श्रोणा என்று பெயர் வந்தது. श्रवणम् என்று இப்பொழுது சொல்லப்படுகிறது.

எந்த நக்ஷத்திரத்தில் அசுரர்கள் தேவர்களால் சொல்லப்பட்ட அதிக்ஷேபங்களை கேட்டார்களோ அந்த நக்ஷத்திரத்திற்கு अभिजित् என்று பெயர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஷரிஜா என்றும் சொல்லுவார்கள். எந்த நக்ஷத்திரத்தில் யுத்தத்தில் தேவர்களால் யுத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட பல காயங்களை அசுரர்கள் சிகிச்சை செய்து கொண்டார்களோ அந்த நக்ஷத்திரத்துக்கு சதபிஷக் என்று பெயர். எந்த இரண்டு நக்ஷத்திரங்களில் தேவர்கள் அசுரர்களை அடிப்பதற்கு ஆயுதங்களை உயரே தூக்கிப்பிடித்தார்களோ அந்த இரண்டு நக்ஷத்திரங்களுக்கு புரோஷ்டபதா என்று பெயர். முதல் நக்ஷத்திரத்திற்கு பூர்வப்ரோஷ்டபதா என்றும், இரண்டாவது நக்ஷத்திரத்திற்கு உத்திரப்ரோஷ்டபதா என்று பெயர். எந்த நக்ஷத்திரத்தில் தேவர்கள் அஸுரர்களுக்கு பயங்கரமான சப்தத்தை செய்தார்களோ அந்த நக்ஷத்திரத்திற்கு ரேவதி என்று பெயர். எந்த நக்ஷத்திரத்தில் தேவர்கள் தேரில் குதிரைகளை பூட்டினார்களோ அந்த நக்ஷத்திரத்திற்கு அச்வயுக் என்று பெயர். அச்வனி என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. எந்த நக்ஷத்திரத்தில் அஸுரர்களின் பிராணங்கள் சரீரத்தை விட்டு பிரிந்தனவோ அந்த நக்ஷத்திரத்திற்கு அபபரணி என்று பெயர். பரணீ என்று சொல்லப்படுகிறது. யமன் எப்படி பிராணனை அபகரிக்கிறானோ அதுபோல் அனுஷம் முதல் பரணீ வரையில் உள்ள நக்ஷத்திரங்கள் அசுரர்களின் பிராண அபகாரத்துக்கு காரணமாக இருப்பதால் யம நக்ஷத்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. யம நக்ஷத்திரங்கள் அதமம் என்று நிந்தை செய்ததாலேயே தேவ நக்ஷத்திரம் உத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அதனால் கிருத்திகை முதல் விசாகம் வரையிலா யின தேவ நக்ஷத்திரங்களில் லௌகிக, வைதிக காம்ய கர்மாக்களை செய்யவேணும்.

அநுவாகம்—3

देवस्य सवितुः प्रातः

சென்ற அநுவாகத்தில் சுப நக்ஷத்திரங்கள் சொல்லப்பட்டன. இந்த அநுவாகத்தில் பகலில் சுபகாலங்கள் சொல்லப்படுகின்றன. பகலை 5 பாகங்களாக பிரிக்கிறார்கள். 1. ப்ராதக் காலம். ஸங்கவ காலம். 3. மத்யான்ன காலம். 4. அப ரான்ன காலம். 5. சாயங்காலம். ஒவ்வொரு காலமும் 6 நாழிகைகள் கொண்டது. ஆக 30 நாழிகைகள் கொண்டது பகலை 5 காலமாக பிரித்துள்ளார்கள். ஒரு முகூர்த்தம் என்றால் 2 நாழிகைகள். நாம் ஐந்து பாகமாக பிரித்துள்ள, ஒவ்வொரு காலமும் 3 முகூர்த்தங்கள் அல்லது 6 நாழிகைகள் கொண்டது.

6 நாழிகைகள் கொண்ட ப்ராதக் காலம் சூர் யனைச் சேர்ந்தது. சூர்ய ப்ரகாசத்தால் எல்லோ ரும் தூண்டப்பட்டு எழுந்திருக்கிறார்கள். அநு ஷ்டானம் செய்பவர்கள், உழவர்கள், ஸேவகர்கள், வியாபாரிகள் தங்கள் தங்கள் காரியத்தில் ஈடு படுகிறார்கள். கடைசி காலம் சாயங்காலம் 5வது காலம் வருணனைச் சேர்ந்தது. சூரியன் மறைந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடுகிறான். இருள் சூழ்ந்து எல்லா பொருள்களை யும் ஆவரணம் செய்கிறது (மறைக்கிறது.) எல்லா பிராணிகளும் தங்கள் தங்கள் காரியங்களில் இருந்து விலகிவிடுகிறார்கள். 1வது காலம் ப்ராதக் காலம் 2வது காலம் ஸங்கவ காலம். ப்ராதக் காலத்தில் கடைசி 2 நாழிகைகள், ஸங்கவ காலத் தில் முதல் 2 நாழிகைகள் ஆக 4 நாழிகைகள் ஸந்திகாலம். இந்தக் காலத்திலிருந்து தேவர்கள் அக்னிஷ்டோம கர்மாவை ஸ்ருஷ்டித்தார்கள். அந்த காலம் சக்தி இல்லாதது. சுத்தி இல்லா தது. ஸங்கவ காலம் மித்ர தேவதையை சேர்ந் தது. அதனால் அந்த காலம் புண்ய காலம். அந்த காலத்தில் வேதம் பாடம் சொல்கிறார்கள். பசுக் களை அரண்யத்தில் மேயவிடுகிறார்கள். ஸங்கவ காலத்தின் பின் 2 நாழிகைகள், மத்யான்ன காலத் தின் முன் 2 நாழிகைகள் ஸந்திகாலம். அந்த காலத்திலிருந்து தேவர்கள் உக்திய யாகத்தை ஸ்ருஷ்டித்தார்கள். அதனால் அந்த காலம் நிஸ் ஸாரமாக ஆகிவிட்டது. மத்யான்ன காலம் பிரு ஹஸ்பதியைச் சேர்ந்தது. ப்ரம்மவர்சஸ்ஸுக்கு காரணமானது. அதில் தபஸ் செய்ய வேணும். சூரியன் அந்த காலத்தில் தர்மத்தை அதிகப் படுத்துகிறான். அந்த காலத்தில் வேதத்தை உரக்க சொல்ல வேணும். பசுக்களும் அந்த காலத் தில் இருப்பது தபஸ் செய்வதுபோல் உள்ளது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மத்யான்ன காலத்தில் பின் 2 நாழிகைகள் அபரான்ன காலத்தின் முன் 2 நாழிகைகள் ஆக 4 நாழிகையில் இருந்து தேவர்கள் ஷோடசி யாகத்தை பிழிந்து எடுத்தார்கள். அதனுல் அந்த காலம் நிஸ்ஸாரம். அபரான்ன காலம் ஸௌபாக்ய தேவதையைச் சேர்ந்தது. ஆதலால் அந்த காலத்தில் ஸ்திரீகள் போஜனுதிகளை முடித்துக் கொண்டு அமைதியாக குமாரிகள் முகத்தை சுத்தம் செய்து, கூந்தலை அலங்க ரித்து, கண்ணுக்கு மை தீட்டி, திலகம் இட்டு சந்தோஷமாக இருக்கிறுர்கள்.

அபரான்ன காலத்தின் பின் 2 நாழிகைகள் ஸாயங்காலத்தின் முன் 2 நாழிகைகள் ஆக 4 நாழிகையான ஸந்தியா காலத்திலிருந்து தேவர் கள் அதிராத்ர யாகத்தைச் ச்ருஷ்டித்தார்கள். அதனுல் அந்த காலம் நிஸ்ஸாரமாக ஆகிவிட் டது. ஸாயங்காலம் வருணனைச் சேர்ந்தது. வரு ணன் உக்ர தேவதை. அதனுல் அந்த காலத்தில் தப்பு செய்தால் தண்டிப்பான். அந்த காலத்தில் பொய் பேசக்கூடாது.

கிருத்திகை முதல் பரணி வரை 27 நக்ஷத்தி ரங்கள் இருக்கின்றன. ப்ராம்மணன் 28வது நக்ஷத்திரம். ப்ராம்மணன் வாக்கால் புண்யாஹம் என்று சொன்னுல் அது புண்யமான நாள்தான். அதனுல் ப்ராம்மணன் 28வது நக்ஷத்ரம் என்று சொல்லப்படுகிறுன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ப்ராத: காலம் முதலிய ஐந்து காலங்கள்	
புண்ய காலங்கள்	5
ஐந்து காலத்தில் ஸந்தி காலங்கள்	
நிஸ்ஸாரமானது	4
பிரதோஷ காலம்	1
உஷத் காலம்	1
ப்ராம்மணன் வாக்கு ஒரு காலம்	1
	12

இந்த 12 காலங்கள் 12 மாதத்துக்கு ஸமம் என்று பாவித்தால் ஒரு வருஷம் ஆகிறது. ஒரு நாளையே ஒரு வருஷமாக செய்து விட்டோம் என்று தெரிந்து கொண்டு புண்யகார்யம் செய்தால் ஒவ்வொரு நாள் செய்வது ஒவ்வொரு வருஷம் செய்த பலனை கொடுக்கும்.

அநுவாகம்—4

ब्रह्मवादिनोवदन्ति

இந்த அநுவாகத்தில் ஸோமரஸத்தை க்ரஹிப்பதற்கு சாதனமான மரப் பாத்திரங்களைப் பற்றி சொல்லப்படுகின்றன. வேத வித்வான்கள் சர்ச்சை செய்து ஒரு நிர்ணயம் செய்கிறார்கள். அதாவது எவ்வளவு மரப்பாத்திரங்கள் யாகத்தை நிர்வகிக்கின்றன என்ற ப்ரச்னம். 13 பாத்திரங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் யக்ஞத்தை நிர்வகிக்கின்றன என்று பதில். அடுத்த கேள்வி. யார் அந்த பாத்திரங்களை ஸ்ருஷ்டி செய்தார் என்று. ப்ரஜாபதி ஸ்ருஷ்டி செய்தார் என்று பதில். எங்கிருந்து ஸ்ருஷ்டி செய்தார் என்று கேள்வி. தன்னுடைய சரீரத்திலிருந்து ஸ்ருஷ்டி செய்தார் என்று பதில். எந்த எந்த அவயத்திலிருந்து எந்த எந்த பாத்திரங்கள் உண்டானது என்று சொல்லப் படுகிறது. ப்ராண வாயுவிலிருந்து உபாம்சு பாத்திரமும், அபான வாயுவிலிருந்து அந்தர்யாம பாத்திரமும், வ்யான வாயுவிலிருந்து ஸோமலதையை அறைத்து பிழிய கல்லும், வாகிந்திரியத்தில் இருந்து ஐந்த்ர வாயவ பாத்திரமும், தக்ஷ: என்றால் உத்ஸாகம் க்ரது என்றால் ஸங்கல்பம். இந்த இரண்டிலிருந்து மைத்ரா வருண பாத்ரமும், ச்ரோத்ர இந்திரியத்திலிருந்து ஆச்வின பாத்ரமும், சக்ஷுரிந்திரியத்திலிருந்து சுக்ர, மந்தி என்ற இரண்டு பாத்ரமும், மத்ய சரீரத்திலிருந்து ஆக்ரயன பாத்ரமும், கை, கால் முதலிய அவயவங்களிலிருந்து உக்திய பாத்ரமும், ப்ரம்மாவின் ஆயுஸ்ஸில் இருந்து த்ருவ பாத்திரமும், பாதங்களில் இருந்து 2 ருது பாத்திரங்களும், ஆக 13 பாத்திரங்களை ப்ரஜாபதி தன்னுடைய அவையவத்திலிருந்து ஸங்கல்ப மாத்திரத்தால் சிருஷ்டி செய்தார். மேலே சொல்லப்பட்ட பாத்திரங்களைக் கொண்டு செய்யப் பட்ட யாகம் திருடமாக இல்லாமல் துர்பலமாக இருந்தது. 1. ப்ராதஸ்ஸவனம் 2. மாத்யந்தினஸ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வனம் 3 த்ருதீய ஸவனம் ஆக 3 ஸவனங்களில் செய்யப்பட்ட புரோடாசம் என்னும் ஹவிஸ்ஸைக் கொண்டு யாகம் செய்தார் ப்ரம்மா. அதன் பிறகு யாகம் த்ருடமாக ஆனது. இப்பொழுது யாகம் செய்பவரும் ப்ரம்மா செய்தது போல் செய்தால் யாகம் த்ருடமாக ஆகும். பலத்தை கொடுக்கும்.

அநுவாகம்—5

ऋतमेवपरमेष्ठि

சாதுர்மாஸ்யம் என்று பெயருள்ள 4 யாகங்கள் இருக்கின்றன.

1. वैश्वदेवं 2. वरुण प्रघासं 3. साकमेधं 4. शुनासीरीयम्

1வது யாகம் செய்து 4 மாதம் கழித்து 2வது யாகம் செய்ய வேணும். அதற்கு பிறகு 4 மாதம் கழித்து 3வது யாகம். பிறகு 4 மாதம் கழித்து 4வது யாகம் செய்ய வேணும். இவ்விதம் 4 மாதம் கழித்து செய்யப்படுகிற 4 யாகங்களுக்கும் சாதுர்மாஸ்யம் என்று பெயர். 1வது வைச்வதேவ யாகம் செய்த பிறகு யஜமானன் வபனம் செய்து கொள்கிறார். அத்வர்யு வபனம் செய்கிறார். ऋतमेवपरमेष्ठि......शर्मेनास्याभिवर्तये இதுவரை அத்வர்யு சொல்லவேண்டிய மந்த்ரம், இந்த மந்திரத்தின் அர்த்தம் உண்மை என்பது ஜகத் காரணமான பரமேஷ்டி ஸ்வரூபம். உலகத்தில் ஒரு வஸ்துவும் உண்மையிலிருந்து விலகுவதில்லை. ப்ரம்மா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸமுத்ரத்துக்கு கரையை தாண்டி வரக்கூடாது என்று ஆக்ஞாபித்துள்ளார். அதை ஸமுத்ரம் மீறவில்லை. பூமிக்கு எல்லா ப்ராணிகளையும் கஷ்டமில்லாமல் எப்பொழுதும் தரிக்கவேணும், என்று ஆக்ஞை செய்துள்ளார். அதை பூமி மீறுவதில்லை. அக்னி உஷ்ணஜ்வாலையுடன் இருப்பது, மஹரிஷிகள் லோக க்ஷேமத்துக்காக தபஸ் செய்வது, யஜமானன் யாகத்தில் வபனம் செய்து கொள்வது எல்லாமே ப்ரஜாபதியின் ஸத்யவாக்குக்கு கட்டுப்பட்டு நடக்கிறது. அத்வர்யுவும் ப்ரஜாபதியின் ஸத்யவாக்குக்கு கட்டுபட்டு வபனம் செய்கிறான். यदृतं ...यदृतं...राख्यासम् இது வரை யஜமானன் சொல்ல வேண்டிய மந்த்ரம். ப்ரஜாபதியின் ஸத்யத்துக்கு கட்டுபட்டு எல்லா வ்ரதமும் செய்கிறேன். ஸத்ய ஸ்வரூபியான அவருடைய அனுகிரஹத்தால் எனக்கு எல்லாம் செய்ய சக்தி உண்டாகிறது.

வருணப்ரகாஸம் (2வது சாதுர்மாஸ்யம்) முடிந்ததும் வபனம் அத்வர்யு யஜமானனுக்கு செய்கிறான். மந்தரங்கள் முன் கூறின மந்தரங்களே, ஒரு மந்தரம் கூடுதலாக உள்ளது. यद्‌वक्षुः पर्यवर्तयत्...सवितेस्सह இந்த மந்த்ரம் மட்டும் அதிகம். இதற்கு அர்த்தம் ஸூர்யன் உலகம் பூராவும் ப்ரகாசப்படுத்துவது அக்னிக்கு எல்லாவற்றையும் எறிக்கக்கூடிய சக்தி, வருணன் புத்தி பலத்துடன் வேலை செய்வது. இந்திரன் தன் சிநேகிதர்களான மருத் தேவதைகளுடன் சேர்ந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொண்டு தங்கள் வேலையை செய்வது எல்லாம் ப்ரஜாபதியின் சத்தியத்துக்கு கட்டுபட்டுதான் நடக்கிறது.

ஸாகமேத யாகம் முடிந்த பிறகு வபனம் அத்வர்யு யஜமானனுக்கு செய்கிறான். முன் சொன்ன மந்திரங்களிலே ஒரு மந்திரம் அதிகம். यो अ :याः...सखिभिस्सह ஸூர்யன் ப்ரஜாபதியின் ஸத்ய வாக்குக்கு கட்டுப்பட்டு பூமியில் விதைக்கும் விதைகளை முளைக்கச் செய்கிறார்.

சுநாஸீரிய யாகம் முடிந்ததும் அத்வர்யு யஜமானனுக்கு வபனம் செய்கிறார். ஒரு மந்திரத்தைத் தவிற மற்றவை முன்போல்தான். एकमासं...जीवसे பரமேஷ்டி சாதுர்மாஸ்ய யாகத்தை ஸ்ருஷ்டி செய்தார். இந்த சாதுர்மாஸ்ய யாகத்தை அனுஷ்டித்து மனிதர்கள் அமர (இறப்பின்மையை) பாவத்தை அடையட்டும் என்று ஸ்ருஷ்டித்தார். யாகம் செய்தவனே புத்ர பௌத்திரிகளாக பிறந்து அதன் மூலமாக மரண மில்லாதத்தன்மையை அடைகிறான். எந்த மந்த்ர சாமர்த்தியத்தால் அர்த்த மாஸம், மாஸம், ருதுக்கள், ஸம்வத்ஸரங்கள் எல்லாம் தங்கள் தங்கள் காரியங்களை (அந்தந்த காலங்களில் உண்டாகவேண்டிய ஸஸ்யங்களை உண்டுபண்ணுதல்) செய்கின்றனவோ, அந்த மந்தரங்களை சொல்லி யஜமானனுக்கு வபனம் செய்கிறேன், யஜமானன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெகுகாலம் ஜீவிக்கட்டும். யஜமானனும் மந்த்ர சாமர்த்தியத்தால் எல்லா கார்யங்களும் செய்ய. சக்தி உண்டாகிறது என்று சொல்கிறார்.

அனுவாகம்—6

देवा वै यद्यज्ञेऽकुर्वत ।

இந்த அனுவாகத்தில் வபனம் எப்படிசெய்து கொள்ளவேண்டும், எங்கு ஆரம்பித்து முடிக்க வேண்டும் என்று விவரமாக சொல்லபட்டுள்ளது. முதலில் அஸுரர்கள், தேவர்கள் யாகத்தில் செய்வதை எல்லாம் பார்த்து தாங்களும் அப்படியே செய்து பலனை அடைந்து வந்தார்கள். ஆனால் சாதுர்மாஸ்ய முடிவில் தேவர்கள் செய்து கொண்ட வபனத்தை பார்க்காமல் தங்கள் இஷ்டப்படி செய்து கொண்டார்கள். அதாவது தலையில் ஆரம்பித்து அடுத்தபடி முகம், பிறகு கக்ஷம், மணிக்கட்டு, கால்கள் என்று கீழ்நோக்கி செய்து கொண்டார்கள். ஆதலால் நீசர்களாக ஆகி அபஜயத்தை அடைந்தார்கள். இவ்விதம் செய்து கொண்டால் அவர்களும் நீசர்களாக ஆகி அபஜயத்தை அடைவார்கள். தேவர்கள் வபனம் செய்து கொள்ளும் பொழுது முதலில் கக்ஷம் பிறகு மணிகட்டு, முகம், தலை என்று மேல் நோக்கி செய்து கொண்டார்கள். அதனால் பூலோகத்தில் ஐச்வர்யத்துடன் இருந்துவிட்டு மேல் நோக்கி ஸ்வர்க்கம் சென்று மேன்மையுடன் இருந்தார்கள். இது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

போல் செய்து கொள்பவர்கள் ஐச்வர்யத்துடன் வாழ்ந்துவிட்டு ஸ்வர்க்கம் செல்வார்கள்.

மனு என்பவர் ஒரு ப்ரகாரத்தை கண்டு. பிடித்து அதன்படி செய்தார். அதாவது முதலில் முகம், கக்ஷம், மணிகட்டு, தலை என்று இந்த முறையில் வபனம் செய்து கொண்டார். ப்ரஜா, பசு ஸம்ருத்தியுடன் விளங்கினார். ஆதலால் தேவர்கள் செய்துகொண்டது போல் அல்லது மனு செய்து கொண்டது போல் வபனம் செய்து கொள்ளவேண்டும். அஸுரர்கள் செய்து கொண்டது போல் செய்து கொள்ளக் கூடாது.

தேவர்களும் அசுரர்களும் ஒரு வருஷம் அனுஷ்டிக்க வேண்டிய யாகத்தின் பலத்தை அடையும் விஷயத்தில் விரோதம் (கலஹம்) செய்தார்கள். எங்களுக்கு தான் சாதுர்மாஸ்ய பலன் என்று தேவர்களும், எங்களுக்கு தான் சாதுர்மாஸ்ய பலன் என்று அஸுரர்களும் கலஹம் செய்து கொண்டார்கள். அஸுரர்களுக்கு ஸம்வத்ஸர பலன் கிடைக்காமல் இருக்க தேவர்கள் 3 வியூஹமாக பிரித்து அனுஷ்டித்தார்கள்.

1. இந்திரனை தலைவனாகக் கொண்ட வியூஹம்.
2. வருணனை ஸ்வாமியாக கொண்ட வியூஹம்.
3. ஸோமனை தலைவனாக கொண்ட வியூஹம்

வைச்வதேவத்தை அனுஷ்டித்து அஸுரர்களின் 4 மாத பலனை நாசம் செய்ததும் 1வது வியூஹம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வருணப்ரகாஸ பர்வாவை அனுஷ்டித்து அஸுரர்களின் 4 மாத பலனை நாசம் செய்தது 3வது வியூஹம். 2வது வியூஹம். ஸாகமேத பர்வாவை அனுஷ்டித்து அஸுரர்களின் 4 மாத பலனை நாசம் செய்தது இவ்வாறு அஸுரர்களின் ஒரு வருஷ பலன் நாசம் செய்யப்பட்டது. பிறகு தேவர்களுக்கு ஜயமும் அசுரர்களுக்கு பராஜயமும் (தோல்வி) ஏற்பட்டது. அதுபோல் சாதுர்மாஸ்ய யாகம் அனுஷ்டிப்பவன் விஜயத்தை அடைவான்.

சாதுர்மாஸ்யத்தில் யஜமானன் வபனம் செய்து கொள்கிறான். அத்வர்யு வபனம் செய்கிறார். ஏனி ஏலனி பன்றிமுள் (முள்ளம் பன்றிமுள்) அதில் மூன்று இடங்களில் வெள்ளையாக இருக்க வேண்டும். ஸீமந்தத்தில் வகுடு எடுக்க வாத்யார் முள்ளம்பன்றி முள் கொண்டு வருவதை பார்க்கலாம். அதனால் கேசத்தை பிரிக்க வேணும். அதாவது வபனம் செய்ய வேண்டிய பாகம் இது, வபனம் செய்ய வேண்டாத பாகம் இது என்று பிரிக்கவேணும். முள்ளில் 3 இடத்தில் வெள்ளையாக இருக்க வேணும். அதுதான் தேவர்களுக்கு பிரியம். காயத்ரீபாதம் 3, ஸவனங்கள் 3—1, ப்ராதஸ்ஸவனம் 2. மாத்யந்தின ஸவனம் 3, திருதீய ஸவனம். 3 ஸவனத்துக்கு 3 சந்தஸ் 1. காயத்ரீ 2. த்ருஷ்டுப் 3, ஜகதீ. 3, லோகங்கள் ப்ருதிவீ, அந்தரிக்ஷம், . த்யௌ: முள்ளில் உள்ள மூன்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெள்ளை இம்மூன்றுகளை ஞாபகப்படுத்துகிறது. வபனம் செய்யும் கத்தி இரும்பு, தாம்பரம் ஆக இரண்டு லோகத்தால் செய்யப்பட்டதாக இருக்க ணும். இவ்வாறு சாதுர்மாஸ்ய யாகம் செய்பவன் தேவர்களுக்கு மிகப்பிரியனாக ஆகிறான்.

அநுவாகம்—7

आयुष: प्राण सन्तनु

அக்னி சயனத்தில் செய்ய வேண்டிய இஷ்டகா உபதான மந்த்ரங்கள் 4வது காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. அங்கு சொல்லாமல் விட்டுப்போன 'ஸந்ததி' என்று பெயருள்ள இஷ்டகோபதான மந்த்ரம் இங்கு சொல்லப்படுகிறது. இஷ்டகை என்றால் இந்த இடத்தில் செங்கல் என்று வைத்துக் கொள்ள வேணும். இந்த மந்திரத்தை சொல்லி வைக்கப்படும் கல்லுக்கு 'ஸந்ததி' என்று பெயர். மந்திரத்தில் सन्तनु सन्तनु என்று பல வாக்யங்களில் வருவதால் ஸந்ததி இஷ்டகை என்று பெயர். இப்படி பல இஷ்டகைகளை வைத்தால் கருடாகாரமான மேடை அமையும், அதில் அக்னி ப்ரதிஷ்டை செய்து யாகம் செய்ய வேணும். இந்த அநுவாகத்தின் அர்த்தம்—ஆயுஸ்ஸுடன் ப்ராணன் சேரட்டும், ப்ராணனுடன் அபான வாயு சேரட்டும், அபான வாயுடன் வியான வாயு சேரட்டும், வியான வாயுடன் சக்ஷுரிந்திரியம் சேரட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இவ்வாறு என்னோடு ஒன்று சேர்ந்து அனுகூலமாக இருக்கட்டும் என்று அர்த்தம். [இதே மந்திரத்தை முமூர்ஷுவான தகப்பனாரின் வலது காதில் பிள்ளை ஜபிக்கிறான்] அங்கு ஒன்றோடு ஒன்று கலந்து அடங்கட்டும் என்று அர்த்தம்.

அனுவாகம்—8

इन्द्रोदधीची अस्थभिः

அதர்வ சீர்ஷம் என்று பெயருள்ள இஷ்டகைகளை உபதானம் செய்யும் மந்த்ரங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த அனுவாகத்தின் அர்த்தம் அதர்வா என்ற மஹரிஷியின் பிள்ளை ததீசி என்ற ரிஷியின் எலும்புகளைக் கொண்டு வஜ்ராயுதம் செய்து இந்திரன் விருத்ராசூரனை ஸம்ஹரித்தான். அக்னி பகவான் ஒரு ஸமயம் தேவர்களிடமிருந்து விலகி வந்து குதிரை உருவங் கொண்டு மலைப்பகுதியில் மறைந்து கொண்டார். தேவர்கள் தேடி சர்யணாவத் என்ற மலைப்பகுதியில் கண்டுபிடித்தனர். அக்னி இரவில் பிரகாசிக்கிறது. சந்திரன் இரவில் பிரகாசிக்கிறது. இந்த இரண்டு பிரகாசமும் சூர்யனுடையது தான் என்று தீர்மானித்தார்கள். அந்த தீர்மானம் சரிதான்.

अग्निर्वावादित्यः सायं प्रविशति सूर्यंरश्मिचन्द्रमाः என்று வேதத்தில் சொல்லி இருக்கிறது. சாம வேதம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரிக் வேதம், யஜுர் வேதம் மூன்றும் அதிகமாக இந்திரனையே ஸ்தோத்ரம் செய்கின்றன. இரண்டு குதிரைகள் பூட்டிய ரதத்தில் இருப்பவன், வஜ்ராயுதம் தரித்தவன், ஸுவர்ண ஆபரணங்களுடன் பிரகாசிப்பவன், உலகத்துக்கு ஒளி கொடுக்க ஸூர்யனை ஆகாயத்தில் நிருத்தியவர், நம் வாழ்கைக்கு நேரும் இடையூருகளை நீக்கி ரக்ஷிப்பவன், நமக்கு வேண்டியவைகளை கொடுப்பவன், மிகவும் ச்ரேஷ்டமானவன், பலவான், தனவான், யுத்தத்தில் திரும்பி ஓடாதவன், அப்படிப்பட்ட இந்திர ஸ்வரூபமாக அதர்வசீர்ஷ இஷ்டகையை பாவித்து வைக்கவேணும்.

அநுவாகம்—9

देवासुरास्संयत्ता आसन्

இந்த அநுவாகத்தில் ஸோம யாகத்துக்கு அங்கமான சில இஷ்டிகள் சொல்லப்படுகின்றன. அதற்கு முன் சிறிய கதை சொல்லி விட்டு இஷ்டிகளை ஸ்தோத்ரம் (ப்ரசம்சை) செய்கிறது வேதம். தேவர்களும் அசுரர்களும் யுத்தத்துக்கு தயாரானர்கள். இந்திரன் தேவராஜா ப்ரஜாபதியின் பிள்ளை. ப்ரஜாபதி தன் பிள்ளை இந்திரனை பலசாலிகளான அசுரர்கள் கொன்று விட போகிருர்கள் என்று மறைத்து வைத்துவிட்டார் ஹிரண்யகசிபுவின் பிள்ளை, ப்ரஹ்ராதன் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. புராணங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களில் ப்ரஹ்லாதன் என்று சொல்லப்பட்டுள்ளது. ப்ரஹ்லாதனின் தாய் பெயர் கயாது அவன் பிள்ளை விரோசனன். விரோசனன் அசுரர்களுக்கு ராஜா. ப்ரஹ்லாதன் தன் பிள்ளையான விரோசனனை பலசாலிகளான தேவர்கள் கொன்று விட போகிறார்களோ என்று மறைத்து வைத்தான். இரண்டு சைன்யங்களிலும் ராஜா இல்லை. தேவர்கள் நினைத்தார்கள் ராஜா இல்லாவிட்டால் சைன்யங்கள் யுத்தம் செய்யாமல் பயந்து ஓடிவிடுவார்கள். ஆதலால் ப்ரஜாபதியின் அநுமதியின் பேரில் இந்திரனை தேடுவோம் என்று நினைத்து, அவர் அநுமதியின் பேரில் தேட ஆரம்பித்தார்கள், கிடைக்கவில்லை. யாகம் செய்தால் ஸோம ரஸபானம் செய்ய ஆசைப்பட்டு வருவான் என்று நினைத்து ஜ்யோதிஷ்டோமம், உக்தியம் முதலிய ஸோம யாகத்தை அனுஷ்டித்தார்கள். இந்திரன் வரவில்லை ஸோம யாகம் மாத்திரம் செய்தோம். அங்கமான இஷ்டிகளை செய்யாததால் வரவில்லையோ என்று எண்ணி இஷ்டிகளை அநுஷ்டித்தார்கள். அதன் பிறகு இந்திரன் வந்துவிட்டான். எந்த கர்மாவை அநுஷ்டித்து இந்திரனை கண்டு பிடித்தார்களோ அதற்கு ரஷ்டி என்று பெயர். அந்த பெயரை மறைத்து இஷ்டி என்று வேதம் சொல்கிறது, தேவர்களுக்கு மறைமுகமாக பேசுவதில் ப்ரியம், மனிதர்களும் சொந்த பெயரை சொல்லி கூப்பிடாமல் ஆசார்யன், உபாத்யாயர், மிச்ரா என்று கூப்பிட்டால் ஸந்தோஷப்படு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிறார்கள். சில தேவர்கள் (சைன்யத்தில் உள்ள வர்கள்) அச்னி, விஷ்ணு இருவரையும் குறித்து தீக்ஷனீய இஷ்டியை அநுஷ்டித்தார்கள். சைன்யத்தில் உள்ள மற்ற தேவர்கள் தேடச்சென்று பத்னி ஸம்யாஜம் என்ற கர்மா (ஹோமம்) செய்யும் பொழுது இந்திரனை கண்டு பிடித்து அழைத்து வந்தார்கள். இந்திரன் வந்ததும் இஷ்டியை நிறுத்திவிட்டார்கள். மேல்கொண்டு அநுஷ்டிக்க வில்லை. இந்திரன் வந்து விட்டான் என்று ஸந்தோஷம். இந்திரனை கண்டுபிடிப்பதுதான் இந்த இஷ்டிக்கு பலன். பலன் கிடைத்து விட்டதால் மேல் கொண்டு தேவையில்லை என்று இஷ்டியை நிறுத்திவிட்டார்கள். இந்திரன் வந்து விட்டான் ஆனால் யுத்தம் செய்ய அவனுக்கு தைர்யம் வர வில்லை. தைர்யம் வருவதற்காக ப்ராயணீய இஷ்டியை தேவர்கள் அநுஷ்டித்தார்கள். சம்யுவாகம் என்ற கர்மாநுஷ்டானத்தினால் அவனுக்கு தைர்யம் வந்துவிட்டது. அத்துடன் அந்த இஷ்டியை முடித்து விட்டார்கள். மேல் கொண்டு அநுஷ்டிக்கவில்லை. தேவர்கள் செய்தபடி மனுஷ்யர்களும் இஷ்டிகளை அநுஷ்டித்தார்கள். அசுரர்களுக்கு யக்ஞ அநுஷ்டான ப்ரயோகம் தெரியாது. ஒரு சார புருஷனை தேவர்கள் ஸமீபம் அனுப்பி, தேவர்களுக்கு தெரியாமல் அவர்கள் செய்யும் ப்ரயோகத்தை அறிந்து வந்து அசுரர்களிடம் சொல்லுவான். அதன்படி அசுரர்கள் அனுஷ்டித்து பலனை அடைந்து விடுவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதை நடுப்பதற்கு தேவர்கள் உபஸத் ஹோமத்தை அனுஷ்டிக்கும் பொழுது, மந்திரங்களை மெதுவாக (பிறர்காதில் விழாதபடி) உபாம்சுவாக சொல்லி அனுஷ்டித்தார்கள். மற்றும் பல மாறுதல்களையும் செய்தார்கள் அதனால் சார் புருஷனால் ஒன்றும் அறியமுடியவில்லை. உபஸத்ஹோம மந்த்ரார்த்தம். உலகத்தில் உக்ரமான வார்த்தையும், த்வேஷமான வார்த்தையும் இருக்கக்கூடாது அதாவது பசிக்கிறது, ஆஹாரம் கிடைக்கவில்லை; தாகமாக உள்ளது, ஜலம் கிடைக்கவில்லை; என்று ஜனங்கள் கஷ்டப்பட்டு பேசுவது உக்ரமான வார்த்தை இது உலகத்தில் இருக்கக்கூடாது, ஜனங்கள் பசி, தாகம் இல்லாமல் க்ஷேமமாக இருக்கவேணும். கோக்களை (பசுக்களை) கொல்வது, நாட்டின் தலைவரை கொல்வது முதலியன त्वेषवाक् இது நம் நாட்டில் நடக்கக்கூடாது என்று உபஸத் யாக மந்த்ர அர்த்தம்.

அநுவாகம்—10

ससमुद्र उत्तरतः

இந்த அநுவாகத்தில் ஸோமயாக ஸம்பந்தமான மற்றும் பலவிஷயங்கள் சொல்லப்படுகின்றன. चात्वाल என்ற யாகவேதிக்கு வடக்கே ஒரு குழி வெட்டவேணும். அது ஸமுத்ரம் என்று பாவிக்கணும். யாகவேதியை பூமியாக பாவிக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேணும் சாத்வாலம் என்ற குழியின் இரு பக்கமும் வெள்ளி கம்பி, தங்கக் கம்பி வைத்து தங்கத்தை பகலாகவும் வெள்ளியை இரவாகவும் பாவிக்க அந்த குழியை இரவு பகலை உண்டு பண்ணும் ஸூர்யனாக பாவிக்கவும். அந்த ஸூர்யனை திருவ்ருத்-பஞ்ச தச, ஸப்த தச, ஏகவிம்ச அதாவது 3 ருக்கு 15 ருக்கு 17 ருக்கு 21 ருக்கு என்று பெருக்கி ஸ்தோத்ரம் செய்ய வேணும். இவ்விதம் ஸ்தோத்ரம் செய்து தேவர்கள் தனவந்தர்களாக ஆனார்கள். யஜமானனும் அவ்விதம் ஸ்தோத்ரம் செய்து தனவனாக ஆகலாம். சாத்வாலம் என்ற குழியை பற்றி பேசிக்கொண்டு இருந்த வேதம் குழியில் உள்ள ஜலத்தை (குட்டையில் உள்ள ஜலத்தை) ஆசமனம் செய்யக்கூடாது என்றும், அதற்கு காரணத்தையும் சொல்கிறது. கயாதுவின் பிள்ளையான ப்ரஹ்ராதன் (ப்ரஹ்லாதன்) தன்னுடைய பிள்ளையான விரோசனனிடம் ஏதோ காரணத்தால் கோபித்துக் கொண்டு விரோசனனை கையால் பிடித்து தூக்கி எறிந்தான், அவன் விழுந்த இடம் பெரிய பள்ளமாக ஆகிவிட்டது. பள்ளம் எல்லாம் அஸுர ஸம்பந்தம் உள்ளது (விரோசனன் அசுரன்) குழியில் உள்ள ஜலத்தை ஆசமனம் செய்யக்கூடாது. तस्मात् खातासु नाचामेत् न प्रदरोदके என்று ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறார். மழை பெய்து மேல்மாடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யில் இருந்த ஜலம் தாரையாக கீழேவிழும், அதில் ஆசமனம் செய்யக்கூடாது. குட்டை ஜலத்தில் ஆசமனம் செய்யக்கூடாது.

அநுவாகம்—11

यैवै चत्वारस्तोमाः

இந்த அனுவாகத்தில் ஜ்யோதிஷ்டோம யாகத்தில் உபயோகப்படக்கூடிய ஸ்தோமங்கள் (ஸாமவேதத்தில் உள்ளது) ருக்குகளின் ஆவ்ருத்தி 3, 15, 17, 21 என்று ஆவ்ருத்தி செய்த ருக்குகள் ஸ்தோமங்கள். மற்றும் புரோடாச ஆஹுதிகள், பசு யாசங்கள் முதலியன சொல்லப் படுகின்றன. 4 ஸ்தோமங்களைத்தான் ஸோம யாகத்தில் அனுஷ்டிக்க வேண்டியது, 4 ஸ்தோமங்கள் என்பது 4 பாதமுள்ள க்ருதயுக ஸ்வரூபம் அந்த யுகம் உயர்ந்தது, அதனால் 4 ஸ்தோத்திரங்களை உத்காதா சொல்ல வேணும். 5வது ஸ்தோமத்தை படிக்கக்கூடாது, 4 என்ற எண்ணுடன் 1 சேர்ந்தால் 5 ஆகிறது. அந்த 1 என்ற எண்ணிக்கை கலியுகத்தை குறிக்கிறது. கலியுகத்தில் தர்மம் ஒரு பாதத்துடன் நிர்க்க முடியாமல் கஷ்டப்படுகிறது. ஆதலால் கலியுக ரூபமான 5வது ஸ்தோமத்தை படிக்கக்கூடாது. 4 ஸ்தோமங்களும் யாகத்தில் ஜோதி ஸ்வரூபமாக ப்ரகாசிக்கின்றன. ஸூர்யனுடைய தேஜஸ் குறைந்து விட்டது. ஸூர்யன் தேவர்களைப் பார்த்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொன்னான். சிகிச்சை செய்து என்னுடைய தேஜஸ்ஸை விருத்தி செய்யுங்கள் என்றான். அச்வினி தேவர்கள் வருத்த யவையை ஹோமம் செய்தார்கள், பூஷா யவைமாவை நெய்யில் கலந்து ஹோமம் செய்தார். பாரதீதேவி பொறியினால் ஹோமம் செய்தாள். மித்ராவருண தேவர்கள் தயிரையையும், நெய்யையும் கலந்து ஹோமம் செய்தார்கள். இந்த ஹோமங்களால் ஸூர்யனுக்கு முன்போல் தேஜஸ் வந்துவிட்டது. மேலும் வஸுக்கள், ருத்ரர்கள் விச்வேதேவர்களும் புரோடாசம் (பக்வம செய்த அரிசி மாவு) ஹோமம் செய்து ஸூர்யனுக்கு தேஜஸ்ஸை விருத்தி செய்தார்கள்.

அநுவாகம்—12

स्यावाचोऽवपादादबिभयुः

இந்த அநுவாகத்தில் 7 சந்தஸ்ஸுகள் உயர்ந்தவைகளாக பேசப்படுகின்றன.

ஆதித்யன் உதயமாகி ஆகாச மார்க்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஆதித்யன் கீழே விழுந்து விடுவானோ என்று தேவர்கள் பயந்தார்கள். அதற்கு கீழே விழாமல் இருப்பதற்கு சாதனமாக 7 சந்தஸ்ஸுகளை கண்டு அவைகளை ஆச்ரயித்தார்கள். ஆச்ரயித்த சந்தஸ்ஸுகளில் கானம் செய்கிற சில ஸாமங்களுக்கு ச்ராயந்தீய ஸாம என்று பெயர் அந்த சந்தஸ்ஸுகளைக் கொண்டு ஆதித்யன் கீழே விழாமல் தடுத்தார்கள். அதற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரணமான ஸாமத்துக்கு வாரவந்தீயம் என்று பெயர். அனுஷ்டுப் சந்தஸ்ஸுக்கு 32 அக்ஷரங்கள். பங்திச்சந்தஸ்ஸுக்கு 40 அக்ஷரங்கள். உஷ்ணிக் சந்தஸ் 28 அக்ஷரங்கள் கொண்டது. த்ரிஷ்டுப் சந்தஸ்ஸுக்கு 44 அக்ஷரங்கள், காயத்ரீ சந்தஸ்ஸுக்கு 24 அக்ஷரங்கள், ஜகதீ சந்தஸ்ஸுக்கு 48 அக்ஷரங்கள், ப்ருஹதீ சந்தஸ் 36 அக்ஷரங்கள் கொண்டது. 7 சந்தஸ்ஸுக்கும் அக்ஷரங்களில் வித்யாஸம் இருப்பதால், அந்த சந்தஸ்ஸுகளை ஆச்ரயித்த ஆதித்யன் மேடு பள்ளமாக உள்ள ஆதாரம் நொடித்து மறுபடியும் கீழே விழுந்து விடுவானே என்று பயந்தார்கள். ஆதித்யன் சொன்னான் 36 அக்ஷரமுள்ள ப்ருஹதீ சந்தஸ்ஸில் நான் ஆச்ரயித்து இருக்கிறேன். கீழே விழமாட்டேன். ப்ருஹதீ சந்தஸ் நொடிக்காது என்றான். மற்ற சந்தஸ்ஸுகளும் தாங்கள் ப்ருஹதீ சந்தஸ்ஸாக இல்லையே என்று வருத்தப்பட்டன. நம்மால் ஆதித்யனுக்கு உபகாரம் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்பட்டன. இதைப் பார்த்து ப்ருஹதீ சந்தஸ் கருணைக்கொண்டு மற்ற சந்தஸ்ஸுகளையும் தன்னைப்போல் 36 அக்ஷரமுள்ள ப்ருஹதீ சந்தஸ்ஸாகவே செய்துவிட்டது எப்படி என்றால்,

அனுஷ்டுப்சந்தஸ்	32	அக்ஷரம்
பங்திச்சந்தஸ்	40	,,
	72	36 அக்ஷரமுள்ள 2 ப்ருஹதீ சந்தஸ் ஆகிவிட்டது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உஷ்னிக் சந்தஸ் 28 அக்ஷரம்
த்ருஷ்டுப் சந்தஸ் 44 ,,
—
72 36 அக்ஷரமுள்ள 2 ப்ருஹதீ சந்தஸ் ஆகிவிட்டது
—

காயத்ரீ சந்தஸ் 24
ஜகதீ சந்தஸ் 48
—
72 36 அக்ஷரமுள்ள 2 ப்ருஹதீ சந்தஸ் ஆகிவிட்டது.
—

இயற்கையான ப்ருஹதீ சந்தஸ் 1
செயற்கையான ,, 6
—
7
—

ஆக ப்ருஹதீ சந்தஸ் ஸூர்யனை கீழே விழாமல் தாங்குகின்றன. 7 ப்ருஹ்தீ சந்தஸ்ஸுகளையும் ஸூர்யன் ரதமாக செய்து அதில் உட்கார்ந்து கொண்டு ஆகாசத்தில் சஞ்சரிக்கிறார். சந்தஸ்ஸுகள் ரதமாக ஆனதால் ஸூர்ய ரதத்துக்கு சந்தோரதம் என்று பெயர். 2 சந்தஸ்ஸுகள் 2 சக்கரங்களாகவும், 2 சந்தஸ்ஸுகள் குதிரைகளாகவும் 2 சந்தஸ்ஸுகள் நீளமான மரமாகவும் ஆகிவிட்டன. இயற்கையான ப்ருஹதீ சந்தஸ் ஸூர்யன் உட்காரும் ஆஸனமாக ஆகிவிட்டது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸூர்யன் வேதத்தின் ப்ரபாவத்தால் கீழே விழாமல் ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்கிறுன்.

ஆருவது ப்ரச்னம்

ஒன்ருவது காண்டத்தில் 8வது ப்ரச்னத்தில் 22 அநுவாகங்கள் உள்ளன. அதில் 20 அநுவாகத்தில் ராஜஸூயம் என்னும் கர்மாவின் மத்தியில் அனுஷ்டிக்க வேண்டிய பலவிதமான ப்ரதான கர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளன. 21வது அநுவாகத்தில் ஸௌத்ராமணி என்னும் யாக மந்திரங்களும், 22வது அநுவாகத்தில் காம்யேஷ்டி யாகத்தில் உபயோகப்படுகிற யாஜ்யா, புரோனுவாக்யா மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அதாவது 2-வது காண்டம் 2-வது ப்ரச்னத்தில் 9வது அநுவாகத்தில் பல பல காமனையை உத்தேசித்து யாகங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த இஷ்டியில் ஹோமத்தில் உபயோகப்படக்கூடிய மந்திரங்களுக்கு யாஜ்யா, புரோனுவாக்யா என்று பெயர். ஹோமத்துக்கு முன்னுல் சொல்ல வேண்டிய மந்திரங்களுக்கு புரோனுவாக்யா என்றும், ஹோம சமயத்தில் சொல்லவேண்டிய மந்திரங்களுக்கு யாஜ்யா என்றும் பெயர். இவைகள் 1வது காண்டத்தில் 8வது ப்ரச்னத்தில் 22வது அநுவாகத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள்.

வேதம் இரண்டு விதம். 1. மந்த்ர பாகம் 2. ப்ராம்மண பாகம். ப்ராம்மண பாகத்திலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு விதம் இருக்கிறது. 1. ப்ராம்மணம் 2. அனுப்ராம்மணம். மந்திரங்களை எடுத்துக் கொண்டு, அந்த மந்திரங்களுக்கு எந்த கர்மாவில் எந்த ப்ரயோகத்தில் உபயோகம் என்பதை மட்டும் விதிப்பது ப்ராம்மண பாகம். மந்திரங்களை எடுத்துக்கொண்டு அவைகளுக்கு வியாக்யானம் (விரிவுரை) செய்து அர்த்தவாதத்துடன் சொல்வது அனுப்ராம்மணம். அர்த்த வாதம் என்றால் விதிக்கப்பட்ட கர்மா மிகவும் உயர்ந்தது. உயர்ந்த பலத்தை (நீ விரும்பிய பலத்தை) கொடுக்கும் என்று ஸ்தோத்ரம் செய்து அவச்யம் விதிக்கப் பட்ட கர்மாவை செய்ய வேணும் என்று சொல்லக் கூடிய வேதபாகம்.

இப்பொழுது 1-வது அஷ்டகத்தில் உள்ள 6, 7, 8 ப்ரச்னங்களில் தாத்பர்யம் எழுதப் படுகிறது. இந்த 3 ப்ரச்னங்களுக்கும் அனுப்ராம் மணம் என்று பெயர். 1-வது காண்டம் 8-வது ப்ரச்னம் ப்ராம்மணம், 1-வது அஷ்டகம் 6, 7, 8 ப்ரச்னங்கள் அனுப்ராம்மணம். ப்ராம்மணபாகத் தில் சொல்லப்பட்ட விதிபாகங்களை எடுத்துக் கொண்டு விசேஷமாக அர்த்தவாதத்துடன் (விதி ப்ரசம்சையுடன்) போதிக்கும் பாகம் அனுப்ராம் மணம். ப்ராம்மணபாகத்தில் அனுமதி தேவ தைக்கு முதலில் இஷ்டியும் இரண்டாவதாக நிரு ருதிதேவதைக்கு இஷ்டியும் சொல்லப்பட்டுள்ளது. அனுமதி என்றால் நன்றாக விளையக்கூடிய ஸஸ் யங்கள் நிறைந்த பூமி. நிருருதி என்றால் ஒன்றுமே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விளையாத பூமி (பாபதேவதை என்றும் சொல்ல லாம்). முதலில் பாப தேவதைக்கு ஹவிர்பாகம் கொடுத்து அனுப்பிவிட்டு பிறகு முதலாவதாக சொல்லப்பட்ட அனுமதி தேவதை (புண்ய தேவதைக்கு ஹவிர்பாகம் கொடுத்த; அவர்கள் அனுகிரஹத்தை பெறவேணும் என்று அனுப்ராம் மணம் சொல்லுகிறது. இதற்கு காரணம் பாஷ்ய காரர் சொல்லுகிறார். அதாவது லோகத்தில் வைத்தியர், வியாதி உள்ளவனின் வியாதியை முதலில் விரட்டிவிட்டு பிறகு ஆரோக்யத்துக்கு சரீர புஷ்டிக்கு மருந்து கொடுக்கிறார் அல்லவா அதுபோல்தான் இங்கும் என்கிறார். நிருருதி தேவதைக்கு ஒரே ஒரு கபாலத்தில் பாகம் செய்த புரோடாசம் என்றும் ஹவிஸ்ஸை ஹோமம் செய்ய வேணும். அப்படி செய்தால் ஒரே ப்ரயத்னத்தில் பாப தேவதையை விரட்டியதாக ஆகும். மற்ற தேவதைகளுக்கு போல் பல கபாலங்களை உப யோகித்தால் பாப தேவதையை விரட்ட பல ப்ர யத்னங்கள் செய்வதுபோல் தோன்றும் என்று அனுப்ராம்மணம் சொல்லுகிறது.

அநுவாகம்—1

अनुमत्यै पुरोडाशमष्टाकपालम्

கார்ஹபத்ய அக்னியில் ஹோமம் செய்து அந்த அக்னியின் அநுக்ரஹத்தை பெற்றுக் கொண்டு யாகசாலையின் தெற்கு வாசல் வழியாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வெளியே வந்து தானுகவே அமைந்த ஊஷர பூமியில் அல்லது பூமியில் உள்ள துவாரத்தில் கொள்ளிக் கட்டையை வைத்து அந்த அக்னியில் நிருருதி தேவதையை உத்தேசித்து கை இரண்டு கட்டை விரல்களால் புரோடாச ஹவிஸ்ஸை எடுத்து மந்த்ர பூர்வம் ஹோமம் செய்து, கருப்பு வஸ்திரத்தை தக்ஷிணையாக அந்த இடத்திலேயே வைத்துவிட்டு, ஜலத்தை அந்த இடத்தில் கொட்டி விட்டு, பாத்திரங்களையும் அங்கேயே போட்டு விட்டு, திரும்பி பார்க்காமல் வந்து கை கால்களை அலம்பிக்கொண்டு வந்த வழியாகவே திரும்பி யாக சாலைக்கு வந்து மறுபடியும் கார்ஹ பத்ய அக்னியில் ஹோமம் செய்து, அக்னியின் அனுமதியை பெற்றுக்கொண்டு, பிறகு அனுமதி தேவதைக்கு (புண்ய தேவதைக்கு) இஷ்டி செய்ய வேணும். இவ்விதம் பாபதேவதைக்கு ஹோமம் செய்யும் முறைகள் அனுப்ராம்மணத்தில் சொல் லப் பட்டுள்ளன. பாப தேவதைகளுக்கு செய்த கார்யங்களை உதாகரணமாக கொண்டு அவை களை நாம் செய்யக் கூடாது என்று பெரியோர் கள் சொல்லுவார்கள். அதாவது தெற்கு முகமாக ஒன்றும் செய்யக் கூடாது. ஊஷர பூமியில் வசிக்கக் கூடாது. கொள்ளிக் கட்டையை கையில் எடுத்து விளையாடக் கூடாது. தர்வி இல்லாமல் கையால் ஹோமம் செய்யக் கூடாது. விவாஹத் தில் மட்டும் மனைவி கையால் லாஜஹோமம் செய்ய வேண்டும் என்று வேதத்தில் விதிக்கப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பட்டுள்ளது. அதைத்தவிர மற்ற இடங்களில் கூடாது. கருப்பு வஸ்திரம் தரிக்கக்கூடாது. இவைகளை பெரியோர்கள் நம்முடைய நன்மைக்காகச் சொல்லுவார்கள். அக்னியை உத்தேசித்தும், விஷ்ணுவை உத்தேசித்தும் அக்னாவைஷ்ணவ இஷ்டி ப்ராம்மண பாகத்தில் விதிக்கப்பட்டுள்ளது. அக்னி ஸர்வதேவதா ஸ்வரூபம். எல்லா தேவதைகளைக் குறித்து அக்னியில்தான் ஹோமம் செய்கிறோம். விஷ்ணு யக்ஞஸ்வரூபம். ஆதலால் ஆக்னாவைஷ்ணவ இஷ்டியால் எல்லா தேவதைகளையும் யாக ஆரம்பத்தில் ஸம்பந்தப் படுத்தியதாக ஆகிறது. ப்ராம்மணத்தில் ஆக்னேய இஷ்டி, ஐந்திர இஷ்டி என்று யாகங்கள் சொல்லப்பட்டுள்ளன. அநுப்ராம்மணத்தில் அந்த இரண்டு யாகங்களையும் ஒரு யாகத்திலேயே சேர்த்து செய்யலாம் என்பதற்காக ஒரே பெயர் ஆக்ரயணம் வைக்கப்பட்டுள்ளது. ஆக்ரயண இஷ்டி செய்வதால் எல்லா தேவதைகளுக்கும் ஹவிர்பாகம் கிடைக்கிறது. ஸந்தோஷமாக இருக்கிறார்கள்.

ஆக்ரயண யாகத்தில் யார் தேவதை என்ற சர்ச்சை வந்தது. ஓட்டபந்தயம் வைத்தார்கள். அதில் இந்திரனும் அக்னியும் ஜெயித்தார்கள். அதனால் இந்திராக்னி தேவதை. ஆனாலும் அவர்கள் மூலம் எல்லா தேவதைக்கும் திருப்தி. அக்னி ஸர்வ தேவதாஸ்வரூபம், இந்திரன் தேவ ராஜா. ஔபாஸனாக்னியில் கார்நெல் அறுவடை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யானதும் அந்த புது அரிசியை ஹவிஸ் செய்து ஆக்ரயண ஸ்தாலீபாகம் செய்துவிட்டு, பிறகு தான் அந்த அரிசியை வீட்டுக்கு உபயோகிக்கிருர்கள். நித்யம் ஔபாஸனம் செய்யும் ஆஸ்திகர்கள் மற்றும் சில ஆஸ்திகர்கள் புது அரிசி வந்ததும் ஔபாஸனம் ஆரம்பித்துக் கொண்டு புது அரிசியிஞல் ஹவிஸ் செய்து ஸ்தாலீபாகம் செய்து விட்டு பிறகுதான் புது அரிசியை வீட்டிற்கு உபயோகிக்கிருர்கள். தெய்வத்தின் அருளால் கிடைத்த உணவை தெய்வத்துக்கு முதலில் ஸமர்ப்பித்துவிட்டு பிறகு நாம் உபயோகிப்பதாக தாத்பர்யம். பிறகு வைச்வதேவயாகம் விதிக்கப்பட்டுள்ளது. வைச்வதேவயாகத்தால் அன்னம் ருசியாகவும், ஆரோக்யத்தை கொடுப்பதாகவும் ஆகிறது. நாம் கிருஹத்தில் செய்யக்கூடிய வைச்வதேவ ஹோமத்துக்கும் இந்த பலன் உண்டு. இங்கு சில யாகங்களைப் பற்றி எழுதியுள்ளது. மொத்தம் எட்டு யாகங்கள் ப்ராம்மண பாகத்தில் விதிக்கப்பட்டுள்ளன. 8 என்கிற எண்ணிக்கைக்கும், காயத்ரீக்கும் ஸம்பந்தம் உள்ளது. அதாவது 3 பாதங்கள் கொண்ட காயத்ரீயில் ஒவ்வொரு பாதத்திலும் 8 அக்ஷரங்கள் உள்ளன. காயத்ரீக்கும் அக்னிக்கும் ஸம்பந்தம் உள்ளது. அதாவது காயத்ரீயும் அக்னியும் ப்ரஜாபதி தேவதையின் முகத்திலிருந்து தோன்றியது. ஆதலால் காயத்ரீக்கும் அக்னிக்கும் உடன் பிறந்த ஸம்பந்தம். ஆதலால்தான் காயத்ரீ ஜபம் செய்பவர்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகத்தில் அக்னி தேஜஸ், ப்ரம்மவர்சஸ் உண்டா கிறது.

அநுவாகம்—2 पृ॒श्नि॒दे॒वे॒नृ॒पं॑

அநுவாகம்—3 त्रिवृत् बर्हि र्भवति

ப்ராம்மண பாகத்தில் ராஜசூயயாகாங்கமாக சாதுர்மாஸ்யம் என்கிற யாகங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவைகள் 4 யாகங்கள் : 1. வைச்வ தேவ பர்வ 2. வருணப்ரகாச பர்வ 3. ஸாகமேத பர்வ 4. சுனுசீரிய பர்வ. வைச்வதேவ பர்வாவை பால்குன பௌர்ணமியில் அல்லது சைத்ர பௌர்ணமியில் ஆரம்பிக்க வேண்டும். அதிலிருந்து 4 மாதங்கள் கழித்து 2வது பர்வா வருண ப்ரகாசம் அநுஷ்டிக்க வேண்டும். அதிலிருந்து 4 மாதம் கழித்து ஸாகமேத பர்வ அனுஷ்டிக்க வேண்டும். அதிலிருந்து 4 மாதம் கழித்து சுனுசீரிய பர்வ அனுஷ்டிக்கணும். இவ்விதம் 4 மாதம் கழித்து ஒவ்வொரு பர்வாவையும் அனுஷ்டிப்பதால் ஒவ்வொரு பர்வாவையும் சாதுர்மாஸ்யம் என்பார்கள். 4வது பர்வ அனுஷ்டிக்கும்பொழுது 12வது மாதம் அதாவது 1வது பர்வ ஆரம்பித்த காலமே வந்துவிடும். வைச்வதேவ பர்வாவில் 8 இஷ்டிகள் விதிக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஐந்து இஷ்டிகளை அனுப்ராம்மணம் விவரிக்கிறது. ப்ரஜாபதி ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஜைகளை ச்ருஷ்டி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்ய விரும்பினார். வைச்வதேவ பர்வாவை அனுஷ்டித்து ப்ரஜைகளை ச்ருஷ்டி செய்தார். ச்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகளுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை. ப்ரஜாபதியினால் சிருஷ்டிக்கப் பட்ட ப்ரஜைகளில் ஒருவரான அக்னி தேவன் ப்ரஜாபதியிடம் சென்று உங்கள் ப்ரஜைகளுக்கு குழந்தைகள் இல்லை. அதற்கு பரிகாரம் செய்து ப்ரஜைகள் பிறக்கச் செய்கிறேன் என்றார். அப் பொழுது தனக்கு பேரக்குழந்தைகள் இல்லையே என்று வருத்தப்பட்டார். அக்னி பகவான் தனக்கு பிள்ளை இல்லையே என்று வருத்தப்பட்டார். ஆதலால்தான் லோகத்திலும் புத்ரன் இல்லாத வர்களும் பேரன்கள் இல்லாதவர்களும் வருத்தப் படுகிறார்கள். அக்னி பகவான் ப்ரஜைகளிடத்தில் கர்ப்பம் உண்டாகச் செய்தார். ஸோம தேவதை கர்ப்பம் விச்சின்னமாகாமல் தடுத்து ரக்ஷித்தார். ஸவிதாதேவதை காலத்தில் ப்ரஸவம் ஆகச் செய்தார். சரஸ்வதி பிறந்த குழந்தைகளுக்கு பேசும் திறமையை கொடுத்தாள். பூஷா தேவதை குழந்தைகளை வளர்த்தாள். ப்ரஜாபதிக்கு சந்தோ ஷம் ஏற்பட்டது. 1. அக்னி, 2. ஸோமன், 3. ஸவிதா, 4. ஸரஸ்வதீ, 5. பூஷா இந்த ஐந்து பேர்கள்தான் ப்ரஜாபதிக்கு பேரன்கள் ஏற்பட உதவியவர்கள். ஆதலால் இந்த ஐந்து பேர் களுக்கும் 3 பர்வாவில் அதாவது 1. வைச்வ தேவ பர்வ, 2. வருணப்ரகாச பர்வ, 3. ஸாகமேத பர்வா, இவைகளில் ஹவிர்பாகம் உண்டு. அப்படி இவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்கு பெருமை கொடுக்கப்பட்டுள்ளது. மருத் தேவதைகள் 21 பேர்களும் எங்களுக்கு வைச்வ தேவ பர்வாவில் ஹவிர்பாகம் கொடுக்காவிட்டால் ப்ரஜைகளை ஹிம்ஸிப்போம் என்றார்கள். அதனால் மருத்தேவதைகளுக்கு ஆருவது யாகத்தில் ஹவிஸ்ஸை கொடுத்து ப்ரஜைகளை ரக்ஷித்தார். ஏழாவது யாகம் வைச்வதேவ யாகம். எட்டாவது யாகத்தில் த்யுலோக தேவதைக்கும், பூலோக தேவதைக்கும் ஹவிர்பாகம். அதனால்தான் த்யு லோகம் மழை பொழிகிறது. பூலோகத்தில் ப்ரஜைகள் சௌக்யமாக இருக்கிறார்கள்.

ப்ரஜைகளுக்கு குழைந்தைகள் பிறக்க காரண மான அக்னி முதலிய 5 தேவர்களை அனுப்ராம் மணம் ஸ்தோத்திரம் செய்கிறது. தேவர்களுக் கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தது. அப் பொழுது அக்னி ஸேனாபதியாக பல சைன்யங் களுடன் யுத்தத்துக்கு சென்றார். ஸோமன் ராஜா வாக இருந்தார். ஸவிதா தண்டத்தை கையில் வைத்துக் கொண்டு ஸைன்யங்கள் திரும்பி ஓடா மல் விரட்டிக் கொண்டு இருந்தார். ஸரஸ்வதீ துந்துபி வாத்யம் வாசித்து ஸைன்யங்களை உத் ஸாகப்படுத்தினள். பூஷா ஸைன்யங்களுக்கு உதவியாக இருந்தார். அதனால் எந்த கிராமத்தில் அவர்கள் யுத்தத்தில் வேலை செய்தார்களோ அந்த கிராமத்தில் அவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. 1-வது அக்னிக்கு (ஸேனாதி பதி) 2-வது ஸோமன் (ராஜா) 3-வது ஸவிதா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(ஸேனை திரும்பி ஓடாமல் காப்பவர்) 4-வது சரஸ்வதி (வாத்யம் வாசித்து சேனைகளுக்கு உத்ஸாகம் செய்பவள்) 5-வது பூஷா (ஸேனைகளுக்கு உதவி செய்பவர்கள்). இந்த க்ரமத்தில் தான் அவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. 8-வது ஹவிஸ்ஸு புரோடாசம். புரோடாசத்தை நெய்யில் போட்டு ஹோமம் செய்ய வேண்டும். புரோடாசத்தின் மேல் நெய்யை கொஞ்சமாக ஊத்தினால் குறைந்த எண்ணிக்கையில் பசுக்களும் நிறைய பாலும் கிடைக்கும். நிறைய நெய்யை புரோடாசத்தில் ஊத்தினால் நிறை பசுக்களும் குறைந்த அளவு பாலும் கிடைக்கும். நமக்கு அதிக பசுக்களும் அதிக அளவு பாலும் தேவை. அதற்கு புரோடாசத்தில் நிறைய நெய்யை விடவேணும். ஆனால் ப்ரோடாசம் முழுகக்கூடாது, மேல் பாகம் தெரியவேண்டும். அதாவது புரோடாசத்தில் 4-ல் 3 பாகம் நெய்யில் முழ்கி இருக்கவேணும். 1 பாகம் வெளியில் தெரியவேணும். அப்படி செய்தால் நெய் நிரைய ஊத்தவில்லை 1 பாகம் தெரிகிறது என்று சொல்லலாம். நெய் நிரைய ஊத்தி இருக்கிறேன் புரோடாசத்தில் 3 பாகம் நெய்யில் இருக்கிறதே என்றும் சொல்லலாம். ஆதலால் முன் சொல்லப் பட்டபடி ¾ குறைந்த பசு என்ற தோஷமும், குறைந்த அளவு பால் என்ற தோஷமும் வராது. நிறைய பசுக்கள் நிறைய அளவு பால் கிடைக்கும். வாஜினம் என்ற ஒரு ஹவிஸ். அதாவது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காய்சிய பாலில் தயிரை விட்டால் பால் திரிந்து கெட்டி பாகம் தனியாகவும் ஜல பாகம் தனியாக வும் நிற்கும். வடி கட்டி கெட்டி பாகத்தை எடுத்து விடவேணும். அதற்கு ஆமிக்ஷை என்று பெயர். ஜல பாகத்துக்கு வாஜினம் என்று பெயர். அந்த ஹவிஸ்ஸை ருக், ஸாம இந்த மந்திரங் களுக்கு ஹோமம் செய்ய வேண்டும். ருக் ஸாம இரண்டும் இந்திரனின் அசவமாக (குதிரையாக) சொல்லப் பட்டுள்ளது. அக்னியின் 3 திக்கில் வைக்கப்பட்டுள்ள ஸமித்துகள் பரிதி என்பார் கள். அவைகள் குதிரையின் கடிவாளம் போன் றது. கடிவாளமான பரிதியை எடுத்து அக்னியில் வைத்துவிட்டு வாஜி ஹோமம் செய்ய வேணும். அப்பொழுது கடிவாளம் இல்லாததால் குதிரை நன்ருக சாப்பிட முடியும். அதே அபிப்ராயத்தில் தான் ஸ்மார்த்த கர்மாவிலும் பரிதிப்ரஹரணம் செய்து விட்டு ஸக்குஸ்ராவ ஹோமம் செய்கி ரோம். வாஜினயாகம் செய்த பின் மீத முள்ள வாஜி ஹவிஸ்ஸை ருத்விக்குகளும், யஜமானனும் சாப்பிடுகிருர்கள். லோகத்திலும் குழந்தைகளுக் கோ, பெரியோர்களுக்கோ பேதி ஆனுல் பசும் பாலை காய்ச்சி அதில் எலுமிச்சம் பழத்தை பிழிந்து கெட்டியாக திரிந்து வந்த பாகத்தை எடுத்து விட்டு ஜலமாயுள்ள வாஜினம் (Whey-water) வைத்தியர்கள் சாப்பிடச் சொல்கிருர்கள். உடனே குணமாகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அநுவாகம் — 4

प्रजापतिस्सविता भूत्वा प्रजा असृजत ।

ப்ரஜாபதி, ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்தார். ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகள் ப்ரஜாபதியை மதிக்காமல் அவமதித்து விட்டு ஓடிவிட்டார்கள். ப்ரஜாபதி கோபம் கொண்டு வருணரோகம் (வருண பாசம், மஹோதரவ்யாதி) வரும்படி செய்துவிட்டார். வருண ரோகத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ப்ரஜைகள் ரோக நிவ்ருத்திக்கு வழி தெரியாமல் ப்ரஜாபதியிடமே வந்து ப்ரார்த்தித்தார்கள். ரோகத்தை நிவ்ருத்தி செய்ய வேணும் என்று வேண்டினார்கள். ப்ரஜாபதி வருண ப்ரகாஸம் என்ற யாகத்தை அனுஷ்டித்து ப்ரஜைகளின் ஜல ரோகத்தை நிவிருத்தி செய்தார். எந்த கிராமத்தில் வருணப்ரகாஸ யாகம் நடக்கின்றதோ அந்த கிராம மக்கள், நகர மக்கள் ஜல ரோகம் இல்லாமல் (நீரழிவுரோகம்) நன்றாக வாழ்வார்கள்.

ப்ரஜைகளுக்கு வாதசீத ரோகத்தால் வலது கை குட்டையாகவும், இடது கை நீளமாவும் இருந்தது. அதனால் சிரமப்பட்டார்கள். எல்லா யாகங்களிலும் ஒரு வேதிதான் இருக்கும். வேதி என்றால் ஹவிஸ்ஸுகளை தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டிய இடம், இது ஒன்றுதான் மற்ற யாகங்களில் உண்டு. வருணப்ரகாச யாகத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு வேதியை நிர்மானித்து ப்ரஜைகளின் இரண்டு கைகளும் ஸமமாக இருக்கும்படி செய்தார். வருணப்ரகாஸ யாகம் செய்தவனுக்கு பரலோகத்தில் இரண்டு கையுமே வலுவுள்ளதாக இருக்குமாம். லோகத்தில் மனிதர்களுக்கு 'வலது கை மட்டும் வலுவுள்ளதாக இருக்கும். இடது கைக்கு வலு இருக்காது. வருணப்ரகாஸ யாகம் செய்தவனுக்கு பரலோகத்தில் இரண்டு கையும் வலுவுள்ளதாக இருக்கும். ஸவ்யசாசி அர்ஜுனனுக்கு இரண்டு கையும் வலுவுள்ளது என்பார்கள். அது போல்தான் இரண்டு வேதிகளும் இரண்டு கைகள் மாதிரி, இரண்டு வேதிக்கும் நடுவில் 13 அங்குலம் இடைவெளி விட்டு நிர்மாணிக்க வேண்டும். லோகத்திலும் மனிதர்களின் இரண்டு கைகளுக்கும் நடுவில் மார்பு அளவு 13 அங்குலம் இடைவெளி உள்ளதாக இருக்கிறது. 13 அங்குல இடைவெளி இல்லாதவன் உடல் ஆரோக்யத்துடன் இல்லை என்று அர்த்தம்.

அநுவாகம்—5

उत्तरस्यां वेद्यां

வடக்கே உள்ள வேதியில் சில ஹவிஸ்ஸுகளை வைக்க வேண்டும். தெற்கே உள்ள வேதியில் மருத்தேவதைகளுக்கு வேண்டிய ஹவிஸ்ஸை வைக்க வேண்டும். மருத்தேவதைகள் வைச்யர்கள். வர்ணாச்ரம தர்மப்படி அவர்களுக்கு தனி இடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொடுக்கப்பட்டுள்ளது. உத்தர வேதியில் உள்ள அக்னியில் அத்வர்யு என்ற ருத்விக் ஹோமம் செய்கிருர். தக்ஷிண வேதியில் உள்ள அக்னியில் ப்ரதிப்ரஸ்தாதா என்கிற ருத்விக் ஹோமம் செய்கிருர். உத்திரதிக்வேதியில் அத்வர்யு எந்த கர்மாக்களை செய்கிருரோ அதை பார்த்து அப்படியே ப்ரதிப்ரஸ்தாதா தக்ஷிண வேதியில் அந்தந்த கர்மாக்களை அப்படியே செய்ய வேணும். அப்படியே செய்கிருன். லோகத்திலும் லௌகிக, வைதிக கர்மாக்களில் ஸந்தேகம் ஏற்பட்டால், அறிந்தவன் எப்படி செய்கிருனே அதை பார்த்து அறியாதவனும் அப்படியே செய்கிருன். ஒருவன் தான் செய்த பாவத்தை பெரியவர்களிடம் சொல்லி தாபப்பட்டால் அந்த பாபம் நீங்கிவிடும் என்று தர்ம சாஸ்திரம்,

''पापं प्रख्यापयेत् पापी'' इति யாகம் செய்பவனின் பத்னி மற்றொரு புருஷனை மனதால் நினைத்திருந் தாலும் அவன் அழகாக இருக்கிருன் என்று நினைத்தாலும் பாபம், அதேபோல் மற்றொரு புருஷன் யாகம் செய்பவனின் பத்னியை மனதால் நினைத்தாலும் பாபம், இந்த பாபம் யாக பலத்தை தடை செய்யும். அதனால் யக்ஞம் செய்பவனின் பத்னியை ஒரு ருத்விக் கேழ்கிருர். நீங்கள் யாரையாவது நினைத்ததுண்டா என்று நினைத் திருந்தால் சொன்னதும் பாபம் போய்விடும், இல்லாவிடில் இல்லை என்று சொல்வான். தப்பு பரபுருஷனிடம் இருந்தால் அவனுக்கு மஹோத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரவ்யாதி வரும், யக்ஞபத்னி மிக தூய்மையுடன் இருக்கவேணும் என்பது தாத்பர்யம், வருண ப்ர காஸம் என்ற யக்ஞம் அனுஷ்டிப்பதற்கு முக்ய பலன் மஹோதர (ஜலோதர) வியாதி நிவ்ருத்தி பலன்.

அநுவாகம்—6

देवासुराःसंयत्ता आसन् ।

இந்த அநுவாகத்தில் ஸாகமேத யாகம் விதிக் கப்பட்டுள்ளது. ஸாகமேத யாகம் இரண்டு நாட் கள் செய்ய வேண்டியது. இந்த யாகத்தில் பல ஹவிஸ்ஸுகள் ஹோமம் செய்யவேணும். முதலில் ஸைன்யங்களோடு கூடின அக்னி தேவதை க்கு ஹோமம் செய்யப்படுகிறது. அதற்கு காரணம். ஒரு ஸமயம் தேவர்களுக்கும் அஸுரர் களுக்கும் யுத்தம் ஏற்பட்டது. அது ஸமயம் அக்னி பகவான் ஸைன்யங்களோடு கூடின எனக்கு ஹவிர்பாகம் கொடுங்கள். நான் என் னுடைய ஸைன்யங்களைக் கொண்டு அசுரர்களை அழித்து விடுகிறேன் என்றார். தேவர்களும் ஸாக மேத யாகத்தில் முதலில் ஸைன்யங்களோடு கூடின அக்னிக்கு ஹவிர்பாகத்தை கொடுத்தார் கள். அக்னி பகவானும் ஸந்தோஷப்பட்டு ஸைன்யங்களைக்கொண்டு அசுரர்களை 4 பக்க மும் வளைத்துக்கொண்டு ஜயித்து விட்டார். இரண்டாவது யாகத்தை மருத்தேவதைகளுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்தார்கள். மருத்தேவதைகள் ஸந்தோஷப்பட்டு அசுரர்களை பூலோகத்தில் தங்க முடியாமலும், ஸுவர்க்க லோகத்தில் தங்க முடியாமலும் விரட்டி விட்டார்கள். தேவர்கள் ஹவிஸ்ஸை தயாரித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். முதல் யாகம் அக்னியை உத்தேசித்து செய்தோம். அக்னி பகவான் ஸைன்யங்களை தயார் செய்தார். 2-வது யாகத்தை ஸாந்தமான மருத்தேவர்களுக்கு ஹோமம் செய்தோம். அவர்களும் பூலோகத்திலிருந்தும் ஸ்வர்க்க லோகத்திலிருந்தும் அஸுரர்களை விரட்டினார்கள். மூன்றாவதாக யாருக்கு ஹோமம் செய்யலாம் என்று பேசிக்கொண்டு இருக்கும் பொழுது ஹவிஸ் பக்குவமாகிவிட்டது. ஹவிஸ்ஸை சாப்பிட்டு விடுவோம் என்று சிலர் சொன்னார்கள். அது சரியில்லை. अग्निमुखावै देवा: என்பது வேதம். அக்னியில் ஹோமம் செய்த ஹவிஸ்ஸை அக்னி மூலமாக நமக்கு கிடைக்கும் பொழுது நாம் சாப்பிடவேணும், நேரடியாக சாப்பிடக் கூடாது என்றார்கள் சில தேவர்கள். ஒருவரும் சாப்பிடவில்லை. யாருக்கு ஹோமம் செய்யலாம் என்று விசாரணை செய்து, க்ருஹமேத் என்கிற மருத்தேவதைகளுக்கு மூன்றாவது யாகத்தை செய்து அவர்கள் மூலம் பல அசுரர்களை ஜயித்தார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—7

यत्पत्नी गृहमेधीयस्याश्नीयात् ।

கிருஹமேதீய இஷ்டி செய்த பின் ஹவிஸ் சேஷத்தை யஜமான பத்னீ சாப்பிட்டால் கிருஹ ஸம்ருத்தி, யக்ஞ ஸம்ருத்தி எல்லாம் யஜமான னுக்கு உண்டாகும். ஆனால் கிருஹமேதீய இஷ்டி நஷ்டமாக ஆகிவிடும். ஹவிஸ் சேஷத்தை சாப் பிடாமல் இருந்தால் யக்ஞம் (இஷ்டி) நஷ்டமாக ஆகாது. ஆனால் கிருஹ ஸம்ருத்தி, யக்ஞ ஸம் ருத்தி இல்லாமல் போகும். அதாவது இரண்டு பக்ஷத்திலும், ஒரு குணம் ஒரு தோஷம் இருக் கிறது. ஆதலால் இரண்டு பக்ஷத்தையும் விட்டு மூன்றுவது பக்ஷத்தை வேதம் சொல்லுகிறது. அதாவது பத்னிக்காக தக்ஷிணாக்னியில் அன்னம் தனியாக தயாரித்து பத்னியை சாப்பிடச் சொல்ல வேணும். அன்னத்தை சாப்பிட்டதால் சாப்பிட்ட பக்ஷத்தில் ஏற்படும் தோஷம் இல்லை. மூன்றுவது பக்ஷத்தில் என்ன செளகர்யம என்றுல் சாப்பிட வில்லை என்றும் சொல்லலாம். ஹவிஸ் சேஷத்தை சாப்பிடவில்லையே, சாப்பிட்டேன் என்றும் சொல்லலாம், தனியாக அன்னம் தயாரித்து சாப்பிட்டேனே, மூன்றுவது பக்ஷத்தில் முன் சொன்ன இரண்டு தோஷங்கள் வராது. ஸ்திரீ சேஷத்தை சாப்பிடக்கூடாது என்ற தர்ம சாஸ் திரத்துக்கு இந்த அனுஷ்டானம் மூலமாக இருக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லாம். கிருஹமேதீய இஷ்டியை அனுஷ்டானம் செய்து விட்டு தேவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள், அதாவது எண்ணெ தேய்துக்கொண்டு மங்கள ஸ்நானம் செய்தார்கள். கண்களுக்கு மை தீட்டிக்கொண்டார்கள். நன்ருக சாப்பிட்டார்கள். பால் குடிப்பதற்கு கன்றுகளையும் அவிழ்து பசுக்களிடம் அனுப்பினுர்கள். இதை எல்லாம் ஸந்தோஷத்தின் அடையாளம். இந்த ஸமயத்தில் அசுரர்கள் தேவர்களிடம் பசி என்னும் பிணியை அனுப்பினுர்கள். தேவர்கள் திருப்தியாக சாப்பிட்டு ஸந்தோஷமாக இருப்பதால் அவர்களிடம் பசி செல்ல வில்லை. அஸுரர்களிடமே பசி திரும்பி வந்து விட்டது.

கிருஹமேதீய இஷ்டியில் ஹோமம் செய்த ஹவிஸ் தயாரிக்கும் பொழுது சாதத்தில் மேல் வரும் கஞ்சியை இந்திரனுக்கு ஹோமம் செய்ய வேணும். ஹோதா யாஜ்யா மந்திரத்தை சொல்லி ''வௌஷட்'' என்றதும் மற்ற ஹோமங்கள் செய்வார்கள். ஆனுல் இந்த கஞ்சியை ஹோமம் செய்யும் பொழுது ஹோதா யாஜ்யா மந்திரத்தை சொல்லிவிட்டு காளை மாட்டை ஸந்தோஷப் படுத்தி கத்தச் சொல்லவேணும். அது கத்தும் பொழுது ஹோமம் செய்யவேணும். அதனுடைய சப்தம்தான் 'வௌஷட்' என்ற மந்திரத்துக்கு ஸமம் என்று பாவிக்க வேணும். இந்த ஹோமத்துக்கு மட்டும் விசேஷ விதி. மற்ற ஹோமங்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

களுக்கு ஹோதாதான் வௌஷட் என்ற மந்தி ரத்தை சொல்லவேணும்.

இந்திரன் ஒரு சமயம் வ்ருத்ராஸுரனை அடித்து கொன்றுவிட்டு அபராதம் செய்து விட்டோம், பெரிய இடத்து விரோதம் வந்து விட்டது, என்று பயந்து வெகுதூரம் ஓடிவிட் டான். விருத்ராஸுரன் இறந்துவிட்டானு அல்லது இறந்துவிட்டதாக நடிக்கிருனே என்று இந்திரனுக்கு ஸந்தேகம் வந்துவிட்டது. மருத் என்கிற தேவர்களிடம் சென்று வ்ருத்ரன் இறந்து விட்டானு இல்லையா என்று யார் அறிந்து வரு வார் என்று இந்திரன் கேட்டான். நாங்கள் கேட்ட வரத்தை கொடுத்தால் நாங்கள் போய் அறிந்து வருகிறோம் என்று மருத்தேவதைகள் சொன்னுர்கள். என்ன வரம் என்று கேட்டான் இந்திரன், எங்களுக்கு நான்காவதாக ஹோமம் வருகிறது. இருந்தாலும் எல்லா தேவதைகளுக் கும் முன்பே எங்களுக்கு நிர்வாபம் (எங்கள் பெயரை சொல்லி ஹவிஸ் செய்ய அரிசியை பிரித்து தனியாக வைக்க வேணும்) என்ருர்கள். அப்படியே செய்வதாக இந்திரன் ஒத்துக் கொண் டான். மருத்தேவர்களும் விருத்ராஸுரனின் சரீரத்தில் தைர்யமாக ஏறி குதித்து விளையாடி ஞர்கள். இந்திரன் சந்தோஷப்பட்டான். விருத் ராஸுரன் மேல் ஏறி விளையாடியதால் மருத் தேவர்களுக்கு க்ரீடிகள் என்று பெயர் (க்ரீடா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்றால் விளையாட்டு) விருத்தாஸுரவதம் செய்த தால் இந்திரனுக்கு மற்ற தேவதைகளைக் காட்டி லும் உயர்வு ஏற்பட்டது.

அனுவாகம்—8

वैश्वदेवेनवै प्रजापतिः प्रजा असृजत ।

இந்த அநுவாகத்தில் ஸாகமேத யாகாங்க மான மஹா பித்ருயக்ஞம் சொல்லப்படுகிறது. தக்ஷிணாக்னியில் ஹவிஸ் செய்து இந்த யாகம் செய்யவேணும். தக்ஷிணாக்னியின் தெற்கு பக்கம் இருந்து யாகம் செய்ய வேணும் என்று ஒரு பக்ஷம். பித்ருக்களுக்கு தக்ஷிண திக்கு பிரியம் என் பதால் ஏகோத்திஷ்டம் முதலிய ச்ராத்தத்தில் பித்ருக்களுக்கு மட்டும் ஹோமம். ஆதலால் அங்கு தெற்கு திக்கில் இருக்க வேணும். பித்ருயக்ஞத் தில் தேவர்களுக்கும் ஹோமம் இருப்பதால் வடக் கில் இருந்து ஹோமம் செய்யவேணும் என்று ஸித்தாந்தபக்ஷம், தக்ஷிணாக்னியில் தெற்கு ஓர மாக ஹவிஸ் செய்தால் பித்ருக்களுக்கு ப்ரீதி. பித் ருக்கள் இரண்டு விதம். 1. அக்னிஷ்வார்த்தர்கள் 2. பர்ஹிஷதர்கள். ச்ரௌத கர்மாக்களை செய்ய முடியாமல் ஸ்மார்த்த கர்மாக்களை மட்டும் அனுஷ் டித்தவர்கள் மரணத்துக்கு பிறகு அக்னிஷ்வார்த்த பித்ருக்கள் என்ற ஸ்வரூபத்தை அடைகிறார்கள். ச்ரௌத கர்மாவை அனுஷ்டித்து பிறகு மரண மடைந்த பித்ருக்களாக ஆனவர்கள் பர்ஹிஷத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பித்ருக்கள். இந்த இரண்டு பேர்களுக்குமே மஹா பித்ருயக்ஞத்தில் ஹவிர்பாகம் உண்டு கன்று இல்லாத பசு மாட்டின் பாலை கரந்து மாவில் கலந்து ஹோமம் செய்வது பித்ருக்களுக்கு பிரியம். தேவர்களும் பித்ருக்களும் ஹவிஸ்ஸில் பாதி தனக்கும் மற்றொரு பாதி மற்றவர்களுக்கும் என்று நினைக்கிறார்களாம் ஆதலால்தான் இஷ்டி யில் ப்ரயாஜ ஹோமம் செய்துவிட்டு மீதிமுள்ள ஆஜ்யத்தை ஹவிஸ்ஸில் அபிகாரம் செய்கிறார் கள். அக்னிஹோத்ரத்தில் பாதி பாலை ஹோமம் செய்துவிட்டு பாதி பாலை பித்ருக்களுக்கு ஸ்வாதா பித்ருப்ய: என்று வேதியில் ஸமர்பிக்கிறார்கள். மநுஷ்யன் மட்டும் பூர்ணமாக எல்லாவற்றையும் சாப்பிடவேணும் என்று நினைக்கிறானும்.

மஹா பித்ருயக்ஞத்தில் வேதி சதுரச்ரம் சம சதுரச்ரமாக இருக்க வேணும். இஷ்டியில் போல் தீர்க்கமாக இருக்கக்கூடாது. மனுஷ்யலோகத்தி லிருந்து பித்ருலோகம் கண்ணுக்கு தெரியவில்லை அல்லவா, அதனால் பித்ருயக்ஞம் நடக்கும் இடத்தை பாய், தட்டி முதலியவைகளால் மறைத்து விடவேண்டும். பர்வாவில் நருக்கிய தர்பை தேவர்களுக்கும் பர்வாவுக்கு மேல் நடுவில் நருக்கிய தர்பை மனுஷ்யர்களுக்கும் (பவித்ரம் ஆஸனம் முதலியவைகளுக்கும்) வேருடன் எடுத்த தர்ப்பம் பித்ருக்களுக்கும் உகந்தது. தர்பைகளை தெற்கு நுனியாக பித்ருக்களுக்கு போடவேணும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மஹா பித்ருயக்ஞத்தில் 2 பரிதிதான், தக்ஷிண பரிதி இல்லை. பித்ருக்களுடைய ப்ரீதிக்கு படுக்கை, தலையணை, மை, எண்ணை எல்லாவற்றை யும் சாதனம் செய்யவேணும்.

அநுவாகம்—9

अग्नये देवेभ्यः पितृभ्यः ।

இந்த அனுவாகத்திலும் பித்ருயக்ஞம் சொல் லப்படுகிறது. பித்ருயக்ஞத்தில் மூன்று ஸாமி தேனீ. ஸாமிதேனீ என்றால் மந்திரத்தை சொல்லி அக்னியில் ஸமித்தை வைக்கவேண்டும். ஸ்மார்த்த ப்ரயோகத்தில் இத்மம் வைப்பது போல் இஷ்டியில் 15 ஸாமிதேனீ பித்ருயக்ஞத் தில் 3 ஸாமிதேனீ. उशन्तस्त्वा என்ற ஒரே மந்தி ரத்தை 3 தடவை சொல்லவேணும். இஷ்டியில் இந்த கோத்திரத்தில், இந்த ப்ரவரத்தில் இந்த சர்மா உள்ள யஜமானன் இஷ்டி செய்கிறான் என்று சொல்ல வேணும். அதற்கு ஆர்ஷேய வாணம் என்று பெயர். இது பித்ருயக்ஞத்தில் செய்யக்கூடாது. இஷ்டியில் தேவதைகளுக்கு யாகம் செய்ய வேதியின் வடக்கில் உட்கார்ந்து ஹவிஸ்ஸை எடுத்துக்கொண்டு வேதியை தாண்டி தெற்கே வந்து வடக்கு முகமாக நின்று ஹோமம் செய்யவேணும். பித்ருக்களுக்கு ஹோமம் செய்ய வேதியின் தெற்கே உட்கார்ந்து ஹவிஸ்ஸை எடுத்து வேதியை தாண்டி வடக்கே வந்து தெற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முகமாக நின்று கொண்டு ஹோமம் செய்ய வேணும். தேவதைகளுக்கு ஹோமம் செய்யும் பொழுது ஆச்ராவய, அஸ்துச்ரௌஷட், வௌஷட் என்று சொல்ல வேண்டும். பித்ருக்களுக்கு ஹோமம் செய்யும் பொழுது ஆஸ்வதா, அஸ்து ஸ்வதா, ஸ்வதா நம: என்று சொல்ல வேண்டும் ஸ்வதா சப்தம் பித்ருக்களுக்கு பிரியம்.

3 அக்னிகள்

1. ஹவ்யவாஹன அக்னி—தேவதைகளுக்கு ஹவிஸ்ஸை சேர்ப்பிக்கிரவர்
2. கவ்யவாஹன அக்னி—பித்ருக்களுக்கு ஹவிஸ்ஸை சேர்ப்பிக்கிறவர்
3. ஸஹரக்ஷா அக்னி—அசுரர்களுக்கு ஹவிஸ்ஸை ஸமர்பிப்பவர்.

எதத்தே தத, எதத்தே பிதாமஹ, எதத்தே ப்ரபிதாமஹ என்று பிண்டங்களை வைக்க வேண்டும். தத என்றால் பிதா, பிதாமஹ என்றால் அப்பாவின் பிதா, ப்ரபிதாமஹ என்றால் தாதாவின் பிதா. வேதத்தில் பேரை சொல்லாததால் நாமும் பேரை 3 தலைமுறைவரை சொல்வதில்லை. அப்பா, தாதா, கொள்ளு தாதா என்றே சொல்கிறோம், பிண்டப்ரதானம் ஆனதும் வடக்கு முகமாக திரும்பிவிட வேணும். சாப்பிடும் பொழுது பார்த்துக் கொண்டு இருந்தால் பித்ருக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் வெட்கப்படுவார்கள். ச்ராத்தத்திலும் ப்ராம்மணுள் சாப்பிடும் பொழுது நாம் அங்கே இருக்கக் கூடாது. பரிமாறுகிறவர்கள் தான் இருக்கலாம்.

அனுவாகம்—10

प्रतिपूरुषमेककपालान् निर्वपति

இந்த அனுவாகத்தில் ஸாகமேத யாகத்துக்கு அங்கமான த்ரியம்பக யாகம் விதிக்கப்படுகிறது. யாகம் செய்பவனுடைய வீட்டில் எவ்வளவு மனிதர்கள் இருக்கிறுர்களோ அவ்வளவு புரோடாசமும் (ஹவிஸ்) அதிகப்படியாக ஒரு புரோடாசமும் தயாரித்து ஹோமம் செய்யவேணும். கிருஹத்தில் உள்ளவர்களுக்கு ஸௌக்கியமும், அதிகப்படியான ஒரு புரோடாசத்தால் பிறக்கப் போகிறவர்களுக்கு ஸௌக்யம் உண்டாகிறது.

இந்த அனுவாகத்தில் ருத்ரனுக்கு ஹோமம் செய்யச் சொல்லி இருக்கிறது. ருத்ரன் என்ருல் இங்கு க்ரூர தேவதை என்று அர்த்தம். ஸ்ரீ பரமேச்வரன் அல்ல. புரோடாச ஹோமம் செய்து க்ரூர தேவதையை திருப்தி செய்து யாக தேசத்தை விட்டு வெளியே அனுப்ப இந்த ஹோமம். கொள்ளிக்கட்டையை நாச்சந்தில் வைத்து அதில் ஹோமம் செய்யவேணும். இதிலிருந்து தெரிகிறது இங்கு ருத்ரன் என்பது ஸ்ரீ பரமேச்வரன் இல்லை. என்று. ஆனுல் த்ரியம்பகம் யஜாமஹே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்ற மந்திரத்தை சொல்லி அக்னியை ப்ரதக்ஷிணம் செய்கிருன். இந்த மந்திரத்தில் பரமேச்வர ப்ரார்த்தனைதான். மூன்று கண்களை உடையவர். புஷ்பித்த மரத்திலிருந்து வாசனை வெகுதூரம் வருவது போல் ஸ்ரீ பரமேச்வரன் சரீரத்திலிருந்து வாசனை வருகிறது. சரீரம், தனம் இவைகளை விருத்தி செய்பவர், அப்படிப்பட்டவரை பூஜிக்கிறேன். வெள்ளரிப்பழம் காம்பிலிருந்து நழுவது போல் மிருத்யுவிடமிருந்து நாங்கள் விடுபட வேண்டும். தீர்க்காயுஸ்ஸில் இருந்து விடுபடக் கூடாது. சிரஞ்ஜீவியாக இருக்கணும். ஹவிஸ் சேஷத்தை முட்டையாக கட்டி மரத்தின் கிளையில் கட்டிவிட வேண்டும். தூரதேசத்துக்குபோகிறவர்கள் கையில் சாப்பாடு கட்டிக்கொண்டு போவார்கள் அதுபோல், மரத்தில் கட்டி இருப்பது, நாம் வெளியே அனுப்பும் க்ரூர தேவதைக்கு கையில் கொண்டு போவதற்கு ஆஹாரம் போன்றது. ஹோமம், அக்னிக்கு பரிசேஷணம் செய்து விட்டு, திரும்பி பார்க்காமல் யாகசாலைக்கு வந்து ஆதித்யேஷ்டி செய்யவேணும். இப்படி செய்வதால் க்ரூர தேவதை பாதை இல்லாமல் ப்ரதிஷ்டிதமாக பூமியில் வாழ்ந்து கொண்டு இருப்பான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏழாவது ப்ரச்னம்

அனுவாகம்—1

एतद्ब्राह्मणान्येव पंचहवींषि

ஏழாவது ப்ரச்னத்தில் சுநாஸீரியம் என்ற யாகமும் இந்திரதுரீயம் என்ற யாகமும் அபாமார்க (நாயுருவி ஸமித்) ஹோமமும் விதிக்கப் படுகின்றன. வைச்வதேவ யாகம் செய்து 4 மாதங்கள் கழித்து வருணப்ரகாச யாகம். வருணப்ரகாச யாகம் செய்து 4 மாதம் கழித்து சாகமேத யாகம். சாகமேத யாகம் செய்து 4 மாதம் கழித்து சுனுஸீரீய யாகம் செயயவேணும். சுனுஸீரிய யாகம் செய்யும் பொழுது 12 மாதம் முடிந்து 13 வது மாதம் ஆரம்பம் ஆகிறது. ஆகவே ஒரு வருடம் முடிந்து 2 வது வருடம் ஆரம்பத்தில் சுனுஸீரிய யாகம் ஆரம்பமாகிறது.

சுந என்றால் வாயு, ஸீர என்றால் ஆதித்யன் (ஸூர்யன்) வாயு ஸூர்யனுடன் கூடின இந்திரனுக்கு சுநாஸீரிய யாகத்தில் ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. வாயுவுக்கு தனியாகவும், ஸூர்யனுக்கு தனியாகவும் ஹவிர்பாகம் கொடுக்கப் படுகிறது. இந்திரன், வாயு, ஸூர்யன் இவர்களின் உதவியால்தான் மழை பெய்கிறது. ஆதலால் இவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுக்கிறோம். மழை பெய்ததும், விவசாயிகள் பயிர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்ய கலப்பையால் உழுவார்கள் அல்லவா அதனால் தான் இந்த யாகத்தில் 12 மாடுகள் இழுக்கக்கூடிய அவ்வளவு வலுவான கலப்பையை தக்ஷிணையாக கொடுக்கச் சொல்லியிருக்கிறது. வேதத்தில் 12 மாடு இழுக்கக்கூடிய பலமுள்ள கலப்பை என்று சொல்லப் பட்டுள்ளது. (இதைத் தான் லோகத்தில் 5 குதிரை பவர், 10 குதிரை பவர், 12 குதிரை பவர் உள்ள மோட்டார் என்கிறார்கள்).

இப்பொழுது இந்திர துரீய யாகம் விதிக்கப் படுகிறது. தேவர்களும் அஸுரர்களும் யுத்தத்துக்கு தயாரானார்கள். அது சமயம் தேவர்கள் அக்னியை பார்த்து வீரனான உன்னால் நாங்கள் அஸுரர்களை ஜயிக்க வேணும் என்றார்கள். உடனே அக்னி தேவதை தன்னுடைய சரீரத்தை 3 உருவமாக பிரித்துக் கொண்டார். அக்னியாக இருக்கும் தன் ஸ்வரூபம் ஒன்று, ருத்ர ஸ்வரூபம் இரண்டாவது, வருண ஸ்வரூபம் மூன்றாவது. இப்படி 3 கூட்டமாக பிரிந்து அக்னி யுத்தத்துக்கு தயாரானார். நாலாவது கூட்டமாக யார் வரப் போகிறார்கள் என்று கேட்கும்பொழுது, இந்திரன் நான் 4 வது கூட்டமாக இருக்கிறேன் என்றான். துரீயம் என்றால் நான்கு. இந்திரன் நான்காவது கூட்டமாக இருந்ததால் இந்த நான்கு கூட்டத்துக்கும் இந்திர துரியம் என்று பெயர். நான்காவது குருப்பில் இருக்கிற இந்திரனுக்கு இந்த யாகத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹவிர்பாகம் கொடுப்பதால் இந்த யாகத்திற்கும் இந்திர துரீயம் என்ற பெயர் வந்தது. இந்த யாகத்திற்கு சத்ரு ஜயம் பலன். அடுத்ததாக பஞ்சேத்மீய ஹோமம். ஆஹவநீயத்திலிருந்து 4 திக்குகளிலும் அக்னியை எடுத்து வைக்க வேண்டும். நடுவில் ஆஹவனீய அக்னி ஆக 5. அக்னிகளில் 5 இத்மங்களை வைத்து 5 தரம் ஆஜ்யத்தை கிரஹித்து ஹோமம் செய்யவேணும். देवाः पुरस्सदः முதலிய ஐந்து மந்திரங்களை சொல்லி ஹோமம் செய்யவேணும். ஐந்து அக்னிகளில் இத்மத்தை வைப்பதால் பஞ்சேத்மீய ஹோமம் என்றும், 5 தரம் ஆஜ்யத்தை அவதானம் செய்து ஹோமம் செய்வதால், பஞ்சாவத்தீய ஹோமம் என்றும் பெயர். இந்த ஹோமத்துக்கு ராக்ஷஸர்களுடைய உபத்திரவம் நிவ்ருத்தி பலன். இந்த மந்திரங்கள் உதக சாந்தி ஜபத்திலும் உபயோகப் படுத்தப் படுகின்றன.

அபாமார்க ஹோமம் விதிக்கப்படுகிறது. விடிந்த பின் அக்னிஹோத்ர ஹோமம் செய்வதற்கு முன்பு, நீர் நிலையில் இருந்து அபாமார்க்கத்தை (நாயுருவீ) கொண்டு மாவு செய்து தக்ஷிணாக்னியிலிருந்து ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்து ஈசானதிக்குக்கு சென்று ஊஷர பூமியிலோ (உப்பு மண்) பூமியின் பள்ளமான இடத்திலோ வைத்து அக்னி பிரதிஷ்டை செய்து புரசு இலையால் அபாமார்க்த்தின் மாவை ஹோமம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்து ஹோமம் செய்த இலையையும் அக்னியில் போட்டுவிட்டு உபஸ்தானம் செய்யவேண்டும், கட்டிக் கொண்டிருக்கிற வஸ்திரத்தை தக்ஷிணை யாக கொடுக்கவேணும்.

ஒரு ஸமயம் இந்திரன் மிக பலமுள்ள விருத் ராஸுரனை வதம் செய்து விட்டு அவனைச் சேர்ந்த அஸுரர்களையும் ஜயித்தான். ஆனால் அவனைச் சேர்ந்த நமுசி என்ற அஸுரன் இருக்குமிடம் தெரியாததால் அவனை ஜயிக்கவில்லை. பிறகு அவனை கண்டுபிடித்து மல்யுத்தம் செய்கிறவன், எதிராளியை கட்டிப்பிடித்து அமுக்குவது போல் இந்திரன் தன்னுடைய சக்தியினால் நமுசி என்ற அசுரனை கட்டிப் பிடித்துவிட்டான். இருவர்களும் மல்யுத்தம் செய்து கொண்டு பூமியில் விழுந்து புரண்டார்கள். இந்திரனைக் காட்டிலும் நமுசி என்ற அசுரனுக்கு கைகளிலும் பாதங்களிலும் பலம் அதிகமாக இருந்தது. இந்திரனால் நமுசியை ஜயிக்க முடியவில்லை. இந்திரனுக்கு பிராணன் போகும் நிலை வந்துவிட்டது. நமுசி இந்திரனை பார்த்து பரிதாபப்பட்டு சில நிபந்தனையின் பேரில் உன்னை விட்டு விடுகிறேன். நீ கஷ்டப் படவேண்டாம். யுத்தத்தை நிறுத்திக் கொள்வோம் என்றான் நமுசி என்ற அசுரன். என்ன நிபந்தனை என்று இந்திரன் கேழ்க்க நமுசி சொன்னான். காய்ந்த (ஈரமில்லாத) மரக்கட்டை முதலானவை களாலும் ஈரமுள்ள கட்டை முதலானவைகளாலும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராத்ரி அல்லது பகலில் என்னை கொல்லக் கூடாது என்று நமுசி சொன்னான். இந்திரனும் இதை ஏற்றுக் கொண்டு சில காலம் ஸ்வஸ்தனாக இருந்தான்.

பிறகு ஒரு நாள் ஜலத்தின் மேல் உள்ள நுரையை எடுத்து நமுசி மேல் போட்டான். நுரை காய்ந்த வஸ்து இல்லை. காய்ந்த வஸ்துவாக இருந்தால் லேசாக இருக்கும், கனம் இல்லாததால் ஈரவஸ்துவும் இல்லை. நுரை என்பது ஈரவஸ்துவும் இல்லை. ஈரவஸ்துவாக இருந்தால் வஸ்திரத்தை நனைக்கணும், ஈரமாக்க வேணும், வஸ்திரத்தில் நுரையை போட்டால் வஸ்திரம் ஈரமாவதில்லை. ஆதலால் நுரை ஈர வஸ்துவும் இல்லை. காய்ந்த வஸ்துவும் இல்லை. அதனால் அதை ஆயுதமாக வைத்துக்கொண்டான். இந்திரன் விடியற்கால வேளையை பயன்படுத்திக் கொண்டான். நமுசியை கொல்வதற்கு விடியற் காலையில் வெளிச்சம் இருப்பதால் ராத்ரி என்று சொல்ல முடியாது. ஸூர்யோதயம் ஆகாத ஸமய மானதால் பகல் என்றும் நமுசி போட்ட நிபந்த னைக்கு விரோதமில்லாத வஸ்துவையும் காலத்தை யும் பயன்படுத்தி நமுசி என்ற அசுரனின் தலையை வீழ்த்தினான். இந்திரன் நமுசியை அடித்து கொன்றது தப்பு, ப்ராணன்போகிற அவஸ்தை யில் உள்ள இந்திரனை பரிதாபப்பட்டு விடுவித் தான். அவனை கொன்றது மித்ரத்ரோஹம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதனால்தான் நமுசியின் தலையை வீழ்த்தியவுடன் அந்த தலை இந்திரன் போகுமிடமெல்லாம் கூடவேவந்து மித்ரத்ரோஹி, மித்ரத்ரோஹி என்று இந்திரனை நிந்தை செய்து கொண்டு இருந்தது. இந்த சிரஸ்ஸை விரட்ட இந்திரன் அபாமார்க ஹோமம் முன் கூறியபடி செய்து நமுசி சிரஸ்ஸை விரட்டி விட்டு ஸ்வஸ்தமாக இருந்தான். நமுசி கதையை கேட்கும் பொழுது, ஹிரன்யகசிபு கதை ஞாபகத்துக்கு வருகிறது. அந்த கதைக்கும் இதற்கும் சிறிதளவு வித்யாஸம் இருக்கிறது. ஹின்யகசிபு தவம் செய்து ப்ரம்மாவிடம் வரம் பெற்றான். என்னை காய்ந்த வஸ்துவினாலும் ஈரவஸ்துவினாலும், பகலிலும் இரவிலும் யாரும் கொல்லக்கூடாது என்று வரம் பெற்றான். நமுசி இதையே ஒப்பந்தமாக இந்திரனிடம் கேட்டான். ஹிரண்யகசிபுவை மஹாவிஷ்ணு நகத்தினால் மார்பை பிளந்து கொன்றார். நகம் வளர்வதால் காய்ந்த வஸ்து இல்லை. ஈரவஸ்துவும் இல்லை. மஹாவிஷ்ணு இரவும், பகலும் இல்லாத ப்ரதோஷ காலத்தில் கொன்றார். நமுசியை இந்திரன் நுரையினால் அடித்தான், இரவும் பகலும் இல்லாத உஷத்காலம் விடியற்காலையில் அடித்துக் கொன்றான். நமுசி கதைக்கும் ஹிரண்யகசிபு கதைக்கும் கொஞ்சம் ஒற்றுமையும் இருக்கிறது. வேற்றுமையும் இருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுவாகம்—2

धात्रेपुरोडाशम्

இந்த அனுவாகத்தில் பல இஷ்டிகள் சொல்லப்படுகின்றன. கர்பாதானம் முதல் குழந்தை பிறந்து நன்ருக வளர்ந்து வித்யாப் யாஸம் முடித்து நல்ல நிலைக்கு ப்ரஜைகள் வரும் வரையிலான பயன்கள் அந்த அந்த இஷ்டி களுக்கு சொல்லப்பட்டுள்ளன, மனிதன் அசுசி யாவதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. அதில் ஆஹாரம் முக்ய காரணம். அதாவது பல இடங்களில் சாப்பிடுவது, பல வீடுகளில் சாப்பிடு வது. பல தடவை சாப்பிடுவது, பல பொருள்களை சாப்பிடுவது, சாப்பிடக்கூடாத வஸ்துக்களை சாப்பிடுவது, சாப்பிட வேண்டிய முறைப்படி சாப்பிடாமல் இஷ்டப்படி சாப்பிடுவது, பிறருக்கு அளிக்காமல் தானே சாப்பிடுவது, இடது கையால் ஜலம். பால் இவைகளை பருகுவது, இது போல் பலகாரணங்களால் மனிதன் (அசுசி) பாபம் செய்தவனுக ஆகிருன். இந்த பாபங்கள் நீங்க வைச்வாநரேஷ்டி சொல்லப்பட்டுள்ளது. இந்த இஷ்டியில் தக்ஷிணை ஸுவர்ணம் (தங்கம்). தங்கத்துக்கு அசுசி என்ற தோஷம் கிடையாது. மண்பாண்டம் அசுசியாளுல் தூக்கி ஏறிய வேண்டும். தங்கத்தை அசுசி என்றும் சொல்வ தில்லை. எறிவதும் இல்லை. அதனுல் தங்கத்தை தக்ஷிணையாக கொடுப்பது கொடுத்தவனை சுத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மாக்குகிறது. ஆஹார தோஷத்தில் சுத்திக்காக தான் வைச்வதேவம் செய்து சாப்பிடவேணும் என்று தர்ம சாஸ்திரத்திலும் சொல்லப் பட்டுள்ளது.

ராஜாக்கள் அசாஸ்த்ரீயமான பலகாரியங் களை செய்கிறார்கள். தனக்கு மனைவியாக பல ஸ்திரீகளை அபஹரிக்கிறார்கள். ஸபையில் ப்ராம் மணர்களை அவமானப்படுத்துகிறார்கள். மற்றும் பலவிதமாக பொய் சொல்லுகிறார்கள். இந்த தோஷங்கள் நீங்க வாருண இஷ்டி செய்ய வேண்டும். இதை செய்வதால் ராஜாக்களுக்கு ஏற்பட்ட தோஷங்கள் நிவ்ருத்தியாகும்.

அனுவாகம்—3

रत्निनामेतानि हवींषि भवन्ति ।

இந்த அனுவாகத்தில் 11 இஷ்டிகள் சொல்லப்பட்டுள்ளன. 11 இஷ்டிகளை 11 கிருஹங் களில் செய்யவேணும் 1. ப்ரம்மா என்கிற ருத்விக் 2. ராஜபுத்ரன் 3. மகிஷீ 4. பரி விருக்தி (ராஜாவுக்கு பிரியமில்லாத ஒரு ஸ்திரீ) 5. ஸேனானீ 6. ஸூதன் (தேரோட்டி) 7, க்ராமாதிபதி 8. க்ஷத்தா (ராஜாவின் அந்தப்புர பாதுகாப்பாளர் 9. கோசாத்யக்ஷன் (கஜானா அதிகாரி) 10. வரிவஸூலிப்பவன் 11. சூதாட்டம் ஆடுபவன். இந்த 11 பேர்களின் வீட்டுக்கு ராஜா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சென்று ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வீட்டில் யாகம் செய்வது என்ற முறையில் 11 நாள் 11 வீட்டில் செய்யவேணும். இந்த 11 பேர்களும் ரத்னின: என்று சொல்லப்படுகிருர்கள். அதாவது ரத்னங்களை உடையவர்கள். (பணக்காரர்கள் என்று அர்த்தம்) இது ராஜஸூய யாகத்தைச் சேர்ந்தது. அதனுல் ராஜா 11 வீட்டுக்கு போய் 11 யாகம் செய்கிருர். இதன் பலன் ராஜ்யம் நிரரந்தமாக கைமாருமல் சத்ருபயம் இல்லாமல் நடந்துவரும். 11 யாகத்தையும் ஒரே நாளில் செய்தால் தரித்ரனுக ஆகி விடுகிருன். 11 நாட்கள் செய்தால் தனிகனுக ஆகிருன். அதனுல்தான் நல்ல காரியங்களை சுருக்காமல் விஸ்தாரமாக செய்ய வேணும் என்று பெரியோர்கள் சொல்லு வார்கள். 11 வீடுகளுக்கு சென்று 11 யாகம் செய்து விட்டு ராஜா தன்னுடைய வீட்டுக்கு வந்து 2 இஷ்டிகளை செய்ய வேணும். ராஜா அபிஷேசனீயம் என்ற ஸோமயாகம் செய்வதற்கு முன்பு தீக்ஷணீய இஷ்டி செய்யவேணும். மித்ரன் பிருஹஸ்பதி இருவருக்கும் அந்த இஷ்டியில் ஹவிர்பாகம், அதாவது அன்னம், ஹவிஸ். வெள்ளை கன்றுள்ள வெள்ளை மாட்டின் பாலை கறந்து அந்த பாலில் பக்குவமான அன்னம் ஹவிஸ். யாகபூமி தானுகவே ஸமம் உள்ளதாக இருக்கவேணும். கொத்தி ஸமப்படுத்தக் கூடாது புளிப்புள்ள பாத்ரத்தில் பாலை கறந்தால் தானுகவே தயிராகி விடும். அதை யாகத்துக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உபயோகிக்க வேணும். காய்ச்சி பொரரை குத்தி த்யிர் தயாரிக்கக்கூடாது. நெய்யை அக்னியில் வைத்து உருக்கக்கூடாது. இலந்தை பழத்தை போட்டால் தானுகவே இளகி விடுமாம். அரசமர பாத்திரத்தை உபயோகிக்க வேணும். ஸமித்துக்கள் எல்லாம் காற்றில் விழுந்ததாக இருக்க வேணும். வெட்டி எடுக்கக்கூடாது. இந்த மாதிரி அபிஷேசனீய ஸோமயாக தீக்ஷணீய இஷ்டி சாமான்களை தயாரிக்க வேணும். நம்முடைய ப்ரயாஸை இல்லாமல் தானுகவே ஏற்பட்ட சாமக்ரீகளை வைத்து யாகம் செய்வதால், ராஜா யுத்த ப்ரயாஸை இல்லாமல் எல்லா தேசத்தையும் ஜயிக்கிருன்.

அநுவாகம் — 4

देवसुवामेतानिहवींषिभवन्ति ।

8 இஷ்டிகள் 8 தேவதைகளை உத்தேசித்து செய்யவேணும். 8 தேவதைகளுக்கும் தேவஸூவர்கள் என்று பெயர். ராஜா யாகம் செய்த பிறகு ஸ்வர்க்க லோகத்தில் ராஜா வந்ததும், ராஜா தேவதையாக ஆவதற்கு தகுதி உள்ளவர் என்று இந்த எட்டு தேவர்களும் ஆமோதிக்கிருர்கள். அதனுல் இந்த 8 தேவர்களுக்கும் தேவஸூவர்கள் என்று பெயர். 1. அக்னி 2. ஸோம 3. ஸவிதா 4. ருத்ரன் 5. ப்ருஹஸ்பதி 6. இந்திரன் 7. மித்ரன் 8. வருணன். இவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கள் தான் தேவஸூவர்கள். சில பேர்களுக்கு கருப்பு நெல் அரிசியில் தயாரித்த அன்னம், சில பேர்களுக்கு 60 நாட்களில் அருவடையாகிற நெல் அரிசி அன்னம், சில பேர்களுக்கு மோட்டாரக அரிசி அன்னம், சில பேர்களுக்கு புஞ்ஜை தான்யங்களால் தயாரான அன்னம், இவைகள் ஹவிஸ்ஸாக இருக்கின்றன. யாகம் செய்யும் ராஜா, க்ஷத்திரியன், வைச்யன் முதலியவர்களுக்கு ராஜா. ப்ராம்மணர்களுக்கு ஸோம தேவதைதான் ராஜா. க்ஷத்திரியனுக்கு ப்ராம்மணன் அடிமை இல்லை. ராஜா ப்ராம்மணனுக்கு கௌரவம் கொடுக்க வேணும் என்று ஸூசனம் செய்யப் பட்டுள்ளது.

அநுவாகம்—5

अर्थेतस्थेतिजुहोति ।

இந்த அனுவாகத்தில் ராஜாவின் அபிஷேகத் துக்காக 16 வித ஜலங்கள் கிரஹிக்கவேணும். 1. ஸரஸ்வதீ நதி ஜலம் 2. ஸமுத்ர ஜலம் 3. எதிர்த்து வருகிற அலை ஜலம் 4. நதியை அனு ஸரித்து செல்கிற அலைஜலம் 5. கிணத்து ஜலம் 6. காற்றால் கிளப்பி வருகிற ஜலம் 7. வாயுவுடன் கூடிய மழை ஜலம். 8. ஸூர்ய ப்ரதிபிம்பம் உள்ள ஜலம் 9. ஓடாமல் அசைவற்று உள்ள ஜலம் 10. பனி ஜலம் 11. மாடு. கன்று ஈர்க்கும் பொழுது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பனிக்குடம் உடைந்து வரும் ஜலம் 12. பால் ஜலம் 13. தயிர் ஜலம் 14 நெய் ஜலம் 15. தேனில் உள்ள ஜலம் 16. நதி ஜலம் இந்த 16 வித ஜலங்களை ராஜாவின் அபிஷேகத்துக்கு தயார் செய்து வைக்க வேணும்.

அநுவாகம்—6

देवीरापः संगृभ्णाति

இந்த அநுவாகத்தில் 16 ஜலங்களுக்கும் ஸம்ஸ்காரம் சொல்லப்படுகிறது. அபிஷேகத்துக்காக சேகரித்து வைத்த ஜலங்களை ஸூவர்ணத்தினால் உத்பவனம் (போகவர தள்ளுவது) செய்யவேணும். தர்பமுஷ்டியினால் ராஜாவை 16 ஜலத்தினால் ப்ரோக்ஷிக்க வேணும், தயிரை சாப்பிடச் செய்யவேணும். இந்திரிய விருத்தி உண்டாகும். அத்திப் பழத்தை சாப்பிடச் செய்யவேணும். அது உயர்ந்த ஆஹாரம். இளம்புல்லை சாப்பிடச் சொல்லவேணும். புத்திக்கு உத்ஸாஹம் உண்டாகும். ஒரு ஸமயம் இந்திரன் விருத்ராஸுரனை அடிக்க வஜ்ராயுதத்தை தூக்கி பிடிக்கும் பொழுது வஜ்ராயுதத்தின் கூரான அக்ரபாகம் த்யுலோகத்தில் இடிந்து பெரிய ரேகை (கோடு) விழுந்து விட்டது. அது ஸுவர்பானுக்கு வழியாக அமைந்தது.

आविन्नो द्यावः पृथिवी என்ற மந்திரத்தை சொல்லி இந்திரன் த்யுலோகத்தை பிரார்தனை செய்தான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அந்த மந்திரத்தை ராஜா சொன்னால் சத்ருஜயம் ஏற்படும். ராஜாவுக்கு வில், பாணங்களை மந்த்ர பூர்வமாக கொடுக்க வேணும்.

அனுவாகம்—7

दिशोऽभ्यास्थापयति ।

ராஜாவை திக்குகளுக்கு சென்று ஜெயித்துக் கொண்டுவர அனுப்பவேணும். அத்வர்யு ராஜா வுடன் சென்றால் ராஜாவுக்கு ஜயம் உண்டாகும். ஆனால் திக்ப்ரமம் உண்டாகும். அதனால் மனதினால் கூட செல்வது போல் பாவிக்க வேணும். மனதினால் செல்வதால் ராஜாவுக்கு ஜயம் வரும். கூட நடந்து செல்லாததால் திக்ப்ரமம் வராது. 4 திக்குகள் மேல்திக்கு (ஸ்வர்க்க லோகம்) ஐந்தையும் ஜயிக்கிறான். புரோடாசம் என்னும் ஹவிஸ் செய்ய 21 கபாலங் கள் வைக்கவேணும். கபாலங்கள் என்றால் ஒரு ரூபாய் அளவுக்கு களிமண்ணால் வட்டமாக செய்து அதை சுட்டு (செங்கல் சுடுவது போல்) தேவையான வஸ்து தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தந்த ஸமயம் தேவை யானதை எடுத்துக் கொள்ள வேண்டும். கபாலத்தின் கீழ் அக்னி வைத்து அக்னி மேல் கபாலத்தை வைக்க வேண்டும். கபாலம் சுட்டு விடும். அதன்மேல் மாவை பிசைந்து உருட்டி வைக்கவேணும். மாவின் மேலும் அக்னியை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வைக்க வேணும். மாவு பக்வமானதும் எடுத்து வைத்து ஹோமம் செய்யவேணும்.

இதைத்தான் அஷ்டாகபாலம். ஏகாதசக பாலம் என்பார்கள். அஷ்டாகபாலம் என்ருல் முன் சொன்னபடி எட்டு கபாலங்களில் பக்வமான புரோடாசம் என்கிற மாவு. இங்கு 21 கபாலங்களில் புரோடாசம் செய்ய வேணும், கிராமத்தில் அத்யயனம் செய்த 7 மந்திரத்தை சொல்லி முதலில் 7 கபாலங்களை அக்னி மேல் வைக்க வேணும். அடுத்ததாக அரண்யத்தில் அத்யயனம் செய்த 7 மந்திரங்களை சொல்லி 7 கபாலங்களை வைக்க வேணும். மறுபடியும் கிராமத்தில் அத்யயனம் செய்த 7 மந்திரங்களை சொல்லி 7 கபாலங்களை வைக்கவேணும். ஆரண்ய மந்திரம் நடுவிலும் கிராம மந்திரங்கள் இருபுரத்திலும் இருப்பது, கிராம மிருகங்களைக் கொண்டு ஆரண்ய மிருகங்களை பிடித்து கிராமங்களில் வளர்ப்பது போல் அமைந்துள்ளது. வேனனுடைய பிள்ளை ப்ருதி என்பவன் 6 (பார்த்) பார்த்த ஹோமங்களை செய்யாமலேயே ராஜாவாக பட்டாபிஷேகம் செய்து கொண்டான். அவனுக்கு ராஜ்யம் நிலைக்கவில்லை. பிறகு பார்த்த ஹோமம் செய்தான், ராஜ்யம் நிலைத்தது. அதனுல் இந்த ராஜாவும் 6 பார்த்த ஹோமங்களை செய்துவிட்டு ராஜாவாக அபிஷேகம் செய்து கொள்ள வேணும். அப்பொழுது தான் ராஜ்யம் நிலைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அபிஷேகத்துக்கு பிறகும் 6 பார்த்த ஹோமம் செய்யவேணும். ராஜமார்க்கத்துக்கு இரு பக்கமும் பாதுகாப்பு அமைக்கப்பட்டதுபோல் அமைகிறது. பார்த்த ஹோமத்துக்கு "பூதானும் அவேஷ்டி" ஹோமம் என்று பெயர். பூதம், பிசாசம், யக்ஷ, ராக்ஷசாளுடைய உபாதைகள் இல்லாமல் பாதுகாப்பதால் இந்த ஹோமங்களுக்கு பூதானும் அவேஷ்டி என்று பெயர். ராஜாவுக்கு பலவிதமாக மரணம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்த ஹோமங்கள் செய்வதால் ம்ருத்யு வராமல் தடுத்துக் கொள்ளலாம். யாராவது ராஜாவை குறித்து ஆபிசாரம் செய்தால் ஹோம பலத்தினுல் ராஜாவை ஆபிசாரம் தாக்காமல் ஆபிசாரம் செய்தவனையே திருப்பி தாக்கிவிடும். ஆதலால் ராஜஸூய யாகம் செய்த ராஜா சக்தி வாய்ந்தவர். அவரிடத்தில் ஆபிசார ப்ரயோகம் செய்யக்கூடாது.

அனுவாகம்—8

सोमस्य त्विषिरसि

ராஜாவை புலித்தோலின் மேல் உட்கார வைத்து அபிஷேகம் செய்யவேணும். सोमस्य त्विषिरसि என்ற மந்திரத்தை சொல்லவேணும். புலியினிடத்தில் உள்ள காந்தியும், சந்திரனிடத்தில் உள்ள காந்தியும் ராஜாவுக்கு வரும். புலி மனிதனுக்கு ம்ருத்யு. அதனுல் புலித்தோலின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மேல் தங்கத்தை வைத்து அதன் மேல் உட்கார வேண்டும். அதனால் ம்ருத்யு வராமல் தடுக்கிறான். ராஜாவின் தலைமேலும் தங்கத்தை வைத்து அபிஷேகம் செய்யவேணும். அதனால் ராஜாவின் மேலும் கீழும் இரண்டு புறமும் க்ஷேமத்தை உண்டு பண்ணுகிறான். இரண்டு கைகளையும் உயரே தூக்கிக்கொண்டு நிற்கிற ராஜாவை கிழக்கே அத்வர்யுவும், தெற்கே ப்ரம்மா என்ற ருத்விக்கும், மேற்கே க்ஷத்திரியனும், வடக்கே வைச்யனும் அபிஷேகம் செய்யவேணும். வேறு சாகையில் அபிஷேக மந்த்ரம் अग्नेस्त्वा என்று ஆரம்பிக்கிறது, அக்னியினால் தோல் வெந்து போய் துச்சர்மா (தோல் வியாதி) வரும். அதனால் நம்ம சாகையில் உள்ள सोमस्त्वा என்ற மந்திரத்தை சொல்ல வேணும், வியாதி வராது. இந்த மாதிரி இடங்களில் வேறு சாகையை நிந்திக்கும் அபிப்ராயம் இல்லை. ப்ரக்ருத சாகையை ஸ்தோத்ரம் செய்வதின் தாத்பர்யம். ஸ்நானம் செய்த பின் ஈரவஸ்திரங்களை उत्करः (வேண்டாத பொருள்களை போடும் இடம்) இடத்தில் போட வேண்டும். உடம்பிலிருந்து வழிந்த ஜலத்தை பாத்திரத்தில் பிடித்து ஹோமம் செய்ய வேணும். ஆக்னீத்ரம் என்ற அக்னியில் ஹோமம் செய்யவேணும். அதனால் யமனுக்கு ப்ரியம். प्रजापतेनत्वत् என்ற மந்திரத்தை சொல்லி. பிரியமான புத்திரன் மனைவி (மகிஷீ) இவர்கள் அன்வாரம்பனம் (தொட்டுக்கொண்டு இருக்கச்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்லி) ஹோமம் செய்யவேணும். அதனுல் ராஜாவின் புத்திரனும் ராஜ்யத்தை ஆளுவதற்கு தகுதி உள்ளவனுக ஆகிருன்.

அநுவாகம்—9

इन्द्रस्यवज्रोऽसि

ராஜா திக்விஜயம் செய்ய தேர் கொண்டு வந்து தயாராக வைக்க வேணும். 3 குதிரைகள் பூட்டியதாக ரதம் இருக்க வேணும். 2 சாரதிகள் இருக்க வேண்டும். மருத்தேவதைகளின் அனு கிரஹத்தால் ஜயம் உண்டாகும் என்று மந்த்ரம் சொல்லிக் கொண்டு ராஜா செல்கிருன். சத்ருக் களால் தான் ஆக்ரமிக்கப்படாமல் இருந்து கொண்டு சத்ருக்களை ஆக்ரமித்து ஜயிக்கிருன். தனக்கு விருப்பமான இடங்களை ஜயிக்கிருன். ஜயித்துவிட்டு திரும்பி வரும்பொழுது இந்திரியங் கள், வீர்யங்கள் எல்லாம் க்ஷீணித்து வருகிருன். समहमिन्द्रियेण என்ற மந்திரத்தைச் சொன்னுல் இந் திரியங்கள்; வீர்யங்கள் பழைய நிலையில் ஆகி விடும். ராஜா தேரில் இருந்து பூமியில் இறங் கும்பொழுது பூமியில் காலை வைத்தால், பூமி ராஜாவின் சக்தியை க்ரஹித்து விடுமாம். அதனுல் செருப்பு போட்டுக்கொண்டு பூமியில் இறங்க வேணும். அப்படி செய்வதால் பூமியில் நேராக காலை வைக்காததால் பூமி, ராஜாவின் சக்தியை இழக்காது. பன்றி தோலால் செய்யப்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செருப்பை ராஜா அணிந்து கொள்ள வேண்டும். பன்றிக்கு கோபம் அதிகம். அதன் செருப்பை அணிவதால் ராஜாவுக்கு யுத்த காலத்தில் கோபம் அதிகமாகும். கோபம் தேவைபடும்பொழுது வர வேணும். ரதத்திலிருந்து இறங்கிய பிறகு வெள்ளி மணி, ஸுவர்ண மணி, அத்தி மணி இவைகளை அணிய வேண்டும். பிறகு மணிகளை ப்ரம்மா என்ற ருத்விக்குவிடம் கொடுத்துவிட வேணும். ரத விமோசனீயம் என்ற ஹோமம் செய்துவிட்டு குதிரைகளை அவிழ்த்துவிட்டு ரதத்தை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்த வேண்டும். ராஜா யாக சாலையில் இறங்க வேண்டும். சாரதி ரதத்தை நிறுத்த வேண்டிய இடத்திற்குச் சென்றுதான் இறங்க வேண்டும்.

அநுவாகம்—10

मित्रोऽसि वरुणोऽसीत्याह

ராஜா அபிஷேகம் செய்யப்படும்பொழுது இரண்டு கைகளையும் மேலே தூக்கிக்கொண்டு இருந்தான். அபிஷேகம் முடிந்ததும் கைகளை கீழே இறக்க வேண்டும். ஒவ்வொரு கையாக இறக்க வேண்டும். முதலில் मित्रोऽसि என்று சொல்லி வலது கையை இறக்க வேண்டும். ஏ! வலது கையே, நீ மித்ரன் மாதிரி உபகாரம் செய்கிறாய். அதாவது போஜனம், தீர்த்தம் (தாகத்திற்கு ஜலம்) சாப்பிடும்பொழுதும் உபகாரம் செய்கிறாய்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாப்பாடு, தீர்த்தம் சாப்பிடுவது, பால் சாப்பிடுவது எல்லாம் வலது் கையாலேயே செய்ய வேணும் என்று வேதம் சொல்லுகிறது. அடுத்த படியாக वरुणोसि என்ற இடது கையை இறக்க வேண்டும். ஏ! இடது கையே, நீ அசுத்தத்தை ஜலத்தினால் அகற்றி சுத்தம் செய்கிறாய். ராஜா இரண்டு கைகளையும் ஆமிக்ஷையில் வைக்க வேண்டும். ஆமிக்ஷை என்றால் தயிரும், நெய்யும் கலந்தது என்று அர்த்தம். கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட பீடத்தில், தோலால் செய்யப்பட்ட துணியை 'வஸ்திரத்தை விரித்து) அதில் ராஜாவை உட்கார வைக்க வேண்டும். ராஜாவை சுற்றி ருத்விக்குகளும், ரத்னிகளும் (தனிகர்களும்) உட்கார வேண்டும். கிழக்கில் அத்வர்யு என்ற ருத்விக்கும், தெற்கில் ப்ரம்மா என்ற ருத்விக்கும், மேற்கில் ஹோதா என்ற ருத்விக்கும், வடக்கில் உத்காதா என்ற ருத்விக்கும் உட்கார வேண்டும். ராஜா அத்வர்யுவைப் பார்த்து ப்ரம்மன் என்று கூப்பிடுகிறான். ப்ரம்மன் என்றால் ப்ராம்மணன் என்று அர்த்தம். ராஜா அத்வர்யுவை பார்த்து ப்ராம்மணன் என்று கூப்பிட்டான். அத்வர்யு ராஜாவை பார்த்து நீதான் ப்ராம்மணன். ஏனென்றால் ப்ராம்மணன் ப்ராம்மண தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டிய உதவிகள் செய்கிறாய். அதனால் தான் நீ தான் ப்ராம்மணன் என்கிறார் அத்வர்யு. இவ்விதமே மற்ற ருத்விக்குகளும் ராஜாவை ஸ்தோத்ரம் செய்கிறார்கள். ஒரு ராஜா யுத்தம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்து ஜயத்துடன் வந்தால் ஸபையில் ராஜாவை சுற்றி உட்கார்ந்து மற்றவர்கள் ஸ்தோத்திரம் செய்வார்கள் அல்லவா அதுபோல் இங்கு நடக்கிறது. ராஜா ராஜசூய யாகத்தில் சூதாட்டம் ஆட வேணும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு ராஜா யாக சாலையில் ஒரு இடத்தை கொத்தி மேடுபள்ளம் இல்லாமல் சரிசமப்படுத்தி அங்கு உட்கார்ந்து கொண்டு விளையாட வேண்டும். இடத்தை சுத்தம் செய்து மேடு பள்ளம் இல்லாமல் செய்ய மரத்தால் செய்யப்பட்ட கத்தி போன்ற ஒரு ஆயுதத்தை ராஜாவிடம் கொடுக்க வேண்டும் அந்த ஆயுதத்துக்கு ஸப்யம் என்று பெயர்.

ராஜாவிடம் சூதாட்டம் ஆடுவதற்கு 5 தாயக் கட்டைகளை கொடுக்க வேண்டும். 5ம் ஸ்வர்ணத்தினால் செய்திருக்க வேண்டும். ராஜவிபவத்துக்கு தக்கவாறு இருக்க வேணுமல்லவா? 4 திக்குகள். மேல்திக்கு ஆக 5 திக்குகளுக்கு ராஜா அதிபதி, அதனால் 5 தாயக்கட்டைகளை கொடுக்க வேணும். மந்த்ரம் சொல்லி தாயக்கட்டைகளை கொடுப்பதால் ஜயிக்கவே செய்கிறான். ஒருபொழுதும் தோல்வி அடைவதில்லை. சூதாட்டத்தில் அன்னத்தையே (சாப்பாட்டையே) பணயமாக வைத்து ஆட வேண்டும். அன்னத்தினால் ஸர்வ ப்ராணிகளும் ஜீவிக்கின்றன. அதனால் அன்ன ஸம்ருத்தியை ராஜா அடைகிறான். மங்கள நாமாக்களை உடைய 3 பேர்களை ராஜா அழைக்க வேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஸுச்லோக 2. ஸுமங்கல 3. சத்ய ராஜன் இந்த 3 பேர்களும் மங்கள பெயர்களை உடையவர்கள். ஸுச்லோக என்பவன் கோசாதிபதி (கஜாநாதிபதி). கோசாதிபதியை எல்லோரும் ஸ்தோத்திரம் செய்வார்கள். அதனுல் ஸுச்லோகன் என்று பெயர் ஸுமங்கல என்பவன் கப்பத்தை வசூலிப்பவன். அளவோடு கப்பத்தை வசூலிப்பதால், ப்ரஜைகளை கஷ்டப்படுத்தாததால் அவனுக்கு ஸுமங்கல என்று பெயர் ஸத்ய ராஜன் என்பவன் அந்தப்புரத்தைக் காப்பவன். ஸத்யம் தவருமல் கட்டுப்பாட்டுடன் அந்தப்புரத்தை ரக்ஷிப்பதால் அவனுக்கு ஸத்ய ராஜன் என்று பெயர். இந்த 3 பேரும் நல்ல பெயர் உடையவர்கள். அவர்களை ராஜா அழைக்கிருன். சௌநச்சேபம் என்ற ருக்வேத மந்திரங்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. அதில் உள்ள கதைகளை ராஜாவுக்கு சொல்ல வேணும். அவப்ருதம் என்ற கர்மா அதில் 3 ஆஹுதிகள் செய்ய வேணும். ஒன்ருவது ஆஹுதி ஜலத்திலும், இரண்டாவது ஆஹுதி தர்பஸ்தம்பத்தின் நடுவிலும் அல்லது ஒரு மரத்தின் கட்டையிலும் அல்லது கரையான் புத்திலும் அதாவது ஏதாவது ஒன்றில் இரண்டாவது ஆஹுதியும் யாக சாலைக்கு திரும்பிவந்து கார்ஹபத்திய அக்னியில் மூன்ருவது ஆஹுதியும் செய்ய வேணும். மூன்று ஆஹுதிகள் செய்வதால் 3 லோகங்களில் ராஜா ப்ரதிஷ்டையை அடைகிருன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எட்டாவது ப்ரச்னம்

அநுவாகம்—1

வருணஸ்ய ஸுஷுவாணஸ்ய

ராஜஸூய யாக மத்தியில் அபிஷேசனீயம் என்று ஒரு ஸோமயாகம். அந்த ஸோம யாகத்தில் 10 ஹவிஸ்ஸுகள், 10 தேவதைகள். 1. அக்னி 2. சரஸ்வதி 3. ஸவிதா 4. பூஷா 5. பிருஹஸ்பதி 6. இந்திரன் 7. வருணன் (அபிஷேசனீய யாகம் செய்பவர் வருணன். அவர் பூர்வகல்பத்தில் உள்ள வருணனை உத்தேசித்து யாகம் செய்கிறார்) அதனால் 7 வது தேவதை பூர்வ கல்ப வருணன். 8. ஸோமன் 9. த்வஷ்டா 10. விஷ்ணு. அபிஷேசனீயம் என்ற ஸோமயாகத்தில் வருணன் ஸோமன் என்ற கொடியை கல்லால் அறைத்து பிழிந்து ஸோமரஸத்தை எடுத்தார். ஸோமரஸம் ஹோமம் செய்வதற்கு உபயோகமாகிறது. வருணனுடைய இந்திரிய ஸாமர்த்தியங்கள் 10 பாகமாக வெளியே சிதறி நஷ்டமாகிவிட்டன. மேலே சொல்லப்பட்ட 10 தேவதைகளுக்கும் 10 வித ஹவிஸ்ஸுகளை கொடுத்து (யாகம் செய்து) மறு படியும் இந்திரிய ஸாமர்த்தியங்களை வருணன் அடைந்தான். ஸ்ஸ்ரூப: என்றால் இந்திரிய ஸாமர்த்தியத்தை வருணனுக்கு மறுபடியும் கொடுத்த 10 தேவதைகளுக்கு பெயர். புரோடசம் சரு முதலிய 10 ஹவிஸ்ஸுகளுக்கும் ஸ்ஸ்ரூப் என்று பெயர். இந்த யாகத்தை அனுஷ்டிக்கிறவனுக்கும் இந்திரிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸாமர்த்யம் உண்டாகும். 10 யாகங்களை ஒரு நாளைக்கு ஒன்று விதம் 10 நாட்கள் அனுஷ்டிக்க வேணும். முதல் நாள் யாகவேதி எங்கு போடப் பட்டு யாகம் செய்யப்பட்டதோ அதற்கு பூர்வதிக் கில் (கிழக்கு திக்கில்) இரண்டாவது நாள் யாகம் செய்ய யாகவேதி போடவேண்டும். அதற்கு கிழக்கே மூன்ரும் நாள். இப்படி 10 யாக வேதி போட்டு 10 நாளைக்கு யாகம் (இஷ்டி) செய்ய வேணும். அபிஷேசனீயம் என்ற ஸோமயாகம் அனுசரித்த பிறகு संसृप् याग: (ஸம்ஸ்ருப்யாகம்) ஸம்ஸ்ருப் யாகத்துக்கு பிறகு தசபேயம் என்ற ஸோமயாகம்.

தசபேயம் என்ற ஸோம யாகத்தை 10 நாள் செய்ய வேண்டிய ஸம்ஸ்ருப் யாகத்தின் 7 வது நாளே ஆரம்பிக்க வேண்டும். ஏழாவது நாள் தசபேய யாகத்தின் தீக்ஷை 8, 9, 10 வது நாள் உபஸத் என்ற யாகம். உபஸத் யாகம் காலை மாலை இரண்டு வேளையும் செய்ய வேணும். எட்டாவது நாள் செய்ய வேண்டிய ஸோம தேவ தாகமான ஸம்ஸ்ருப் யாகத்தை காலை உபஸத் துக்கு முன் செய்ய வேணும். ஒன்பதாவது நாள் செய்ய வேண்டிய த்வஷ்ட்ரு தேவதாகமான ஸம் ஸ்ருப் யாகத்தை இரண்டு உபஸத்து, அதாவது காலை மாலை செய்ய வேண்டிய உபஸத் யாகத் துக்கு மத்தியில் மத்யான காலத்தில் செய்ய வேண்டும். பத்தாவது நாள் செய்ய வேண்டிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விஷ்ணு தேவதாகமான ஸம்ஸ்ருப் யாகத்தை மாலை உபஸத்துக்கு பிறகு செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் மேல் மேலும் யக்ஞம் செய்ய வாய்ப்பு கிடைக்கும்.

அனுவாகம்—2

जामिवाएतत्कुर्वन्ति ।

இந்த அனுவாகத்தில் தசபேயம் என்ற ஸோம யாகம் சொல்லப்படுகிறது. மற்ற ஸோமயாகங்களில் தீக்ஷையும், ஸோமக்ரயமும். தீக்ஷை என்பது நியமங்களுடன் இருப்பது, ஸோம க்ரயம் என்பது ஸோமலதை என்றும் கொடியை விலைக்கு வாங்குவது. இவைகளை வெவ்வேறு தினங்களில் செய்வார்கள். தசபேயம் என்ற ஸோமயாகத்தில் தீக்ஷையும், ஸோம க்ரயமும் ஒரே நாள் செய்ய வேண்டும். இரண்டு நாள் செய்ய வேண்டிய கார்யங்களை ஒரே நாள் செய்வதால் ஆலஸ்யம், அதாவது சலிப்பு ஏற்படுகிறது என்பார்கள். அது இல்லாமல் இருக்க தாமரைப் புஷ்பமாலையை யாகம் செய்பவர்க்கு போட வேண்டும். அங்கிரஸ் என்ற மஹரிஷிகள் யாகம் செய்து விட்டு ஸ்வர்க லோகம் போகும் பொழுது தீக்ஷை, தபஸ் இரண்டையும் ஜலத்தில் போட்டு விட்டு சென்றார்கள். அந்த தீக்ஷை, தபஸ் இரண்டும் தாமரைப் புஷ்பமாக ஆயிற்று, தாமரைப் பூமாலையை போட்டுத் கொள்வதால் தீக்ஷை, தபஸ் இரண்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

டையும் யஜமானன் அடைகிருன். தசபேயம் என்ற இந்த ஸோம யாகத்துக்கு பெயர் வந்த காரணம். சமஸம் என்று பெயருள்ள 10 மர பாத்திரங்கள், அவைகளில் ஸோமரஸம் வைக்கப் பட்டு 10 ப்ராம்மணர்கள் சாப்பிடுவார்கள். அதனுல் தசபேயம் என்று பெயர். மற்ற ஸோம யாகங்களில் ஹிரண்யம், வஸ்த்ரம் முதலிய 10 திரவ்யங்களை கொடுத்து ஸோமலதையை விலைக்கு வாங்குகிருர்கள். தசபேய யாகத்தில் 10 காளை கன்றுகளை கொடுத்து ஸோமலதையை வாங்க வேண்டும். ஸோமரஸத்தை 10 மரப் பாத்திரங்களில் நிரப்புகிருர்கள். ஹோமம் செய்த பிறகு 10 பாத்திரங்களில் உள்ள ஸோம ரஸத்தை. ஒவ்வொரு பாத்திரத்தில் உள்ள ஸோம ரஸத்தை 10 பேர்கள் சாப்பிடுகிருர்கள். ஆக 100 பேர்கள் ஸோமபானம் செய்கிருர்கள். தச பேய யாகத்தில் ஸ்தோத்திரங்கள் எல்லாம் 17 ஸங்கியை (எண்ணிக்கை) உள்ளதாக செய்ய வேண்டும்.

யார்யாருக்கு எந்தெந்த தக்ஷிணைகள் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அத்வர்யு என்ற ருத்விக்குக்கு 2 முகம் பார்க்கும் தங்க கண்ணுடிகள் கொடுக்க வேண்டும். தங்க தாமரை மாலை உத்காதா என்ற ருத்விக்குக்கு கொடுக்க வேண்டும். தங்க தோடாவை ஹோதா என்ற ருத்விக்குக்கு கொடுக்க வேண்டும். குதிரையை ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்தா என்ற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இரண்டு ருத்விக்குகளுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு குதிரையை இரண்டு பேருக்கு கொடுக்க வேணுமென்று வேதம் சொல்லி இருக்கிறது. வாங்கிக்கொள்ளும் இருவர்கள், விற்று பணத்தை பிறித்துக் கொள்ளலாம். அல்லது இவருக்கு தேவையான பொழுது இவர், அவருக்கு தேவையான பொழுது அவர் குதிரை சவாரி செய்யலாம். 12 சினை மாடுகளை (கர்பமான பசு மாடுகளை) ப்ரம்மாவுக்கு கொடுக்க வேணும். மைத்ராவருணன் என்ற ருத்விக்குக்கு சினை ஆகாத பசுவை கொடுக்க வேண்டும். ப்ராம்மணாச்சம்ஸ என்ற ருத்விக்குக்கு ரிஷபத்தை கொடுக்க வேண்டும். நேஷ்டா, போதா என்ற இரண்டு ருத்விக்குகளுக்கு வஸ்திரங்கள் கொடுக்கவேண்டும். அச்சாவாகன் என்றருத்விக்குக்கு நவதான்ய மூட்டை நிரம்பிய வண்டியை கொடுக்க வேண்டும். ஆக்னீத்ரன் என்ற ருத்விக்குக்கு வண்டி இழுக்கும் மாடு கொடுக்க வேண்டும். இந்திரன் ஸோமரஸத்தை பிழிந்து எடுக்கும் பொழுது அவனுடைய இந்திரிய சாமர்த்யம் மூன்றாக பிரிந்தது. ஒன்று ப்ருகு ரிஷியாக ஆகியது. ஒன்று சிராயந்தீயம் என்ற ஸாமாவாக ஆகியது. ஒன்று ஸரஸ்வதி நதியாக ஆகியது. தசபேய யாகத்தில் ப்ருகு கோத்திரத்தில் உண்டானவன் ஹோதாவாக இருக்க வேண்டும். ப்ரம்மா ச்ராயந்தீய ஸாம கானம் செய்ய வேணும். யாகமுடிவில் வாரவந்தீய ஸாமகானம் செய்ய வேண்டும். ஸரஸ்வதீ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நதியில் இருந்து வஸதீவரீ என்ற கர்மாவுக்கு ஜலம் எடுக்க வேண்டும். மற்ற ஸோம யாகங்களுக்கும் தசபேயத்துக்கும் சில மாறுதல்கள். தக்ஷிணை ஸாமகானம் ஹோதாவானம் ஜலக்ரஹணம் இவைகள் மாறுதல் உள்ளன.

அநுவாகம்—3

ईश्वरो वा एषदिशोऽनून्मदितोः

இந்த அநுவாகத்தில் திசாம் அவேஷ்டி என்கிற இஷ்டிகளும். 2 பசு யாகமும் (பசுயாகம் என்று சொல்லப்படும் இடங்களில் எல்லாம் ஆடு தான் பசு என்று சொல்லப்படுகிறது. பசு மாடு என்ற அர்த்தம் இல்லை) சாத்யதூத ஹவிஸ்ஸுகளும் சொல்லப்படுகின்றன. அத்வர்யு ராஜாவை திக்குகளுக்கு சென்று ஜயத்துடன் வருவதற்கு அனுப்புகிறான். ராஜாவுக்கு திக்குகள் மறக்காமல் (சந்தேகம் வராமல்) இருக்க 5 இஷ்டிகளை செய்ய வேணும், 5 திக்குகள் கிழக்கு முதலிய 4 திக்குகள் மேல் திக்கு ஒன்று ஆக 5 திக்குகள். 5 இஷ்டிகள் செய்வதால் 5 திக்கு ப்ரமம் இல்லாமல் இருக்கும்.

1. ஆக்னேய இஷ்டி 2. ஐந்திர இஷ்டி 3. வைச்வதேவ இஷ்டி 4. மைத்ராவருண இஷ்டி 5. பார்ஹஸ்பத்ய இஷ்டி, ஒவ்வொரு ஹவிஸ்ஸையும் ஹோமம் செய்துவிட்டு 5-வது ஹவிஸ் பார்ஹஸ்பத்ய ஹவிஸ்ஸில் அபிகாரம் செய்ய வேணும் அதனால் யஜமானனுக்கு தேஜஸ்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விருத்தியாகும். அதிதி தேவதாகமான பசுயாக மும் மருத்தேவதாகமான பசுயாகமும் செய்ய வேணும். அதிதி தேவதாகமான பசு (ஆடு) கழுத்தில் ஸ்தனம் போன்ற சதை தொங்குவதாக இருக்க வேணும், மருத்தேவதாகமான பசு வெள்ளையாகவும், சின்ன உடல் உள்ளதாக இருக்க வேணும். இந்த 2 பசுயாகத்தால் ராஜ்யமும், விவசாயமும் நன்ருக நடக்கும். ஆதித்ய பசுவின் மந்திரங்களை உறக்க சொல்லவேணும். மருத் யாகத்தில் மந்திரங்களை மெதுவாக சொல்ல வேணும். அதனுல் ராஜாவுக்கு வைச்யர்கள் கட்டுப்பட்டு ராஜவார்த்தையை மீறுவதில்லை.

ஸாத்ய தூத என்ற யாகம் சொல்லப்படுகிறது. இந்த யாகத்துக்கு 3 ஹவிஸ்ஸுகள், 3 தேவதைகள்—அச்வினீ தேவதைகள், பூஷதேவதை, ஸரஸ்வான். எங்கு ஹவிஸ் என்று சொன்னுலும் புரோடாசம் (அரிசி மாவால் செய்யப்பட்டது), அன்னம், தயிர், பால் என்று வைத்துக்கொள்ளவும். ஸாத்ய தூத ஹவிஸ் யாகம் செய்யும் தேவர்கள், அசுரர்களை யுத்தத்தில் ஜயிப்பதற்காக, தங்களுடைய வாக்கில் உள்ள உண்மை பேசும் தன்மையை அச்வினி தேவதைகள் பூஷ தேவதை, இருவர்களிடம், பிறகு வாங்கிக் கொள்வதாக சொல்லி கொடுத்துவிட்டு, பொய் பேசி அதாவது யுத்தம் செய்வதில்லை என்று வாக்குருதி கொடுத்து விட்டு அஸுரர்கள் தூங்கும் பொழுது கொன்று விட்டார்கள். பிறகு உண்மை பேசுகிற ஸத்யவான் என்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிற தேவதைக்கு யாகம் செய்து போய் பேசிய பாபத்தை நிவ்ருத்தி செய்து விட்டு அச்வினீ தேவதைகளிடமும், பூஷ தேவதையிடமும் கொடுத்து வைத்த உண்மையை திரும்பி பெற்றுக் கொண்டார்கள். அதனுல் இந்த மூன்று ஹவிஸ்ஸை கொண்டு ஸாத்ய தூத யாகம் செய்யவேணும். ராஜாவை புகழ்ந்து பேசுகிற தூதர்களை பல இடங்களுக்கு அனுப்பி ராஜாவை புகழச் சொல்ல வேணும்.

அநுவாகம்—4

आग्नेयमष्टाकपालंनिर्वपति

இந்த அநுவாகத்தில் ப்ரயுஜாம் ஹவீப்ஷி என்கிற 12 இஷ்டிகள் சொல்லப்படுகின்றன. முதலில் 6 இஷ்டிகளை செய்து விட்டு ரதத்தை வஹிக்கிற வண்டியை இழுக்கிற வலது பக்க காளையை தக்ஷிணையாக கொடுக்கவேண்டும். பிறகு 6 இஷ்டிகளை செய்து விட்டு இடது பக்க காளையை தக்ஷிணையாக கொடுக்கவேணும். இங்கு ராஜாக்கள் செய்யக்கூடிய ராஜஸூய யாகம் சொல்லப்படுகிறது. ப்ரயுஜாம் ஹவீம்ஷி (இஷ்டிகள்) செய்யும் பொழுது ராஜஸூய யாகம் ஆரம்பமாகி ஒரு வருடம் முடிந்து இரண்டாவது வருடம் ஆரம்பமாகிறது. அதாவது பால்குண பௌர்ண மாஸைக்கு முன்பே ராஜஸூய யாகத்தை ஆரம்பித்து, பவித்ரம் என்ற ஸோமயாகம், ஆனுமதம் முதலிய இஷ்டிகளை அநுஷ்டித்து விட்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பால்குண பௌர்ணமாஸி முதல் சாதுர்மாஸ்ய யாகம் செய்ய வேணும். வைச்வதேவ யாகம் செய்து 4 மாதங்கழித்து வருணப்ரகாஸ யாகம். அதன் பிறகு 4 மாதம் கழித்து ஸாகமேத யாகம். அதன் பிறகு 4 மாதம் கழித்து சுனாஸீரிய யாகம் ஆரம்பிக்கும் பொழுது மறுபடியும் பால்குண பௌர்ணமாஸீ வந்து விடுகிறது. அதாவது ஒரு வருடம் முடிந்து இரண்டாவது வருடம் ஆரம்பமாகிறது. சுனாஸீரிய யாகம், இந்திரதுரீய யாகம் தேவிகாதி இஷ்டிகள், ரத்னினும் இஷ்டிகள் இவைகளை அநுஷ்டித்து விட்டு பால்குண அமாவாஸ்யை அன்று அபிஷேசனீயம் என்ற ஸோம யாகத்துக்காக தீக்ஷை செய்து கொண்டு தீக்ஷணீயேஷ்டி செய்து விட்டு, தீக்ஷணீயேஷ்டியையே ப்ரதிதினம்செய்ய வேண்டும். அதாவது இரண்டாவது வருடம் முடிய 10 நாட்கள் பாக்கி இருக்கும் பொழுது தீக்ஷணீயேஷ்டியை முடித்து விடவேண்டும். அதற்குள் அபிஷேசநீய யாகத்தையும் முடித்து விடவேண்டும். தசபேய யாகம் 5 நாளில் முடிவடைகிறது. 5 நாட்கள் இரண்டாவது வருஷம் முடிய பாக்கி 'இருக்கிறது. சாத்ய தூத இஷ்டிகளை காலையில் செய்யவேணும். ப்ரயுஜாம் இஷ்டிகளை அபரான்ன காலத்தில் அனுஷ்டிக்கவேண்டும். ப்ரயுஜாம் இஷ்டி, ராஜஸூயம் ஆரம்பித்து 3 வது பால்குண மாஸத்தில் ஆரம்பமாகிறது. அதாவது சிசிர ருதுவில் ஆரம்பமாகிறது. 12 இஷ்டிகளை ஒவ்வொரு மாஸம் ஒவ்வொரு இஷ்டிகளாக செய்யவேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குருபஞ்சால தேச ராஜாக்கள் கிழக்கு திக்கை நோக்கி படையெடுத்து யவை முதலிய தான்யங்களை கப்பமாக ஸ்வீகரித்து வருகிறார்கள். இவைகள் எல்லாம் ப்ரயுஜாம் இஷ்டியின் பலன். மேலும் காலத்தில் மழை பெய்து தான்யங்கள் ஸம்ருத்தியாக விளைந்து, உழவர்களும், ப்ரஜைகளும் ஸந்தோஷமாக குருபஞ்சால தேசத்தில் வாழ்கிறார்கள். இவைகள் எல்லாம் ராஜஸூய யாக ப்ரயுஜாம் இஷ்டிகளின் மஹிமை. இதேபோல் ராஜஸூய யாகம் எல்லா ராஜாக்களும் செய்தால் எல்லா ராஜ்யமும் சுபிக்ஷமாக இருக்கும். 12 இஷ்டிகளை மாதம் ஒன்று வீதம் 12 மாதம் செய்ய வேணும் என்று ஒரு பக்ஷம். 12 மாதங்கள் நாம் ஜீவித்து இருப்போம் என்ற நிச்சயமில்லாததால் 6 இஷ்டிகள் முதல்நாள், 6 இஷ்டிகள் மறுநாள் என்று இரண்டு நாட்களில் முடித்துவிட வேண்டும் என்று மற்றொரு பக்ஷம்.

அநுவாகம்—5

इन्द्रस्यसुषुवाणस्य

இந்திரன் ஸோமலதையை பிழிந்து ரஸம் எடுக்கும் அவனுடைய இந்திரிய ஸாமர்த்தியம் 10 விதமாக பூமியில் விழுந்தது. இந்திரனின் வாயில் இருந்து 3 தடவை ஸாமர்த்தியம் வெளியே வந்தது (3 தரம் உமிழ்ந்தான்). 3 தரம் உமிழ்ந்தது 3 த்ரவியமாக ஆகிவிட்டது. முதலாவது பேரீச்சம் பழமாக ஆகியது. இரண்டாவது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இலந்தை பழமாக ஆகியது. மூன்றாவதாக உமிழ்ந்தது பெரிய இலந்தை பழமாக ஆகியது, ஆக இந்த மூன்றும் வாயில் இருந்து வந்தது. மூக்கில் இருந்து வந்த வீர்யம் சிங்கமாக ஆகியது. இரண்டு கண்களில் இருந்து வந்த வீர்யம் புலி யாக ஆகியது. இரண்டு காதுகளில் இருந்து வந்த வீர்யங்கள் ஓனாயாக ஆகியது. தலையின் மேல் உள்ள துவாரம் வழியாக வந்த வீர்யம் ஸோமலதையாக ஆகியது. 2 கீழ்துவாரம் வழி யாக வந்த வீர்யம் ஸுரை (மது) ஆகியது. 10 துவாரங்கள் வழியாக வந்தது 10 வீர்யங்கள், 8 த்ரவ்யங்கள் உண்டானது.

பேரீச்சை மாவு, இலந்தை மாவு, பெரிய இலந்தை மாவு, சிங்கத்தின் கேசம், புலியின் கேசம், ஓனாயின் கேசம், இவைகளை இந்த யாகத் துக்கு தயார் செய்ய வேணும். 3 கிரஹங்கள் ஸோமக்ரஹம், ஸுராக்கிரஹம், அச்வினி தேவ தைகள், ஸரஸ்வதி, ஸுத்ராமா தேவதைகளை உத்தேசித்து கிரஹிக்க வேணும். ஸௌத்ராமணி யாகம் என்ற பெயர் 10வதாக ஆகிறது. இவை களை சேகரிப்பதால் இந்திரனுக்கு நஷ்டமான 10 வீர்யங்களும் திரும்பி வந்துவிடுகிறது. யஜ மானனுக்கும் இந்திரிய வீர்யங்கள் உண்டாகின் றன.

அலியும், ஈயமும் ஸமம். அலி ஸ்திரியை விட உயர்ந்தவன். புருஷனைவிட தாழ்ந்தவன், ஆண்மை இல்லாததால். ஈயம் இரும்பைவிட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உயர்ந்தது. தங்கத்தைவிட தாழ்ந்தது. ஆதலால் ஈயமும் அலியும் ஒன்றுபட்ட தன்மை உள்ளது. ஈயத்தை அலியிடம் கொடுக்க வேணும். அலி புல்லுகளை அதாவது மது தயாரிக்க உதவுகின்ற புல்களை யஜமானனிடம் கொடுக்க வேணும். புல்லுகள் ஸுரா(மது)வைவிட உயர்ந்தது. ஸோம லதையைவிட தாழ்ந்தது. இதுவும் ஈயம் மாதிரி தான் உயர்ந்ததும் இல்லை தாழ்ந்ததும் இல்லை. ஈயத்தை கொடுத்து புல்களை விலைக்கு வாங்கி யது பொருத்தமே. ஸௌத்ராமணி யாகத்துக்கு வேண்டிய ஸோமரஸம் ஸுரா இவைகளை தயா ரிக்க வேணும். ஸுரையை பூமிக்குள் வைத்து பக்வம் செய்து தயார் செய்ய வேணும் என்று சொல்லப்பட்டுள்ளது.

சில தேவதைகள் பிரியத்தை உத்தேசித்து ஸுரை(கள்) தேவை. ஸுரா, ஸோமரஸம் இவை களை வடிகட்டி வைக்க வேணும். வெள்ளை நிற ஆட்டு மயிரை கொண்டு வஸ்திரம் மாதிரி செய்து வடிகட்ட வேணும். யஜமானன் அக்னிஷ்டோம யாகம் செய்யும் பொழுது ஸோமரஸ பானம் செய் கிருன். அப்பொழுது அவன் வாந்தி செய்திருந் தால் அவன் ஸௌத்ராமணி யாகம் செய்யும் பொழுது ஸாங்ஸோம: என்ற மந்திரத்தைச் சொல்லி வடிகட்ட வேணும். எவன் ஸோமரஸ பானம் செய்து ஜீரணித்தானோ, வாந்தி செய்யவில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

லையோ அவனுக்கு இந்த யாகத்தில் प्रत्यङ्सोमः என்ற மந்திரத்தைச் சொல்லி ஸோமரஸத்தை வடிகட்ட வேணும்.

அநுவாகம்—6

यत्त्रिषुयूपेष्वालभेत ।

ஸௌத்ராமணி யாகத்தில் ஆச்வின பசு. ஸாரஸ்வத பசு, ஐந்த்ர பசு என்று 3 பசு யாகம் இருக்கிறது. பசுக்களை கட்டுவதற்கு உள்ள மரத்துக்கு யூபம் என்று பெயர். 3 பசுக்களுக்கு 3 யூபம் நட்டு பசுக்களைக் கட்டக்கூடாது. ஒரே யூபத்தில் 3 பசுக்களையும் கட்டவேண்டும். பல யூபங்கள் வைத்தால் சத்ருக்கள் உண்டாவார்கள். ஒரு யூபம் வைத்தால் சத்ருக்கள் உண்டாக மாட்டார்கள். பசு யாகம் ஆனதும் புரோடாச ஹோமம் மற்ற யாகங்களில் உண்டு, இந்த யாகத்தில் இல்லை. அந்த ஸ்தானத்தில் ஸோம க்ரஹ ஸுராக்ரஹ ஹோமம் செய்யப்படுகிறது.

மற்ற யாகங்களில் ஸோமரஸத்தை ஹோமம் செய்த பிறகு, ருத்விக், யஜமானன் சாப்பிடுவார்கள். ஸௌத்ராமணி யாகத்தில் தனிப்பட்ட ஒரு ப்ராம்மணனை க்ரஹபானம் செய்ய காசை கொடுத்து நியமிக்க வேணும். ஸுராக்ரஹ பானம் செய்ய ஒரு ப்ராம்மணனும் வரவில்லையானால் அந்த ஸுரையை புற்றில் ஊத்தி விடவேணும், மற்ற யாகங்களில் பசு தேவதைகளும் புரோடாச

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவதைகளும் ஒன்றே. ஸௌத்ராமணி யாகத்தில் பசு தேவதைகள் வேறு, புரோடாச தேவதைகள் வேறு. மற்ற யாகங்களில் புரோடாச யாகத்துக்குப்பிறகு பசு அங்க ஹோமம். ஸௌத்ராமணி யாகத்தில் பசு அங்க ஹோமத்துக்கு பிறகு அநூயாஜ ஹோமத்துக்கு புரோடாச ஹோமம் செய்ய வேணும். தக்ஷிணையாக वडवा (படபா) என்கிற குதிரையை தக்ஷிணையாக கொடுக்க வேணும்: படபா என்ற பெண்குதிரை கழுதையுடன் சேர்த்து குதிரை அல்லது கோவேரி கழுதையையோ அல்லது இரண்டையுமோ பெற்றெடுக்கும். ஸௌத்ராமணி யாகத்தில் ஸுரா ஸோம ரஸம் கலந்து செய்யப்படும் யாகம். அதனால் படபா தக்ஷிணை கொடுப்பது பொருத்தம். ஸுரா ஹோமத்தை தக்ஷிணாக்னியில் ஹோமம் செய்ய வேணும். தங்க பாத்திரத்தில் சதச்சித்ரம் (பலத்வாரங்கள்) செய்து சததாரு शतधारा பாத்ரம் செய்து அதில் ஸுவர்ணத்தை போட்டு தக்ஷிணாக்னியின் மேலே பிடித்துக் கொண்டு ஹோமம் செய்ய வேணும். அத்வர்யூ, ஹோதா, ப்ரம்மா இம் மூன்று பேரும் உபஸ்தானம் செய்யவேண்டும். யாகத்தில் இந்த மூவரும் முக்யமானவர்கள்.

அநுவாகம்—7

अग्निष्टोममग्र आहरति ।

ராஜஸூய யாகம் ஆரம்பிக்கும் பொழுது பவித்ரம் என்கிற ஸோமயாகம் செய்ய வேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதன் பிறகு பல யாகங்களுக்கு பிறகு அபி ஷேசனீய ஸோமயாகம் செய்ய வேணும். இவை கள் முன்பே சொன்னதுதான். 3 பலமான ஸ்தோத்திரங்களும் 14 ஸ்தோமங்கள் செய்ய வேணும். வித்யாஸம் கூடாது. அபிஷேசனீய ஸோம யாகத்தை மூன்ருவது ஸம்ஸ்தை உக்திய ஸம்ஸ்தையாக செய்யவேணும். அதனுல் ப்ஜரா ஸம்ருத்தி ஏற்படும்.

அநுவாகம்—8

उपत्वाजामयोगिर:

மற்ற யாகங்களில் उपास्मैगायतानर: என்ற ருக்கு பஹிஷ்பவமான ஸ்தோத்திரம் ஆரம்பம். ஸௌத் ராமணி யாகத்தில் उपत्वाजामयोगिर: என்ற ருக் பஹிஷ்பவமான ஸ்தோத்ர ஆரம்பம். இந்த ருக்கில் வாயு, வாக்கு இரண்டையும் பேசுகிறது. உதரத் தில் இருந்து வாயு கிளம்பி வாக்குக்கு வந்து சப்தத்தை எழுப்புகிறது. அந்த சப்தமே ஸ்தான, கரண ஸம்பந்தத்தில் அதாவது நாக்கு, பற்கள், உதடு இவைகளின் ஸம்பந்தத்திஞல் வார்த்தை கள் உண்டாகின்றன. அதனுல் வாக்குதான் வாயு. ராஜாவுக்கு அபிஷேகம் ஆனதும் வாக் கிஞல்தான் எல்லாருக்கும் இவர்தான் ராஜா என்று சொல்லுகிருர்கள் அதனுல் இந்த யாகத் தில் வாயு, வாக்கு ஸம்பந்தமான மந்திரத்தை பஹிஷ்பவமான ஸ்தோத்திரத்தில் சொல்வது

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பொருத்தமே. இந்த அனுவாகத்தில் ஸ்தோத்திரங்கள், ருக்குகள் ஸாமாக்கள் இவைகளைப் பற்றியும், அவைகளின் பலனை பற்றியுமே பேசப்படுகிறது.

அனுவாகம்—9

इयं वैरजता ।

ராஜாவுக்கு அபிஷேகம் செய்யும் பொழுது கீழே வெள்ளியை வைத்து அதன்மேல் ராஜாவை உட்கார வைக்கவேணும். தலையில் தங்கத்தை வைத்து ராஜாவுக்கு அபிஷேகம் செய்யவேணும். வெள்ளியை பூமியாகவும், தங்கத்தை ஸ்வர்க்க லோகமாகவும பாவிக்கவேணும். அதனால் இரண்டு லோகாதிபதி ஆகிறான். வருண ராஜாவுக்கு அபிஷேகம் செய்யும் பொழுது அந்த ஜலம் வருணனின் இந்திரிய வீர்யத்துடன் கீழே விழுந்தது. அந்த வீர்யம் ஸுவர்ணமாக ஆனது. ஆதலால் ஸுவர்ணத்தை தலையில் வைப்பதால் அபிஷேக காலத்தில் இந்திரிய வீர்யம் கீழே விழுவதில்லை. தங்கம் தலையில் வைப்பது 100 என்கிற பரிமாணத்துடன் 100 மில்லிகிராம் அல்லது 100 கிராம் என்று 100 என்ற அளவுடன் இருக்க வேணும். 100 வயது வரை இந்திரிய ஸாமர்த்தியத்துடன் இருப்பான். ராஜா செய்கிற யாகமானதால் ஸுவர்ணம் அதிக அளவு வைக்கமுடியும். (ஹிரண்ய தானம் செய்தால் அபமிருத்யு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ந்நிவிருத்தி ஆகி ஆயுர்விருத்தி ஏற்படும்). ஹிரண்யம் தேஜஸ். பளபள என்று ஜ்வலிப்பதுதான் தேஜஸ். அதில் விழுந்த ஜலம் சரீரத்தில் பரவுகிறது. அதனால் சரீரம் தேஜஸ்ஸுடன் விளங்கும். அதனால்தான் ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இவைகளில் சலடையில் (தங்க மயமான) ஹிரண்யத்தை போட்டு அபிஷேகம் செய்கிறார்கள். ஹிரண்ய ஆபரணம் தரித்துக் கொண்டால் ஒரு அழகு உண்டாகிறது. அதற்காகவும் ஹிரண்யத்தை தலையில் வைத்து அபிஷேகம் செய்யவேணும்.

அநுவாகம்—10

अप्रतिष्टितोवा

இந்த அநுவாகத்தில் வ்யுஷ்டி த்விராத்ரம் என்ற இரண்டு ஸோமயாகம் செல்லப்படுகிறது. ராஜஸூய யாகம் செய்த ராஜா வ்யுஷ்டி த்விராத்ரம் என்கிற 2 ஸோம யாகத்தை அனுஷ்டிக்கவில்லை என்றால் அவனுக்கு பூலோகத்தில் ப்ரதிஷ்டை இருக்காது. தன்னுடைய ப்ரதிஷ்டைக்காக இந்த ஸோமயாகம் அவச்யம் செய்யவேணும். இந்த யாகங்களில் 720 ஸ்தோத்திரங்கள் உள்ளன. ஒரு வருஷத்தில் பகல் 360, அதே போல் ஒரு வருஷத்தில் ராத்ரி 360, ஆக 720 பகல் ராத்ரி. ஸ்தோத்திரங்களும் 720. அதனால் 720 பகல் ராத்ரி அதாவது ஒரு வருஷம் பூராவும் ப்ர

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திஷ்டை ஏற்படுகிறது. இரண்டு ஸோம யாகத்தில் முதல் ஸோமயாகம் அக்னிஷ்டோமமாகவும், இரண்டாவது ஸோமயாகம் அதிராத்ரமாகவும் செய்ய வேணும். பௌர்ணமி அன்று ஒரு யாகமும், கிருஷ்ண பக்ஷத்தில் ஒரு யாகமும் செய்ய வேணும். அதனால் 2 பக்ஷத்தில் செய்த பலன் கிடைக்கிறது மற்றொரு பக்ஷம் அமாவாஸ்யை அன்று ஒரு யாகமும் மறு ப்ரதமை அன்று ஒரு யாகமும் செய்ய வேணும், அமாவாசையுடன் ஒரு மாதம் முடிகிறது. ப்ரதமை அன்று வேறு மாதம் ஆரம்பமாகிறது. அதனால் 2 யாகத்தையும் வெவ்வேறு மாதத்தில் செய்ததாகவும் இரண்டு மாதம் அனுஷ்டித்த பலனும் கிடைக்கிறது.

முடிவான பக்ஷம் இப்பொழுது சொல்லப்படுகிறது. அதாவது ஜோதிஷ சாஸ்திரப்படி ஒரே பக்ஷத்தில் இரண்டு நாட்கள் புண்ய நாளாக எப்பொழுது வருகிறதோ அப்பொழுது 2 யாகத்தையும் அனுஷ்டிக்க வேண்டும். வெவ்வேறு பக்ஷம் என்றோ, வெவ்வேறு மாதம் என்றோ பார்க்க வேண்டாம் இதுதான் முடிவான பக்ஷம். மற்ற யாகங்களில் மூன்றாவது ஸவனத்தில் மட்டும் ஜகதீ சந்தஸ் மந்திரங்கள் சொல்வார்கள். அது பசு ப்ராப்திக்கு காரணமாகும். ஸௌத்ராமணி யாகத்தில் மூன்றாவது ஸவனத்தில் மட்டும் ஜகதீ சந்தஸ் செய்தால் போதாது. 3 ஸவனத்திலும் ஜகதீ சந்தஸ் மந்த்ரம் படிக்கவேணும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒன்ருவது ஸவனத்தில் காயத்ரீ சந்தஸ்ஸும் இரண்டாது ஸவனத்தில் திருஷ்டுப் சந்தஸும் மூன்ருவது ஸவனத்தில் ஜகதீ சந்தஸ்ஸும் படிக்கவேணும் என்று விதி. அதற்கு யுக்தியாக பரிஹாரம் சொல்லுகிறது வேதம். வைகானஸ ஸாமகானம் செய்தால் மூன்று ஸவனத்திலும் ஜகதி சந்தஸ் மந்தரம் படித்ததாக ஆகிறது. அதனால் பசு ப்ராப்தி யஜமானனுக்கு.

இந்த இரண்டு ஸோம யாகத்துக்கும் வ்யுஷ்டி த்விராத்ரம் என்று பெயர். உஷத்காலம் எப்படி ப்ரஸன்னமாக இருக்கிறதோ அதுபோல் இந்த யாகம் புத்தியை ப்ரகாசமுள்ளதாக செய்கிறது. அறியாமையை போக்குகிறது. அக்னி ஸர்வமுக ரூபம், அக்னிஷ்டோம யாகத்தில் கடைசியில் ஸ்தோத்திரம் அக்னியைப் பற்றியது. ஆதலால் எல்லா தேவதைகளிடமும் ப்ரதிஷ்டையை அடைகிருன்.

முதலாவது அஷ்டகத்தில் ஆதானவிதி, ஆதான மந்திரங்கள். கவாமயன விதி, அதன் பிரகாரம் புநராதானம் வாஜபேய மந்த்ரம், ப்ராம் மணம், அக்னிஹோத்ர விஷயமான சில ப்ராயச் சித்தங்கள், சாதுர்மாஸ்ய யாகங்கள், ராஜஸூய யாகம். ராஜஸூய யாகத்தில் உள்ள பல ஸோம யாகங்கள், பல பசுயாகங்கள் பல இஷ்டிகள், ஸௌத்ராமணி யாகம் இவைகள் சொல்லப்பட் டுள்ளன.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

1. ஸ்துதிகுஸுமாஞ்ஜலி:
2. க்ஷேத்திராடனம் பாரதம்
3. ஸீலாவிபூதிகள் மூன்று பாகங்கள்
4. விவாஹம் 3 பாகங்கள்
5. கிருஷ்ண யஜுர்வேதசாரம் 16 பாகங்கள்
6. கபர்திகாரிகை
7. ஸ்ரீ மஹாகணபதி ஹோமம்
8. மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்
9. புருஷ ஸூக்த ஹோமம்
10. ஸ்ரீ மஹாஸுதர்சன ஹோமம்
11. ஸ்ரீ ஸூக்த ஹோமம்
12. ஸ்ரீ சண்டி ஹோமம்
13. ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்கள் சுருக்கம்
14. ஸ்ரீருத்திரம் ஜடை
15. மந்த்ரப்ரச்னம்
16. ஸ்ரீருத்திரம் சமகம் கனம்
17. க்ருஷ்ண யஜுர்வேத ஆபஸ்தம்ப ஸூத்ர ஸம்ஸ்கார 47 புத்தகங்கள்

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்கும் இடம் :

அ. சுப்பராமன்,

"மஹரிஷி கார்டன்"

நெ. 18A/9, ஐந்தாவது கிராஸ் தெரு,

சி.ஐ.டி. காலனி, மயிலாப்பூர்,

சென்னை — 600 004.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi